
# பார்வை



இதழ் - 9

வருடாந்த சஞ்சிகை

2020

கல்விப் பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

நாவல

# பார்வை

இதழ்- 09
வருடாந்த கல்விச் சஞ்சிகை
2020

கல்விப் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பார்வை (இதழ்- 09)

முதற் பதிப்பு - 2020 மாசி
© சகல உரிமைகளும் வெளியீட்டாளர்களுக்கு

வெளியீடு: கல்விப் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல – நுகேகொட

PAARVAI – (Volume 09)

First Edition – February 2020
© All rights are reserved

**Chief Editor**
Dr. F.M.Nawastheen

**Asst. Editor**
Dr. T.Mukunthan

**Review Committee**
Prof.P.C.P.Jaufar
Prof. (Mrs).S.Kugamoorthy
Dr. F.M.Nawastheen
Dr.T.Mukunthan
Mr.T.Thanaraj (Retired professor)
Dr. M.Karunanithy (Retired Professor)

Published by: Faculty of Education,
The Open University of Sri Lanka,
Nawala, Nugegoda
Sri Lanka.

**ISSN : 2012-8134**

# பார்வை
## வருடாந்த கல்விச் சஞ்சிகை

PAARVAI | இதழ்-9 | පාර්වෛ

**ஆலோசனை**
பேராசிரியர் எஸ்.பி. கருணாநாயக்க

**பிரதம பதிப்பாசிரியர்**
கலாநிதி ப.மு.நவாஸ்தீன்

**உதவிப் பதிப்பாசிரியர்**
கலாநிதி தே.முகுந்தன்

**கட்டுரை மீளாய்வுக் குழு**
பேராசிரியர் பி. பக்கீர் ஜவ்பர்
பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி
கலாநிதி ப.மு.நவாஸ்தீன்
கலாநிதி தே.முகுந்தன்
தை. தனராஜ் (ஓய்வுநிலைப் பேராசிரியர்)
கலாநிதி. மா.கருணாநிதி (ஓய்வுநிலைப் பேராசிரியர்)

**தொடர்புகளுக்கு**

பிரதம பதிப்பாசிரியர்
'பார்வை' வருடாந்த கல்விச் சஞ்சிகை
கல்விப் பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
நாவல, நுகேகொட.
தொ.பே.இல: 011 2881425
தொலைநகல்: 011 2768055

**ISSN : 2012-8134**

## பிரதம பதிப்பாசிரியரிடமிருந்து...

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கல்விப்பீடம் நாடளாவிய ரீதியில் நான்கு தசாப்தங்களாக ஆசிரிய வாண்மைசார் விருத்திக்கான சேவையினை ஆற்றிவருகின்ற பெருமிதத்தோடு தொடர்ந்தும் அதன் வளர்ச்சிப்பாதையில் வீறுநடை போட்டுச் செல்கின்றது. இதன் ஒரு மைல்கல்லாக 2010ஆம் ஆண்டிலிருந்து "பார்வை" எனும் கல்விச்சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றது. இச்சஞ்சிகையானது ஆசிரியர்களது வாண்மைசார் விருத்திக்குத் தேவையான இற்றைப்படுத்தப்பட்ட கல்விசார் தகவல்களை ஆசிரியர் கல்வியோடு தொடர்புபடுத்தி, பல்வேறுபட்ட பார்வைக் கோணங்களில் முன்வைத்து வருகின்றது. கல்விச்சஞ்சிகையானது தமிழில் தொடர்ச்சியாக வெளிவருவது என்பது ஒரு சவாலான விடயமே! இவ்வருடமும், பல்வேறு கருப்பொருள்களில் ஒன்பது வகையான கல்வி கட்டுரைகளை சுமந்த வண்ணம் "பார்வை" சஞ்சிகையின் ஒன்பதாவது இதழை வெளியிடுவதில் பேருவகை அடைகிறோம். இவ்விதழில் சமகாலத்தில் முக்கியத்துவம் வாய்ந்த கல்வியின் பல்வேறு துறைசார் கட்டுரைகள், குறிப்பாக, கல்வி உளவியல், ஆசிரியர் கல்வி, முன்பிள்ளைப்பருவ கல்வி, கல்வி முகாமைத்துவம் ஆகியவற்றில் சிறந்த கட்டுரைகள் இடம்பிடித்துள்ளன. கற்றலை மேம்படுத்துவதில் பெற்றோரின் வகிபாகம், ஆசிரியர்களுக்கான வாண்மைச் சட்டகம், ஆசிரியர்களுக்கு தேவையான அறிவுகள், முன்பிள்ளைக் கல்வி முறைமைகள், பரீட்சையும் உளநெருக்கடியும், கல்வி சமூக மாற்றத்தில் கொண்டுள்ள செல்வாக்கு, மற்றும் விசேட தேவைகள் சார் கல்வி தொடர்பாக எழுதப்படுட்டுள்ள கட்டுரைகள் உங்கள் கவனத்தை ஈர்க்கும் என்பதில் ஐயமில்லை.

பார்வை இதழின் வெளியீட்டிற்கு ஊக்கமளித்ததுடன் அணிந்துரையினை வழங்கிச் சிறப்பித்த பீடாதிபதி பேராசிரியர் எஸ்.பி. சிரோணிக்கா கருணாநாயக்க அவர்களுக்கும் கல்விப்பீடத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியினர் கட்டுரையாளர்கள், கட்டுரை மீளாய்வுக் குழு மற்றும் இச்சஞ்சிகையை அழகாக அச்சிட்டு வெளியிட்ட இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் அச்சகப்பிரிவினர் ஆகிய அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கலாநிதி ப.மு.நவாஸ்தீன்**
**பிரதம பதிப்பாசிரியர்**

# வாழ்த்துரை

மாணவர்களிடத்தே பொதிந்திருக்கின்ற பல்வேறு ஆற்றல்கள், கற்றலுக்கான தேவைகள், கற்றலுக்கான விருப்பம் மற்றும் அவர்களது கற்றல் பாங்குகள் போன்ற பல விடயங்களை கருத்தில் கொண்டு மாணவர்களின் பல்வகைமைக்கேற்பவும் இருபத்தியோராம் நூற்றாண்டில் வேலை உலகு வேண்டி நிற்கும் உயர் அறிகைசார் ஆற்றல்களை விருத்தி செய்து சமூகத்தில் முகிழ்ந்து எழுகின்ற புதிய சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்கக் கூடிய வகையில் மாணவர்களை உருவாக்குவதும் நவீன ஆசிரியர்களின் தார்மீகக் கடமையாக உள்ளது. அறிவினை இற்றைப்படுத்தம் வகையில் புதிய விடயங்களின்பால் கவனம் செலுத்தி வாசிப்பில் ஈடுபடுகின்ற பொழுதே இச்சவால்களுக்கு ஏற்ற வகையில் எவ்வாறு மாணவர் சமூகத்தை உருவாக்க வேண்டுமென்ற ஒரு பரந்த அறிவினை ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ள முடியுமாக இருக்கும்.

இந்த வகையில் கல்விப் பீடத்தினால் வெளியிடப்படும் 2020ஆம் ஆண்டிற்கான "பார்வை" தனது கட்டுரைகளை கல்வி உளவியல், ஆசிரியர் கல்வி, முன்பிள்ளை பருவ கல்வி, கல்வி முகாமைத்துவம், விசேட தேவைகள் சார் கல்வி போன்ற எண்ணக்கருக்களோடு தொடர்புபட்ட வகையில் கட்டுரைகளை முன்வைத்துள்ளமை பாராட்டத்தக்கது என்பதுடன் இச்சஞ்சிகைஇ ஆசிரியர் சமூகத்துக்கு மிகப் பயனுடையதாக இருக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். தமது பல்வேறு கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் துடிப்புடன் செயற்பட்டு அர்ப்பணிப்புடன் கருமமாற்றிய பிரதம பதிப்பாசிரியர், ஆசிரிய குழுவினர் மற்றும் கட்டுரையாசிரியர்கள் ஆகியோரை மனநிறைவுடன் பாராட்டுகிறேன்.

எமது கல்விப்பீடத்தை அலங்கரிக்கும் அணிகலன்களுள் ஒன்றாகிய "பார்வை"தரத்திலும் உள்ளடக்கத்திலும் மேன்மேலும் மெருகூட்டப்பட்டு தனது பயணத்தை தொடர வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

**பேராசிரியர் எஸ்.பி. கருணாநாயக்க**

பீடாதிபதி

கல்விப்பீடம்

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

06.02.2020

# பார்வையின் உள்ளே ...


பக்கம்

பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்த பெற்றோரின் வகிபங்கு 01

The role of parents in improving children's learning

பேராசிரியர் பக்கீர் ஜஃபார்

இலங்கைச் சூழ்லமைவில் நவீன பூகோளகத்திற்குஆசிரியர்தளை தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகத்ததை நடைமுறைப்படுத்தல் 12

Implementation of Global – ready Teacher Competency Framework in the Sri Lankan Context

பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி

ஆசிரியர்களுக்கான தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு 22

Technological Pedagogical Content Knowledge for Teachers

கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன்

உலகளாவிய ரீதியில் காணப்படும் முன்பிள்ளைப் பருவக் கல்வி முறைமைகள் 28

Early childhood education systems around the world

கலாநிதி தேவராசா முகுந்தன்

இலங்கைப் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சை தொடர்பான உளநெருக்கீடு 36

Examination related mental stress faced by students of Sri Lanka

செல்வி. ராஜினி மங்களேஸ்வரசர்மா

மென் திறன்களும் அதன் முக்கியத்துவமும் 44

Soft Skills and its importance

திரு. க. ஞானரெத்தினம்

கல்வியும் சமூக மாற்றமும் 55

Education & Social Change

திரு. பொன். இராமதாஸ்

தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் 67

Individualized Education Program - IEP

திரு. க. கேதீஸ்வரன்

உட்படுத்துகைக் கல்வியும் ஆசிரியர் வகிபாகமும் 76

Inclusive Education and the role of Teacher

திரு. ர. விவேகானந்தராசா

# பிள்ளைகளின் கற்றலை மேம்படுத்த பெற்றோரின் வகிபங்கு

பேராசிரியர் பக்கீர் ஜஃபார்*

## அறிமுகம்

பிள்ளையொன்று எப்போது கற்கத் தொடங்குகின்றது? என்ற வினாவிற்கு தாயின் கருவறையிலேயே இப்பணி தொடங்கிவிடுவதாக அநேக கல்வியியலாளர்கள் பதிலளிக்கின்றனர். தமக்குப் பெயர் சொல்ல எதிர்காலத்தில் குழந்தை ஒன்று தேவை என அவாவுறும் பெற்றோர்கள் அதற்கான முறையான திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். விலங்குகள் குட்டி ஈனுவது போன்று குழந்தைகளைப் பெற்று அதன்பாட்டில் வளரவிடும் பெற்றோர்கள் தமக்குத்தாமே தீங்கு செய்வதுடன் நாட்டுக்கும் தான் சார்ந்த சமூகத்திற்கும் தீங்கிழைத்துக்கொள்கின்றனர். வளர்ந்த விருத்தியடைந்த நாடுகளில் மக்கள் தங்கள் எதிர்கால சந்ததியினரை உருவாக்கும் பணிக்கு அந்நாட்டு அரசாங்கம் கணிசமான பங்பளிப்புகளைச் செய்கின்றன. இதைத்தவிர அரச சார்பற்ற பல நிறுவனங்களும் தொண்டு நிறுவனங்களும் கரிசனையுடன் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு, அவர்கள் வாழும் நாட்டுக்காக அர்த்தபுஷ்டியுடன் உழைக்கக் கூடிய மனிதவள மேம்பாட்டில் ஈடுபாட்டினை வெளிப்படுத்துகின்றன. ஒரு நாட்டை உலகளாவிய ரீதியில் வல்லரசாக்கும் அதீத பங்களிப்பு அந்நாட்டு பிரஜைகளின் கைகளில் பெருமளவு தங்கியுள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். அதற்கான பிரஜைகளுக்கான வலுவூட்டல் செயற்பாட்டை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு அந்நாட்டின் அரசாங்கத்திற்கு உண்டு. இவ்வகையில் வீடும் பாடசாலையும் தனித்தனியாகவும், ஒருங்கே இணைந்தும் பணியாற்றுவதே மிகவும் அவசியமாகும்.

## குழந்தையொன்றை பெறுவதற்கு முன் பெற்றோரின் வகிபங்கு

குழந்தையொன்றை பெறுவதற்கு முன்பே இறையாசியை பெற்ற நற்குழந்தையொன்றை பெற வேண்டி பெற்றோர்கள் திட்டமிட வேண்டியுள்ளது. இவ்வகையில் தமது உழைப்பு இறைவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகையில் அமைந்துள்ளதா என்பதை அவர்கள் உறுதி செய்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

---

*பேராசிரியர்,
இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
Email: pcjau@ou.ac.lk

நாட்டுச்சட்டத்திற்கும் இறைகட்டளைக்கும் மாறு செய்து அதன் மூலம் பொருளீட்டி அவற்றை உட்கொண்டு அதன் பேறாக தகப்பனினதும் தாயினதும் உடலில் ஊற்றெடுக்கும் பிழையான குருதியில் இருந்து குழந்தை உருவாகுமாக இருந்தால் அக்குழந்தையின் வாழ்க்கையில் நன் நடத்தைகளை எம்மால் எதிர் பார்க்க முடியுமா? அதன் குருதியை நஞ்சாக்கிய கடும் குற்றம் பெற்றோர்களையே சாரும்.

குழந்தை கருவறையில் இருக்கும் போது அதன் உடலுறுப்புக்கள் பூரண வளர்ச்சி பெறுவதற்கான ஊட்டச்சத்து தாயின் மூலமாகவே பெற்றுக்கொள்ளப்படுகின்றது. தாயின் உணவு முறை முன்பு சொன்னது போன்று முறையற்றதாக அமையுமானால் குழந்தையின் கருவளர்ச்சியின் போது எதிர் மறையான குணப்பண்புகளுடன் குழந்தையின் வளர்ச்சி இடம்பெற அது மீண்டும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது. அதற்கும் அப்பால் தாய் உட்கொள்ளும் உணவில் காணப்படும் ஏனைய நச்சுத்தன்மைகளும் குழந்தையை பாதிக்கின்றது. இன்று கடைகளிலும், சுப்பர் மார்க்கட்களிலும் கிடைக்கும் உணவுவகைகள் பல்வேறு விதமாக நஞ்சூட்டப்படுகின்றன. காய்கறிகள்,அரிசி போன்றவை களைகொல்லி, பூச்சிநாசினி போன்ற இரசாயன பொருட்களாலும் அவை நீண்டகாலம் பழுதுபடாமல் வைத்திருக்க வேண்டி அவைகளின் மீது விசிறப்படும் இரசாயனங்களாலும் மாசுபடுத்தப்படுகின்றன. கோழிஇறைச்சி போன்றன குறைந்த காலத்தில் கூடிய சதை வளர்ச்சிக்காக அவற்றிற்கு போடப்படும் ஓமோன் ஊசிகளினால் பாதிப்புக்குள்ளாகின்றன. மீன், இறைச்சி போன்றன நீண்ட நாள் குளிரூட்டிகளில் வைக்கப்பட்டும் இரசாயனப்பொருட்களை சேர்த்தும் பாதிப்புக்குள்ளாகின்றன. பழவகைகள் செயற்கை முறையில் மனிதர்களின் உடலுக்கு ஊறுவிளைவிக்கக்கூடிய வகையில் பழுக்க வைக்கப்பட்டு சந்தைக்கு வருகின்றன. இவ்வாறான உணவுவகைகளை உண்ணும் தாயின் வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சி எதிரான பாதிப்புக்குள்ளாகின்றது.

மேலும், இன்று பரவலாக ''குளுக்கோமோட்டோ'' என்னும் சுவையூட்டி உணவகங்களிலும், விரைவுணவு வகைகளிலும் பாவிக்கப்படுகிறது. இதை உட்கொள்ளும் தாய்மார்களின் கருவிலுள்ள குழந்தைகளின் மூளை வளர்ச்சியில் எதிர் மறையான தாக்கம் ஏற்பட்டு பிற்காலத்தின் ''கற்றல் இடர்பாடு'' எனும் குறைபாடு பிள்ளைக்கு ஏற்பட வாய்ப்புள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இதே வகையான தாக்கத்தை ''செயற்கை நிறமூட்டிகள்'' ஏற்படுத்துகின்றன. கடைகளில் விற்கப்படும் சர்பத், குளிர்பானவகைகள், ஜேம் வகைகளில் செயற்கை நிறமூட்டிகள் மிகவும் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கின்றோம். அத்துடன் கருவறையில் குழந்தை இருக்கும் போதே கேட்கும் சக்தியும் விருத்தியடைகின்றது. தாய் பேசும் பேச்சுக்களை குழந்தை கேட்கின்றது. தாயின் உளநிலையும் குழந்தையை பாதிக்கின்றது. தாயின் உடல், உள ஆரோக்கிய நிலையில் குடும்பம் கணிசமான கரிசனை செலுத்த வேண்டும். தாயின் எண்ணங்கள், மனவெழுச்சிகள் நேரானவகையாக இருத்தல் வேண்டும். பொய், புறம், கோள், அவதூறு, படுதூறு போன்ற பேச்சினால் ஏற்படும் பாவங்களை விட்டும் தாய் பேணுதலாக இருக்க வேண்டியது

குழந்தையின் ஆரோக்கிய வளர்சிக்கு மிக முக்கியம். தாயின் புகைப்பாவனை, போதைப் பொருள் பாவணை என்பன நிலைமையை இன்னும் மோசமாக்கும். எனவே தாய்மார்களும் குடும்பமும் இவ் விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்.

## குழந்தையின் பிறப்பின் போதும் முதல் ஆறு வருடங்களும்

பலருக்கு சுகப்பிரவசம் மூலமாக குழந்தை கிடைக்கின்றது. வேறுசிலருக்கு தாயின் இடுப்பு எலும்புகள் போதிய அளவு நெகிழ்ந்து கொடுக்காமையினால் கருவிகளைப் பயன்படுத்தி குழந்தையை வெளியில் எடுக்க வேண்டிய நிலைமை உண்டாகின்றது. சில வேளைகளில் தலைப்பகுதியில் உள்ள முக்கிய நரம்புகள் கருவிகளின் அழுத்தங்களால் பாதிப்படைந்து, தொடர்ந்து குழந்தையின் எதிர் கால நடத்தைகளிலும் கற்றலிலும் எதிர் மறையான விளைவுகள் உண்டாக வாய்ப்பு உண்டாகின்றது.

பிறந்த குழந்தைக்கு ‘உட்கவர் மனம்’ ஆற்றல் மிக்கதாக இருக்கும். குழந்தைகளின் கவனம் சுற்றாடலில் செலுத்தப்பட்டு பல்வேறு நிகழ்வுகளையும் வேகமாக உள்வாங்கத் தொடங்கும். குறிப்பாக சூழலில் பேசும் மொழியை குழந்தை கேட்கின்றது. இதைப் பெற்றோர் கவனத்தில் எடுத்து குழந்தை வாழும் சூழலில் பொய், புறம், கோள், அவதூறு, படுதூறு, சுடுசொற்கள், கடினவார்த்தைகள் போன்றவற்றை பேசாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளவேண்டும். முதல் ஆறு வருடங்களுக்குள் சூழலில் பேசப்படும் மொழி இலகுவாக பிள்ளையினால் கிரகிக்கப்படுகின்றது. பல மொழிகளையும் உட்கவர்ந்து ஆறு வயதளவில் அம்மொழிகளை பிள்ளைகள் சர்வசாதாரணமாக பயன்படுத்துவதை காணலாம் குழந்தைகளுக்கு மொழியாற்றலை விருத்தி செய்ய நாடும் பெற்றோர் இக்கால கட்டத்தை வெற்றிகரமாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஒருவனின் வாழ்க்கைப்பாணி முதல் ஆறு (06) வருடகாலங்களில் தீர்மானிக்கப்படுவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். அதாவது இக்காலகட்டத்தில் மொழியாற்றல் மட்டுமன்றி பல்வேறு நடத்தைப்பாங்குகளையும் பிள்ளை உள்வாங்குகின்றான். அவனது மனப்பாங்கு, விழுமியங்கள் என்பனவும் கட்டியெழுப்பப்படுகின்றன. இக்கால கட்டம் குழந்தையின் வாழ்க்கையில் மிகக்கூடிய கவனம் எடுத்து அவனைப் பக்குவப்படுத்த பெற்றோர் பிரயோசனைப்படுத்தும் ஒன்றாக இருப்பதால், பிள்ளையின் சமநிலை ஆளுமை வளர்ச்சிக்கேற்ற வகையில் சூழல் வடிவமைக்கப்படல் வேண்டும். முடியுமானவரை கல்வியில் நிபுணர்கள், உளவியலாளர்களின் உதவியை பெற்றோர் பெற்றுக்கொள்வது மிகவும் நல்லது. மேலும், பல்வேறு முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை இக்கால கட்டத்தினுள் மேற்கொள்வதன் மூலம், பிற்காலத்தில் பிள்ளையின் ஆற்றல் செயன்முறையில் ஏற்படக் கூடிய சாத்தியமான பல்வேறு தோல்விகளை முன் கூட்டியே தடுத்துக் கொள்ள முடியும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அமெரிக்காவில் அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் பல அரச நிதியுதவியுடன் பல்வேறு செயற்றிட்டங்களை பெற்றோருக்காக மேற்கொள்ளும் நடைமுறை இருப்பதைப்பார்க்கின்றோம். துரதிஸ்டவசமாக நமது நாட்டில் இம் முக்கிய ஆறு வருடங்கள் கழிந்த பின்புதான் அரச பாடசாலைகளில் முறைமைசார் கல்விக்காக

பிள்ளைகள் சேர்க்கப்படுகின்றனர். அதற்கு முன் 3, 4 வயதுகளில் இடம்பெறும் முன்பள்ளி கற்கை நிலையங்கள் பற்றியும் அரசு அதிக அக்கறை செலுத்துவதில்லை. இதனால் பல முன்பள்ளி தனியார் நிறுவனங்கள் உரிய தொழில்வாண்மையற்ற ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படும் சூழ்நிலை நமது நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது கவலை தருவதாகும்.

## பாடசாலையில் பிள்ளை கற்கத் தொடங்கியதும் பெற்றோர் எவ்வாறு உதவலாம்?

பிள்ளையின் கல்வி வீட்டில் எவ்வாறு தொடங்குகின்றது. எனப் பார்த்தோம். பிள்ளையின் கல்வி சிறப்புற அமையவேண்டுமானால் பிள்ளை பெற்றோரினால் ஊக்கப்படுத்தப்படல் மிக அவசியமானதாகும். பெற்றோரின் பங்களிப்பு வீட்டில் மட்டுமல்ல பாடசாலையிலும் எதிர் பார்க்கப்படுகின்றது. அந்தவகையில் பெற்றோரின் சாத்தியமான பங்களிப்புக்கள் இருபது உபதலைப்புக்களில் இங்கு விளக்கப்படுகின்றன.

### 1. முன்மாதிரியாக பெற்றோர் நடந்து கொள்ளல்

பெற்றோரே பிள்ளைக்கு முதலாவது ஆசிரியராவார். பிள்ளையுடன் நட்புறவுடன் பெற்றோர் பழகி அவர்களின் நடத்தைகளை நெறிப்படுத்த வேண்டும். உரிய நேரங்களில் தேவையான நினைவூட்டல்களை மேற்கொண்டு போதிய வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். பிள்ளைகள் பெற்றோரை தமது வாழ்க்கையின் ''கதாநாயகர்''களாகக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருப்பதால் எல்லா வகையிலும் பிள்ளைக்குத் தேவையான முன்னுதாரணங்களை தனது நடவடிக்கைகள் மூலம் வெளிக்காட்ட வேண்டும். பிள்ளை நேரத்துடன் துயில் எழும்ப வேண்டுமாயின் பெற்றோர் நேரத்துடன் துயில் எழுதல் வேண்டும். கடவுள் வணக்கம், உண்மை பேசுதல், சமூகம் அங்கீகரிக்கும் நடத்தைகளை வெளிக்காட்டல், புகை மற்றும் போதைப்பொருட்களை தவிர்த்தல், சுத்தமாக இருத்தல், தினந்தோறும் கற்றல் புதிய நூல்களை வாசித்தல் என்று எல்லாவற்றிலும் பிள்ளைக்கு முன்னுதாரணமாக பெற்றோர்கள் நடந்து கொள்வதன் மூலம் பிள்ளை நன்நடத்தைகளை உள்வாங்கவும், அவைகளை பெறுமதியுள்ளவையா மதிப்பிட்டு எல்லா நிலமைகளிலும் பின்பற்றவும் வழியேற்படும். பெற்றோர் பிழையாக நடந்தால் பிள்ளையும் பிழையாக நடப்பான். பெற்றோர் சிறுகளவுகள் செய்தால் பிள்ளை பெரும் களவுகள் செய்வான். பெற்றோர் தங்கள் பெற்றோரை கண்ணியப்படுத்தினாற்றான் பிள்ளைகள் தங்களைக் கண்ணியப்படுத்தி சொற்கேட்கும் பிள்ளையாக நடப்பான் என்பதை மனதிற்கொள்ள வேண்டும்.

### 2. பிள்ளையுடன் சேர்ந்து வாசித்தல்

பிள்ளை வீட்டில் கற்றலில் ஈடுபடும்போது பெற்றோரும் அவர்களுடன் இணைந்து அனுசரணையாக செயலாற்றல் வேண்டும். பிள்ளை வாசிக்கப் பழகும் காலகட்டத்தில் பிள்ளையுடன் சேர்ந்து அவர்களும் வாசிக்க வேண்டும் அண்மையிலுள்ள நூலகத்திற்கு அழைத்துச் சென்று அவர்கள் வாசிப்பதற்கு உகந்த சந்தர்ப்பங்களை ஆக்கிக் கொடுக்க

வேண்டும். பெற்றோரும் தம்முடன் இணைந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பிள்ளைகளும் உற்சாகத்துடன் கற்கின்றார்கள்.

## 3. பிள்ளையின் நடவடிக்கைகளை கண்காணித்தல்

வீட்டிலும் பாடசாலையிலும் பிள்ளையின் நடவடிக்கைகளில் பெற்றோரின் கவனம் இருத்தல் அவசியமாகும். அவர்கள் உதவி தேவை என்று உணரும் சந்தர்ப்பங்களில் பெற்றோரின் உதவி ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்களுக்கு உதவி தேவைப்படுகின்றது என்று பெற்றோர் உணரும் போதும் உதவி செய்ய ஆயத்தமாக இருக்க வேண்டும். அவர்களில் அசாதாரண நடத்தைகள் வெளிக்காட்டபடுமானால் உடனடியாக திருத்துதல் வேண்டும். இவ்விடயத்தில் காலதாமதம் செய்யக் கூடாது. அவர்களின் செயற்பாடுகள் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்படுவதற்கு பெற்றோரின் உதவி அடிக்கடி தேவைப்படும்.

## 4. அளவுக்கு மீறிய திட்டமிடலை தவிர்த்தல்

பிள்ளைகள் அண்ணளவாக அரை நாளை பாடசாலையில் கழித்து விட்டு வீடு திரும்புகின்றனர். இந்த நிலமையில் அவர்களின் வீட்டிலேயே செய்ய வேண்டிய கற்றலையும் வீட்டு வேலைகளையும் சரியான முறையில் திட்டமிட்டு செய்வதற்கு பெற்றோர் உதவி செய்தல் வேண்டும். இதனால் மேலதிக வேலைச் சுமையினால் அவர்கள் களைப்படைந்து கற்றலில் வெறுப்பு ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம். இருக்கும் நேரத்தை பாடத்திற்கும் விளையாட்டுக்கும் ஓய்வுக்கும் தூக்கத்துக்கும் என சமனிலை பேணத்தக்கவாறு பகிர்ந்து கொள்ளல் இங்கு தேவைப்படுகின்றது. நேரம் என்பது போனால் திரும்பி வராத இறைவனால் அளிக்கப்பட்ட ‘‘வளம்’’ என்பதை மனதில் கொள்ள வேண்டும். நேரத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துவதுடன் நேர விரயத்தைத் தவிர்க்கவும் வேண்டும்.

## 5. மகிழ்ச்சிகரமான சூழலை ஏற்படுத்தல்

வீட்டில் அமைதியான, மகிழ்ச்சியான சூழல் நிலவுதல் பிள்ளையின் கற்றலுக்கு அவசியமானதொரு தேவையாகும். பிள்ளையின் முன்னிலையில் பெற்றோர்கள் குடும்ப பிரச்சினைகளை கலந்துரையாடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும். கணவன் - மனைவி சண்டை, அயல் வீட்டாருடன் சண்டை, சகோதரர்களுடைய பிரச்சனை என்றவாறு தேவையற்ற வகையில் எதிரான மனவெழுச்சிச் சூழல் வீட்டில் ஏற்படுவது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். மாறாக, நேரான மனவெழுச்சிச் சூழல் வீட்டில் பேணப்படல் வேண்டும்.

## 6. ஆக்கபூர்வமான விமர்சனங்களை வழங்கல்

பிள்ளையின் செயலாற்றுகை திருப்தியளிக்கவில்லையெனில் அதன் ஆரம்ப நிலையிலேயே உடனடியாக திருத்தியமைத்தல் வேண்டும். அவர்களின் மனங்களை கடின வார்த்தைகளாலும் சொற்களாலும் உடைத்து சுக்குநூறாக்க வேண்டாம்.

பெற்றோர்கள் மிகவும் பொறுமையாக இருந்து பிள்ளைகளின் செயலாற்றுகை சம்பந்தமான ஆக்க பூர்வமான விமர்சனங்களை முன் வைத்தல் வேண்டும். அவர்கள் சரி - பிழையை உணரச் செய்தல் முக்கியமாகும். இவ்விடத்தில் அவர்கள் மீது அடிக்கடி குற்றம் சுமத்துவதை தவிர்த்தல் வேண்டும்.

## 7. வீட்டு ஒப்படைகளில் உதவி செய்தல்

பாடசாலைக்கற்றல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக பிள்ளைகள் செய்து வரவேண்டி ஒப்படைகள் வழங்கப்படுகின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் பிள்ளைகளுக்காக வேண்டி பெற்றோர்கள் அவ்வொப்படைகளை பாரமெடுத்து செய்து பிள்ளைகளிடம் கொடுத்து அனுப்பக்கூடாது. இத்தகைய ஒப்படைகளுக்கு பிள்ளை பெறும் புள்ளிகள் பெற்றோருக்கானது ஒழிய பிள்ளைகளுக்கானது அல்ல. மாறாக பிள்ளையோடு சேர்ந்து பிள்ளைக்கு முதன்மை அளித்து ஒப்படைகளைச் செய்யலாம். அவர்களுக்குத் தேவையான குறிகளை (Tips) வழங்கலாம் வழிகாட்டல்களை வழங்கலாம். ஆனால், ஒப்படை பிள்ளையினால் செய்யப்பட்டதாகவும் அவ்வொப்படையைச் செய்வதினூடாக எதிர்பார்க்கப்பட்ட கற்றல் பிள்ளையில் ஏற்பட வசதிகள் பெற்றோரினால் செய்யப்பட்டதாகவும் அமைதல் வேண்டும், ஒப்படைகளினால் பெறப்படும் புள்ளிகளை விடவும் ஒப்படை செய்வதினால் ஏற்படும் கற்றலும் அதன் பேறான ஆற்றலும் நடத்தை மாற்றமும் மிக முக்கியமானவை. கற்றல் செயன்முறையில் இறுதி உற்பத்தியை விட, அதற்காக மேற்கொள்ளப்பட்ட கற்றல் செயன் முறைக்கு கல்வியிலாளர்கள் கூடிய முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

## 8. சோதனைகளுக்காக ஆயத்தப்படுத்துதல்

பொதுவாக பரீட்சைகள் நெருங்கி விட்டால் பிள்ளைகளில் ஒரு வித பதகளிப்பு நிலை ஏற்படும். பரீட்சைகளில் நன்றாக செய்யவேண்டுமே என்ற கவலையும் ஏற்படலாம். இந்நிலமையில், அவர்கள் பரீட்சைக்காக ஆயத்தப்படுத்தும் போது அவர்களை தனியே விட்டுவிடுவது புத்திசாலித்தனமானது அல்ல. சில பெற்றோர் பிள்ளை பரீட்சைக்காக ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் போது தொலைக்காட்சி பார்த்தல், மற்றும் அவர்களின் கற்றலை இடையூறுபடுத்தும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடல், வெளியூர்களுக்கு உல்லாசப்பயணம் மேற்கொள்ளல் போன்றனவற்றில் நேரத்தை செலவிடுகிறனர். இது பிள்ளையின் பரீட்சை பெறுபேறுகளில் எதிரான தாக்கத்தை ஏற்படுத்தலாம். மாறாக அவர்கள் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதற்கு தம்மால் இயலுமான எல்லா வழிகளிலும் பெற்றோர் உதவி செய்தல் வேண்டும். முடியுமாயின், சிறிய மாதிரிசோதனைகளை அவர்களுக்கு நடத்தலாம். தேவையான நூல்களை நூலகங்களில் இருந்து பெற்றுக் கொடுக்கலாம். பரீட்சைக்கு உதவும் சிறிய நூல்களை வாங்கிக் கொடுக்கலாம். தேவை ஏற்படின் பிள்ளைக்கு உதவக் கூடியோரை இனம் கண்டு அவர்களின் உதவிகளையும் பெற்றுக்கொடுக்கலாம்.

## 9. சிறந்த பேறுகளுக்கு வெகுமதியளித்தல்.

பிள்ளைகளின் கற்றலுக்கு ஊக்கல் வழங்குவது பெற்றோரின் கடமையாகும். ஊக்கல் இரண்டு வகைப்படும். ஒன்று புறவூக்கல் மற்றையது அகவூக்கல். புறவவூக்கல் என்பது அவர்கள் சிறந்த அடைவுகளை வெளிக்காட்டும் போது பாராட்டுதல், சிறு பரிசுகளை வழங்கல், தட்டிக் கொடுத்தல் போன்றவைகளாக அமையலாம். ஆனால் எடுத்ததற்கெல்லாம் பரிசு கொடுக்கும் பழக்கத்தை அளவுக்கதிகமாக செய்து வழக்கமாக்கிக் கொள்ளக் கூடாது. அவ்வாறு செய்தால் பரிசு, வெகுமதிகள் இன்றி கற்றல் செயலாற்றுகைகளில் பிள்ளை ஆர்வம் காட்டாத நிலைமை உருவாகும். தமது ஒவ்வொரு செயலுக்கும் பரிசுகளை எதிர்பார்ப்பர். அவ்வாறு கிடைக்காத போது சோர்வடைந்து வழமையான கற்றலில் கூட ஈடுபட மனமின்றி இருப்பர். வெகுமதிகள் ஒரு ஒழுங்கு முறையில் வழங்கப்படாமல் எதிர்பாராத நிலைமைகளில் திடீரென்று வழங்கப்படுவதாக அமைதல் நன்று. புறவூக்கிகளைவிட அகவூக்கிகளே கற்றலில் அதிக நேரான விளைவுகளை உருவாக்குவதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

பிள்ளை தான் கற்கும் பாடத்தை நேசிப்பதற்கும் கற்றலை ரசித்து அனுபவிக்கவும் கற்றலில் விருப்பத்துடன் ஈடுபடவும் தொடங்கும் போது பிள்ளைகளுக்கு அகவூக்கல் ஏற்பட்டுள்ளதாக இனம் காணலாம். வெளிவாரியான வெகுமதிகளுக்காக அல்லாமல் தான் கொண்டிருக்கும் ரசனை, ஈடுபாடு காரணமாக விருப்புடன் பாடத்தை கற்கின்றனர். இவ்வாறான நிலைமையில் பிள்ளையின் அடைவு மட்டம் எதிர்பாராத வகையில் உச்சமாக இருக்கும். எனவே பிள்ளைகள் தான் விரும்பாவிட்டாலும் கூட தான் கற்கும் பாடத்தை நேசிக்க முயற்சிக்க வேண்டும். ரசிக்கத்தொடங்க வேண்டும். கற்பிக்கும் பாடத்தை இலகுப்படுத்தி ஆசிரியர் கற்பிப்பதன் மூலமும் பிள்ளை கற்றலின் பயன் விளைவை மனத்தில் இருத்தி கற்பதன் மூலமும் இவ்வாறான அகவூக்கல் ஏற்பட சாத்தியமுண்டு.

## 10. கல்விப்பயணங்களுக்கு அழைத்துச் செல்லல்

பாடசாலை விடுமுறை காலங்களில் பிள்ளைகளை கல்விப் பயணங்களுக்காக அழைத்துச் செல்லலாம். அவர்கள் கற்கும் பாடங்களுடன் தொடர்பான இடங்களை பட்டியலில் இனைத்துக்கொள்ளவேண்டும். முடியுமானால் பயணம் தொடங்குவதற்கு முன்பு போகும் இடங்கள் பற்றிய சுருக்கமான விளக்கங்களையும் அவர்கள் அவதானிக்க வேண்டியவைகளையும், எடுக்க வேண்டிய குறிப்புகளையும் பற்றி போதிய அறிவுறுத்தல்களை வழங்குதல் வேண்டும். பிரயாணம் முடிந்து வந்த பின்பு அவர்களின் அவதானங்களை கருத்தில் கொண்டு கலந்துரையாடலில் ஈடுபட வேண்டும். அவர்கள் கற்கும் பாடங்களுடன் பிரயாணத்தில் பெற்ற அனுபவங்களைத் தொடர்புபடுத்தி குறிப்புகளை பேண அவர்களுக்கு ஆர்வமூட்ட வேண்டும்.

## 11. பெற்றோர்-ஆசிரியர் தொடர்பை பேணுதல்

பாடசாலையில் இடம்பெறும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்புகளை தவறவிடக் கூடாது. தமது பிள்ளைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுடன் பெற்றோர்கள் சிறந்த தொடர்புகளைப் பேணுதல் அவசியமாகும். அவர்களின் தொலைபேசி இலக்கங்களை பெற்ற பிள்ளைகளின் வகுப்பறை செயலாற்றுகை பற்றி ஆசிரியரிடம் அடிக்கடி விசாரித்தல் வேண்டும். பிள்ளைகளின் நடத்தைகளில் ஏதாவது குறைபாடுகள் தென்படுமானால் உடனடியாக திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். இவ்வாறு பிள்ளைகளின் வகுப்பறை நடவடிக்கைகளை சீர்படுத்த ஆசிரியரின் உதவியை நாடும் பெற்றோர்களை ஆசிரியர்களும் விரும்புவார்கள். அவர்கள் பற்றிய நல்லபிப்பிராயம் ஆசிரியர் மனதில் தோன்றும்.

## 12. பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்குதல்

பெற்றோர்கள் தொழில் செய்பவர்களாயின் சிலர் பிள்ளைகளுக்காக நேரத்தை ஒதுக்குவதில்லை. அதற்காக தமக்கு நேரம் கிடைப்பதில்லை என்று இவர்கள் கூறுவதுண்டு. பெற்றோர்கள் ஓடி ஓடி உழைப்பது யாருக்காக? என்ற கேள்வி இங்கு எழுகின்றது. பிள்ளைகளை கவனிக்க நேரம் ஒதுக்க முடியாது என்று கூறி பணம் மட்டுமே தமது குறிக்கோளாக உழைக்கும் பெற்றோர் இறுதியில் வெற்றிகரமாக தமது வாழ்க்கை நடத்திச் செல்லும் திறனற்ற ஊதாரிப்பிள்ளைகளிடம் தமது முழு உழைப்பையும் பயனற்ற விதத்தில் ஒப்படைத்து கைசேதம் அடையவேண்டி வரும். எனவே பெற்றோர்-பிள்ளை உறவை சிறந்த முறையில் பேணும் வகையில் வசதியாக நேரத்தை ஒதுக்கிக் கொள்ளல் அத்தியாவசியமானதாகும். உணவை உண்ணும்போது பிள்ளைகளுடன் சேர்ந்துண்பது, இயலுமாயின் அவர்களின் விளையாட்டுகளில் பங்கெடுப்பது போன்றவாறு தமது ஓய்வு நேரங்களை பெற்றோர் நல்ல வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பிள்ளைகளின் மனதில் இது சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை பெற்றோர் மறக்கலாகாது.

## 13. பிள்ளைகளின் கற்றலை கண்காணித்தல்

சில பிள்ளைகள் தானாக வீட்டில் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டாலும் எல்லாப் பிள்ளைகளும் அவ்வாறு செய்வரென்று எதிர்பார்க்க முடியாது. பொதுவாக பிள்ளைகளில் கற்பதற்கான வற்புறுத்தல்களை மேற்கொள்வது எல்லா நேரங்களிலும் சாதகமான விளைவுகளைத் தருவதில்லை. பல சந்தர்ப்பங்களில் பெற்றோரின் கண்டிப்புக்குப் பயந்து அவர்கள் கற்பது போல் நடிக்கக் கூடும். கற்றலை தண்டனையின் ஒரு அம்சமாகக் கூட அவர்கள் கருதலாம். பிள்ளைகள் பெற்றோர் விரும்பாத விடயங்களில் ரசனையுடன் ஈடுபடும் போது அவர்களை கண்டித்து “போய்படி” என்று துரத்துவார்கள். இவ்வாறாக கற்க வற்புறுத்துவது அர்த்தமற்ற செயலாக ஆகிவிடுகின்றது. மாறாக அவர்களில் வற்புறுத்தலை ஏற்படுத்துவதை விடுத்து நட்புரவுடன் பழகி கற்கத்தூண்டி கண்காணித்தல் வேண்டும். நட்புறவுடனான ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும். அவர்களின் கற்றல்

பேறுகள், செயலாற்றுகைகள் திருப்தியீனமாக இருக்குமானால் அவர்கள் ஓய்வு நேரத்தை எவ்வாறு செலவிடுகிறார்கள் என்பது கண்காணித்தல் வேண்டும்.

## 14. பிள்ளைகளின் கற்றலுக்கு முன்னுரிமையளித்தல்

வீட்டில் பிள்ளையின் கற்றலுக்கு முன்னுரிமை அளித்தல் வேண்டும். அவர்களின் கற்றலை இடையூறுபடுத்தும் வகையில் தேவையற்ற பிரயாணங்களை ஏற்பாடு செய்தல், வீட்டில் விசேட நிகழ்ச்சிகளை அவசியமற்ற நிலையில் ஒழுங்கு செய்தல் என்பவைகளை தவிர்த்தல் வேண்டும். தேவையற்ற வகையில் சிறிய விடயங்களுக்கெல்லாம் பாடசாலைக்கு செல்லாது விடுமுறை எடுப்பதற்கு அவர்களை அனுமதிக்கக் கூடாது. ஒருநாள் பாடசாலைக்குச் செல்லாமல் விடுவது அவர்களின் தொடர்சியான கற்றலில் எத்தகைய பாராதூரமான எதிரான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை பிள்ளைகள் உணரமாட்டார்கள். ஒவ்வொரு நாளும் பாடசாலை செல்வதன் முக்கியதுவத்தை பிள்ளைகளுக்கும் விளக்குதல் வேண்டும்.

## 15. தனிப்பட்ட அனுபவங்களை பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளல்

பெற்றோரின் கடின உழைப்பையும் அதன் பலனாக அடைந்த வெற்றிகளையும் பிள்ளையுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். கற்கும் காலத்தில் சாதித்த வெற்றிகள் அதற்கு இட்டுச்சென்ற காரணிகள் போன்றன பிள்ளையின் வெற்றியை நோக்கிய கடின உழைப்பை ஊக்குவிக்கும்.

## 16. கற்பதற்கு ஏற்ற ரசனையான வழியை வடிவமைத்தல்

சில ரசனையான வழிவகைகளை வடிவமைப்பதன் மூலம் கற்றல் செயற்பாட்டை ரசித்து அனுபவிக்கக் கூடிய வேடிக்கையுடன் கூடியதாக மாற்றியமைத்தல் வேண்டும். பிரயாணம் செய்யும் நேரம், விளையாடும் நேரம் போன்றவற்றில் சில வேடிக்கையான நுட்பங்கள் மூலம் கடினமாக கற்றல் பகுதிகளை பிள்ளைகள் மீட்பதற்கு உதவுதல் வேண்டும். இதற்காக புதிய வினாக்கள், விடுகதைகள், நட்புறவுடனான விவாதங்கள், சுருக்க வழமுறைகள், குறுக்கெழுத்துப் போட்டிகள், நீதிக் கதைகள் போன்ற பல்வேறு நுட்பங்களை பின்பற்றலாம். கணிதப் பிரச்சினைகளை விடுவிப்பதற்கு பொருத்தமான வகையில் சில கோலங்களை பயன்படுத்தலாம்.

## 17. பிள்ளைகளுடன் கலந்துரையாடுதல்

பெற்றோருக்கு இறுக்கமான வேலைப்பழு இருந்தபோதும் கூட பிள்ளைகளுடன் கலந்துரையாடுவதற்கு தினமும் நேரம் ஒதுக்கப்படல் வேண்டும். அவர்கள் எதிர்மறையான சிந்தனைகளால் அச்சம், பீதி போன்றவற்றால் வருந்தாமல் இருப்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவர்கள் சந்திக்கும் சகல பிரச்சினைகளுக்கும் தேவையான தார்மீக உதவி பெற்றோரிடம் இருந்து பிள்ளைகளுக்கு கிடைப்பது

உறுதிப்படுத்தப்படல் வேண்டும். எந்நிலைமைகளிலும் நமக்கு உதவி செய்வதற்கு பெற்றோர்கள் பக்கபலமாக இருக்கின்றார்கள் என்ற உணர்வு பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கை, சுயவூக்கம், சுயமாக ஆரம்பித்தல் போன்றனவற்றை அளிக்கவல்லன.

## 18. சுறுசுறுப்பான கற்றலுக்கு ஆர்வமூட்டல்

உடலுழைப்பற்ற, சோம்பலான கற்றலுடன் ஒப்பிடும் போது சுறு சுறுப்பான கற்றல் கூடிய பலன்களை அளிக்கின்றது. பிள்ளைகள் சுறு சுறுப்பாக கற்றலில் ஈடுபடக் கூடிய சூழலை பெற்றோர் அமைத்துக் கொடுக்க வேண்டும். அயலில் வாழும் பிள்ளைகளுடன் இணைந்து "நல்ல நண்பர் வட்டம்" ஒன்றினை அமைத்து ரசனையான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடத்தேவையான ஒழுங்குபடுத்தல்களை பெற்றோர் செய்தல் வேண்டும். இதனால் பிள்ளைகள் மகவும் உற்சாகமாக செயற்படுவதுடன் தமது சுய அனுபவங்களை சகபாடிகளுடன் கலந்து கற்றலில் ஈடுபடவும் மிகவும் உதவியாக அமையும்.

## 19. பிள்ளைகளுக்கு ஓய்வெடுக்க உதவிசெய்தல்

பிள்ளைகள் கற்றல் மற்றும் விளையாட்டுகளில் ஓய்வின்றி ஈடுபடும் நிலைமையில் நாளின் இறுதியில் அவர்கள் முறையான ஓய்வை பெற்றுக்கொள்கின்றனரா என்பதை பெற்றோர்கள் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். சிறந்த உணவையும் நல்லதொரு இரவுத்தூக்கத்தின் மூலம் அவர்கள் நிம்மதியான ஓய்வொன்றினையும் பெறுதல் வேண்டும். அவர்கள் எந்தத்துறையில் ரசனை உள்ளவர்கள் என்பதை இனம் கண்டு விடுமுறை காலத்தில் அவற்றை உள்ளடக்கியதானதொரு சிறந்த நிவாரணத்தை அல்லது சுமைத்தணிவை வழங்க வேண்டும். இதன் மூலம் வேலைப் பழுவினால் ஏற்பட்ட அழுத்த நிலைகளில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள முடியும்.

## 20. நல்லதொரு நண்பனாக இருத்தல்

பெற்றோர் அவர்களின் பிள்ளைகளின் சிறந்த நண்பனாக இருத்தல் வேண்டும். தங்கள் மனங்களில் தோன்றும் எண்ணங்களையும் உண்மையான உணர்வுகளையும் பெற்றோருடன் பகிர்ந்து கொள்ளும் நிலைமை காணப்படல் வேண்டும். அவர்களின் வழியில் குறுக்கிடும் அனைத்து நிலைமைகளிலும் தாம் உதவிக்கரம் நீட்டத் தயாராக இருப்பதாக பிள்ளைகளுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். இதனால் அவர்களின் சுய நம்பிக்கை அதிகரிப்பதுடன் கற்றலிலும் பாடசாலை செயற்பாடுகளிலும் சிறந்து விளங்க துணைபுரியும்.

## முடிவுரை

இதுவரை நாம் கலந்துரையாடியவற்றின் அடிப்படையில் பிள்ளையொன்றின் கற்றலை பாடசாலையிடம் ஒப்படைத்து விட்டு பெற்றோர் ஓய்வெடுத்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொள்ளலாம். பெற்றோரே முதலாசிரியர். பிள்ளையின் உடல் உள தேவைகளை தொடர்ச்சியாக நிறைவு செய்வதன் மூலம் அவர்களை கற்றல் நிலைமைக்கு இட்டுச்செல்பவர் இறுதிவரை பிள்ளையின் கற்றலுக்கு பக்கபலமாக இருப்பவர். பிள்ளையின் கற்றல் செயன்முறையில் பாடசாலையும் பிரத்தியேக கற்பித்தலும் கணிசமான பங்கினை செலுத்தினாலும் ஆரம்பம் முதல் இறுதிவரை பிள்ளைக்கு மிகவும் உறுதுணையாக நின்று பங்களிப்பு செய்பவர்கள் பெற்றோரே என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

## உசாத்துணைகள்


Abrams, L. S., & Gibbs. J. T. (2002). Disrupting the logic of home-school relations: Parent involvement strategies and practices of inclusion and exclusion. *Urban Education, 37*(3), 384 - 407.

Brody, G. H., Stoneman, Z., Flor, D. (1995). Linking family process and academic competence among rural African American youths. *Journal of Marriage and the Family, 57*, 567- 579.

Cheung, C.S., & Pomerantz, E.M. (2012). Why does parents' involvement enhance children's achievement? The role of parent-oriented motivation. *Journal of Educational Psychology, 104*(3), 820 - 832.

Cooper, H., Lindsay, J.J., & Nye, B. (2000). Homework in the home: How student, family and parenting - style differences relate to the homework process. *Contemporary Educational Psychology*, *25*, 464 - 487.

Cotton, K., & Wikelund, K.R. (2001*).* Parent involvement in education. *Northwest Regional Educational Laboratory: School improvement Research Series.*

Decker, L.E., Decker, V.A., & Brown, P.M. (2007). *Diverse partnerships for student success: Strategies and tools to help school leaders*. Lanham Maryland: Rowan Littlefield Education

Desforges, C.E., & Abouchaar, A. (2003). *The impact of parental involvement. Parental support and family education pupil achievement and adjustment. A literature Review.* London: Department for Education and Skills.

Fan, X., & Chen, M. (2001). Parental involvement and students' academic achievement: A meta- analysis: *Educational Psychology Review*, *13,* 1 - 22.

Jeynes, W. (2007). The relationship between parental involvement and urban secondary school academic achievement. *A Meta-analysis in Urban Education, 42*(1), 82 – 110.

Olmstead, C. (2013). Using technology to increase parent involvement in schools. *Technology Trends, 57* (6), 28 - 37.

Sirvani, H. (2007). The effect of teacher communication with parents on students' mathematics achievement. *American Secondary Education, 36*(1), 31 - 46.

Van Voorhuis, F.L., (2013). Interactive homework in middle school: Effects on family involvement and science achievement. *The Journal of Education Research, 96,* 323 - 338.

# இலங்கைச் சூழ்லமைவில் நவீன பூளோகத்திற்குஆசிரியர்தளை தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகத்ததை நடைமுறைப்படுத்தல்

**பேராசிரியர் சசிகலா குகமூர்த்தி***

## அறிமுகம்

சர்வதேசத்தில் முகிழ்ந்தெழுகின்ற பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ளக்கூடியவகையில் மாணவர்களை தயார்படுத்துவது ஆசிரியர்களினது வாண்மைசார்ந்த ஒருதார்மீகக் கடமையெனக் கருதப்படுகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் இணைத்தவகையில் நோக்குகின்ற பொழுது சர்வதேசரீதியாக உலகநாடுகளது கலாசாரத்தினது ஒவ்வோர் அம்சங்களிலும் பல்வேறுபட்ட மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்ற போக்கானது சர்வதேசரீதிதியில் கல்விக்கான கொள்கைகளை வகுப்பவர்களின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்டதன் விளைவாக 21ஆம் நூற்றாண்டிற்குப் பொருந்துகின்றவகையில் மாணவர்களை தயார்படுத்துவதில் முக்கிய பங்குதாரர்களாக இருக்கின்ற ஆசிரியர் வளத்தை தயார்படுத்தவேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்த யுனெஸ்கோ நிறுவனம் நவீன பூளோகத்திற்கு ஆசிரியர்களை தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகம் (Global–Ready Teacher Competency Framework) ஒன்றினை முன்வைத்துள்ளது. இக்கட்டுரைஇ இவ்வாண்மைச் சட்டகத்தில் முன்வைக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான தரநிர்ணயங்களில் கவனம் செலுத்துவதோடு இலங்கையினது சூழலமைவுடன் தொடர்புபட்டவகையில் இத்தரநிர்ணயங்களை அடையும் வகையில் ஆசிரியர்கல்வி மற்றும் ஆசிரியர் வாண்மைவிருத்திக்காக செயற்பாடுகள் விளைதிறன்மிக்க முறையில் இடம்பெறுகின்றதா என்பதை ஆராய்வதாகவும் அமைகின்றது.

*பேராசிரியர்,
*இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
*Email: skuga@ou.ac.lk*

## நவீன பூளோகத்தில் கற்பவர்கள்

இன்றைய நவீன உலகில் கற்பவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டியவர்களாக இருப்பதினால் இச்சவால்களை எதிர்நோக்கக்டிய வகையிலான திறன்களை மாணவர்மத்தியில் வளர்த்தெடுக்கும்வகையில் கற்றல் அனுபவங்களை வழங்குதல் வேண்டும். வெற்றிகரமான கற்றல் அனுபவங்கள் தொடர்ந்து வெற்றிகரமான கற்றலுக்கு வழிவகுக்குமென்பதினால் கற்றல் அனுபவங்களை வழங்குகின்றபொழுது ஆசிரியர்கள் பின்வருவனவற்றில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- ஆழமான கற்றலுக்ககான சந்தர்ப்பங்களை வழங்குதல்
- சவால்மிக்க கற்றல் செயற்பாடுகளை வடிவமைத்தல்
- உயர்வான ஆற்றுகைக்கு வழிப்படுத்தல்
- சுயவிசாரணையுடன்கூடிய கற்றல் செயற்பாடுகளை வழங்குதல்
- உயர் அறிகைசார் ஆற்றல்களை விருத்திசெய்தல்
- பேரறிகைசார் ஆற்றல்களை விருத்திசெய்தல்
- சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றல் திறன்களை விருத்திசெய்தல்
- உயர்வான அடைவுமட்டங்களை பெறச்செய்தல்
- பின்தொடர் பயிற்சிகளை வழங்குதல்
- வாழ்க்கை நீடித்த கல்விக்கான ஆற்றல்களை வளர்த்தல்

மேலும் கற்றலுக்கான சந்தர்ப்பங்களை வடிவமைக்கையில் ஆசிரியர் கற்பவர்களின் பல்வகைமை சார்ந்த குணவியல்புகளில் கவனம் செலுத்த வேண்டும். பிரதானமாக மாணவர்களின் கற்றல் தேவைகள் வேறுபட்டவை, கற்றல் பாங்குகள் வேறுபட்டவை, குறித்ததொரு விடயத்தை யாவரும் ஒரேவகையில் கற்பதில்லை , அத்துடன் குறித்ததொரு விடயத்தை ஒரே மாதிரி எல்லாநேரமும் கற்பதில்லை என்பதை விளங்கிக்கொள்வதிலும் ஆசிரியர் தேர்ச்சிபெற்றவராக இருத்தல் வேண்டும்.

## ஆசிரியர் வாண்மைத்தேர்ச்சிகள்

தேர்ச்சி என்ற பதமானது அவுஸ்தரேலியாவில் இடம்பெற்ற கல்வித்தர மீளாய்வு தொடர்பான விவாதமொன்றின் முக்கிய கருவாக அமைந்தது. இவ்விவாதத்தில் தேர்ச்சி என்பது ”ஒரு குறிக்கப்பட்ட இலக்கை அடைவதற்காக அறிவு, திறன் ஆகியவற்றை சரியானமுறையில் பாவிக்கும் திறமை” எனக் குறிப்பிடப்பட்டது. சர்வதேச கல்விக் கலைக்களஞ்சியம் தேர்ச்சி என்பது பின்வரும் மூன்று தரத்திலான மனித செயற்பாடுகளை வலியுறுத்துவதாக உள்ளது.

1. **அறிவு** - இதில் ஈடுபடுதல், தெரிவு செய்தல், குறியிடுகல், பிரதிபலித்தல், மதிப்பிடுதல் போன்ற புலக்காட்சி எண்ணக்கருவாக்கற் செயற்பாடுகளின் விளைவு.

2. **மனப்பாங்கு** - குறிப்பிட்ட நிகழ்வுகள் அல்லது பொருட்கள் சார்ந்த உணர்வு வெளிப்பாடுகளின் தோற்றப்பாடு.

3. **ஆற்றுகைத் திறன்கள்** - மற்றவர்களால் அவதானித்து உறுதிப்படுத்தக்கூடிய தெளிவான உணர்வு வெளிப்பாடுகளை பிரதிபலிக்கக்கூடிய தன்மையைத் தனிமனிதனிடத்தில் ஏற்படுத்தும் உள இயக்கம்.

தேர்ச்சியைச் சுருக்கமாகத் தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்காகத் தேவைப்படும் அறிவு, திறன், மனப்பாங்கு எனக்கூறலாம். இந்தவகையிலே ஆசிரியர் தேர்ச்சி என்பது "ஆசிரியர் ஒருவர் பாடசாலையில் போதனைக்குத் தேவைப்படும் எண்ணக்கரு விளக்கம், திறன்கள், மனப்பாங்கு என்பவற்றை கொண்டிருத்தல்" என விளக்கமளிக்கலாம். ஆசிரியர் ஒருவர் அறிவுசார், உணர்வுசார் முதிர்ச்சி உடையவராகவும், தனியாகவும் குழுவாகவும் மாணவர்களை கையாளும் திறன், மாணவர்களை முன்னேற்றும் திறன், பொருத்தமான விழுமியங்களைப் பேணும் திறன் போன்றவற்றைக் கொணடிருத்தலை தேர்ச்சி எனலாம். பொதுநலவாய அமைப்பின் குறிப்பொன்று "தேர்ச்சிமிக்க ஆசிரியர் ஒருவர் பிள்ளை விருத்தி பற்றிய அறிவு, பாடப்புலத்திலான அறிவு, தனது மாணவர்களை, அவர்கள் சார்ந்திருக்கும் சமூகத்தை வழிப்படுத்தும் திறன், நேர்ப்பாங்கான மனப்பாங்கு, முன்னுதாரணமான நடத்தைகள் போன்றவற்றைக் கொண்டிருப்பர்" எனக் குறிப்பிடுகின்றது.

கல்வி தொடர்பான சர்வதேச ஆணைக்குழு 1996 ஆம் ஆண்டு யுனெஸ்கோவிற்கு கையளித்த அறிக்கையில் புத்தாயிரம் ஆண்டில் ஆசிரியர் ஒருவரின் வகிபங்கினைத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகள் எவை என்பதையும் அடையாளப்படுத்தி உள்ளது. ஆசிரியர்களுக்கு இளம் தலைமுறையினரை உருவாக்கும் முக்கிய பணியொன்று உள்ளதென்றும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குபவர்களாக மட்டுமன்றி எதிர்காலத்தை பொறுப்புடன் அர்த்தமுள்ளதாக உருவாக்கும்வகையில் இளம் தலைமுறையினரை ஆசிரியர்கள் கட்டியெழுப்ப வேண்டுமென்றும் சர்வதேசத்தின் புதிய சவால்களுக்கு முகம்கொடுத்து, புரிந்துணர்வு மற்றும் நவீனமயமாக்கல் சிந்தனைகளுடன் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற வகையில் இளைஞர் சமூகத்தை உருவாக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டு , உள்ளதுடன் இதற்காக பலவகைப்பட்ட வாண்மைசார்தேர்ச்சிகள் ஆசிரியர்கள் மத்தியில் வளர்த்தெடுக்கப்படுதல் வேண்டுமென்பதையும் வலியுறுத்திக் கூறியது. அறிவும் பல்வேறு ஆற்றல்களையும் உள்ளடக்கிய அறிகைசார் தேர்ச்சியானது கோட்பாட்டு ரீதியாகமட்டும் அமையாது தொழிற்படு திறன்களையும் உள்ளடக்கிய ஆற்றுகைசார் தேர்ச்சி, பொருத்தமான நேர்ப்பாங்கான விரும்பத்தகு விழுமியங்கள் மற்றும் பண்புகளைக் கொண்ட மனப்பாங்குசார் தேர்ச்சி என்பனவும் ஒரு அசிரியருக்கு அவசியம்.

ஆசிரியர்களுக்கு அவசியமான தேர்ச்சிகளென பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- கற்றல்-கற்பித்தல் செயன்முறையில் விளைதிறன்மிக்க அணுகுமுறையை பயன்படுத்தல்
- பாடவடிவமைப்பில் நேர்ப்பாங்கான கோட்பாடுகளைப் பயன்படுத்தல்
- கற்பித்தல் நுட்பங்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தல்

- தொடர்பாடல் நுட்பங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்
- கற்றலைத் தூண்டுவதற்கான வளங்களை, சந்தர்ப்பங்ளை உருவாக்குதல்
- கற்றலைத் தூண்டும்வகையிலான மதிப்பீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தல்

கல்விக்கான கலைக்களஞ்சியம் கற்பிக்கும் பாடப்புலத்தில் நிபுணத்துவம், உடல் மற்றும் உள ரீதியிலான பொருத்தப்பாடு, உணர்வு முதிர்ச்சி, மனித இயல்புகளையும் விருத்திகளையும் புரிந்து கொள்ளுதல், கற்றல் தத்துவம் பற்றிய அறிவும் அதனைப் பயன்படுத்தும் ஆற்றலும், இன, மத, கலாசார வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளல், வாண்மை விருத்திசார் அக்கறையும் ஆர்வமும் இருத்தல் போன்றவற்றை ஆசிரியர்களுக்கான தேர்ச்சிகளெனச் சுட்டிக்காட்டுகின்றது. மேற்குறிப்பிட்ட தேர்ச்சிகளை விருத்தி செய்வதோடு ஆசிரியர் கற்பித்தல்-கற்றல் செயன்முறையை திட்டமிடுகையில் மாணவர்சார்ந்த சிந்தனைகளுக்கும் முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும். எனவே நவீன சமூகத்தில் மாணவர்கள் வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க முறையில்குறித்ததொர் விடயத்தில் ஈடுபடுவதற்கு தேவையானஅறிவு, திறன், மனப்பாங்கு மற்றும், நடத்தைக்கோலங்களை மாணவர்களிடத்தேவளர்த்தெடுத்தல் என்பது ஆசிரியர் ஒருவர் பெற்றுக்கொண்டவாண்மைசார் சான்றிதழ்கள் மற்றும் பயிற்சிகளின் எண்ணிக்கையில்மட்டும் தங்கியிருப்பதில்லை என்பதை உணர்ந்துகொள்ளலாம்.ஆசிரியர்கள ் ஆசிரியர்கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி என்பவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட வாண்மைசார் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை சமூகம் எதிர்பார்க்கும் வாண்மைசார் நடத்தைக்கோலங்களுக்கு அமைவாக எவ்வளவுதூரம் ஈடுபாட்டுடன் தனது வாண்மைக்காலத்தில் பிரயோகிக்கின்றார் என்பதில் கவனம் செலுத்த வேணடியவராக உள்ளார்.

## நவீன பூளோகத்திற்கு ஆசிரியர்தளை தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகம்

நவீன உலகிற்கு ஏற்றவகையில் ஆசிரியர்கள் தம்மை தயார்படுத்த வேண்டும் என்பதில் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் அண்மைக்காலத்தில் கவனம் செலுத்தி வருகின்றன. இந்த வகையில் யுனெஸ்கோ நிறுவனமும் இன்றைய நவீன உலகில் கற்பவர்களினது தேவைகளை உணர்ந்து முக்கியமாக மாணவர்களிடம் சிறந்த தொடர்பாடல் திறன்கள், ஆக்கத்திறன்கள், புத்தாக்கச்சிந்தனைகள் போன்ற உயர் அறிகைசார் ஆற்றல்களை வளர்க்க வேண்டுமாயின் வகுப்பறைச்செயற்பாடுகளில் மிகமுக்கிய வகிபங்கு வகிக்கின்ற ஆசிரியர்களது தேர்ச்சிகள் உலகத்தரம் வாய்ந்ததாக இருக்கவேண்டுமென்பதில் தயார்படுத்தப்பட கவனம்செலுத்திநவீன பூளோகத்திற்கு ஆசிரியர்தளை தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகம் என்ற ஒன்றினை முன்வைத்துள்ளது. இந்தச் சட்டகம் சில குறிப்பிட்ட தேர்ச்சிகளை ஆசிரியர்கள் பெற வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.

ஓர் ஆசிரியர் இன்றைய உலகில் தனது வாண்மைத் தொழிலை சிறந்த முறையில் ஆற்ற வேண்டுமாயின் தனது தொழிலுடன் தொடர்புபட்ட வகையில் நிபுணத்துவமும்

தலைமைத்தவமும் உடையவராக இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது. இவ்வாறு நிபுணத்துவம் மற்றும் தலைமைத்துவம் ஆகிய இரு தேர்ச்சிகளையும் ஆசிரியர்கள் பெறவேண்டுமாயின் மூன்று விடயங்களில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டுமென யுனெஸ்கோ தனது ஆசிரியர்களுக்கான தேர்ச்சிச் சட்டகத்தில் குறிப்பிடுகின்றது.

1. சுயவிசாரணையின் அடிப்படையில் அமைந்த போதனைசார் (Pedagogy) அணுகுமுறையை விளங்கிக் கொள்வதும் அவற்றை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தலும்.
2. கலைத்திட்டத்தில் உலகின் போக்குகளை விளங்கிக்கொள்ளும்வகையில் பூலோகம்சார் உள்ளடக்கங்களை இணைத்துக் கொள்ளல்.
3. கலைத்திட்ட நடைமுறைகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் பயன்பாட்டை உட்புகுத்தல்.

மேலும் இச்சட்டகம் உலகத்தரம் வாய்ந்த ஆசிரியர் ஒருவர் தனது குணவியல்புகளில் பின்வரும் நான்கு இயல்புகளைத் தனது வாண்மைக்கான தேர்ச்சித் தூண்களாகக்கொண்டவராக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது.

1. **விளங்கிக்கொள்ளல்** - கற்றல் கொள்கைகளை பிரயோகிக்கையில் கற்றலுக்கு உதவும் வகையில் நவீன தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணங்களைப் பயன்படுத்துவதுடன் உலக சூழ்லமைவுகளின் வேறுபட்ட கோணங்களை வகுப்பறை அறிவுறுத்தல்களில் பயன்படுத்தும் வகையிலான விளக்கங்களைப் பெற்றுக் கொண்டவராக இருத்தல்.

2. **தேடுதல்** - உலகச் சூழமைவுகளில் பயன்படுத்தப்படும் பல்வகைப்பட்ட வளங்களை தேடியறிவதோடு கலைத்திட்டத்தின் வடிவமைப்பு அதன் நடைமுறைகளில் நவீன தொடர்பாடற் கருவிகளையும் சிறந்த நடைமுறைகளையும் வகுப்பறை அறிவுறுத்தல்களில் பயன்படுத்துல்.

3. **தொடர்புவைத்தல்** - உலகச் சூழலமைவில் உள்ள வேறுபட்ட சக வாண்மைசார் தொழிலாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அதன் மூலமாக சகபாடிகள் உலகளாவிய அளவில் கல்விப் புலத்தில் பெற்றுக் கொண்ட புதிய விடயங்களைத் தாமும் அறிந்து கொள்ளல்.

4. **ஒன்றிணைத்தல்** - சர்வதேச ரீதியிலான அறிவு,திறன்,மனப்பாங்கு என்பவற்றை கலைத்திட்டம், கற்றல் அறிவுறுத்தல்கள் மற்றும் கணிப்பீடு என்பவற்றில் ஒன்றிணைத்து செயற்படல்.

நவீன பூளோகத்திற்கு ஆசிரியர்தளைத் தயார்படுத்துவதற்கான வாண்மைச் சட்டகமானது உலகளாவியரீதியில் கல்விப்புலத்தில் ஆசிரியர்களுக்கான ஆசிரியர்கல்வி

நிகழ்ச்சித்திட்டங்களை மற்றும் ஆசிரியர்விருத்தி தொடர்பான கொள்கைகளை வடிவமைப்பவர்களுக்கு அவற்றை சரியானமுறையில் திட்டமிடுவதற்கு உதவுகின்ற ஒரு ஆவணமாக காணப்படுகின்றது.மேலும் இந்தச் சட்டகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நவீன பூலோகத்திற்கு ஆசிரியர்களை தயார்படுத்தும் தேர்ச்சிக்கான தரநிர்ணயங்கள் கல்வியியலாளர்கள் தங்களைத் தாங்களே சுயமதிப்பீடு செய்வதற்கு உதவுவதோடு ஏனைய ஆசிரியர்களின் வாண்மை விருத்தி நிலைகளை மதிப்பீடு செய்வதற்கு தேவையான அளவுத்திட்டங்களையும் அவதானிப்பு படிவங்கள் என்பவற்றை விருத்தி செய்வதற்கும் தேவையான வழிகாட்டல்களையும் வழங்கக் கூடியதாக இருக்கின்றது. இச்சட்டகம்ஆசிரியர்களை இன்றைய நவீன பூகோளத்திற்கு தயார்படுத்துவதற்கு பின்வரும் மூன்று முக்கிய பயிற்சிக் கூறுகளில் கவனம் செலுத்தவேண்டுமெனச் சுட்டிக்காட்டுகின்றது.

1. போதனை(Pedagogy)
2. உள்ளடக்கம் (Content)
3. தொழில்நுட்பம் (Technology)

மேற்குறித்த மூன்று கூறுகளும் தனித்தனியாக இரண்டு வகையானதரநிர்ணயங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இரு வகையான தரநிர்ணயங்களும் பின்வரும் இரு இயல்புகளுடனும் தொடர்புபட்டதாக தயாரிக்கப்பட்டுள்ளது.

1. நிபுணத்துவம்
2. தலைமைத்துவம்

நவீன உலகில் ஆசிரியர் ஒருவர் எத்தகைய குணவியல்புகளைக் கொண்டவராக இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும்வகையில் ஒவ்வொரு தரநிர்ணயங்களும் உலகத்தரம் வாய்ந்த வாண்மைத் தேர்ச்சிகளைப் பெறுவதற்கு தேவையான அளவீடுகளினால் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. போதனையோடு தொடர்புபட்டவகையில் வாண்மைசார் தரநிர்ணயங்கள் இரண்டாக வரையறுத்துக் காட்டப்பட்டுள்ளது.

1. போதனையில் நிபுணத்துவம்
2. போதனையில் தலைமைத்துவம்

**போதனையில் நிபுணத்துவம்**

மாணவர்களை சர்வதேச தரத்திலான கற்றலுக்கு தயார்படுத்தும் வகையில் ஆசிரியர் ஒருவர் தான் கற்பிக்கின்ற பாடத்தில் நிபுணத்துவம் உடையவராக இருப்பதோடு ஆக்கபூர்வமான முறையில் கற்றல் சூழலை உருவாக்கும் வகையில் திட்டமிடக்கூடியவராகவும் இதற்கேற்றவகையில் புத்தாக்க முறையில் கற்றலுக்கான அறிவுறுத்தல்களை வழங்குபவராகவும்கணிப்பீட்டு உபாயங்களைபின்பற்றுபவராகவும் இருத்தல் வேண்டும்.

## போதனையில் தலைமைத்துவம்

போதனா தலைமைத்துவம் என்பது நவீன போதனா முறைகள்தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட உள்ளடக்க அறிவு மற்றும் நவீன மாற்றங்களுக்கு ஏற்ற வகையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் சமகாலத்தில் இடம்பெற்றுவருகின்ற மாற்றங்களை அறிந்து அவ்மாற்றங்களுக்கு ஏற்றவகையில் வாண்மைசார் தேர்ச்சிகளை வளர்க்கும் வகையில் சர்வதேச வாண்மைத்துவ ஆளணியினருடன் தொடர்புகளை உருவாக்குதல் வேண்டும். எனவே இன்றைய உலகிற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்கள் தங்களை தயார்படுத்த வேண்டுமாயின்அவர்கள் புதிய அறிவினை உருவாக்கக் கூடியபவர்களாகவும் அவற்றை சர்வதேசத்தில் இருக்கின்ற சகஆசிரியர்களுக்கு உதவும் வகையில் அவர்களோடு பகிர்ந்துகொள்பவர்களாகவும் மேலும் சர்வதேச ரீதியில் கல்வியை மேலும் வளர்த்துச் செல்லும் வகையில் முன்னெடுத்துச் செல்பவராகவும் இருத்தல் வேண்டும். இந்த வகையிலே நவீன உலகத்திற்கு ஏற்றவகையில் ஆசிரியர்களை உருவாக்குவதற்கான தரநிர்ணயங்கள் அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றுடன் தொடர்புபட்டவகையில் குறிகாட்டிகளாக (Indicators) இச்சட்டகத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

## அறிவுசார் குறிகாட்டிகள்

நவீன உலகத்தின் கற்றல் தேவைகளை நிறைவேற்றும்வகையில் ஆசிரியர்கள் தயார்நிலையில் இருக்கின்றனரா என்பதை மதிப்பிடும்வகையில் முன்வைக்கப்பட்ட அறிவசார் குறிகாட்டிகளானது ஆசிரியர்கள் தமது அனுபவங்களின் ஊடாக விருத்தி செய்யவேண்டிய விடயங்கள்,சகபாடிகளுடன் வைத்திருக்கவேண்டிய தொடர்புகள், விளைதிறன்மிக்கமுறையில் செயற்படுவதற்கு தேவையான கல்வித்தகமைகள், ஆய்வுகளில் ஈடுபடவேண்டியதன் தேவை என்பவற்றில் கவனம் செலுத்தி உருவாக்கப்பட்டுள்ளது. இந்தவகையில் அறிவுசார் குறிகாட்டியின் கீழ் ஆசிரியர் ஒருவர் பின்வருவனவற்றை விளங்கிக்கொண்டவராக இருக்க வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1. விசாரணையுடன் கூடிய முறையில் வடிவமைக்கப்பட்ட கற்றல் கோட்பாடுகளை (Inquiry and design – based learning theories) கற்பவர்கள் தாமே அறிவைக் கட்டியெழுப்பி மேம்படுத்தும் வகையில் பயன்படுத்தல்.

2. பாடங்களது எண்ணக்கருக்கள் மற்றும் பாட உள்ளடக்கங்களை விளங்கப்படுத்த தமது அறிவைப் பயன்படுத்துகையில் இவற்றை விளங்கிக்கொள்வதில் மாணவர்களது கலாசார அம்சங்கள் முக்கிறவகிபங்கு செலுத்துகின்றது என்பதை அறிந்து அதற்கேற்ற வகையில் அணுகுதல்.

3. கற்பவர்கள் தங்களுடைய தனிப்பட்ட மற்றும் கலாசாரம் சார்ந்த அனுபவங்களின் அடிப்படையில் பெறுமதிமிக்க அறிவு,திறன் மற்றும் மனப்பாங்குகளுடன் வகுப்பறைக்கு வருகின்றனர் என்பதை அறிதல்.

4. மாணவர்களது பல்வகைமையினை அறிந்து அவர்கள் தங்களது வேறுபட்ட கற்றல் தேவைகளை அடையும்வகையில் வேறுபட்டமுறையிலான போதனா முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்பதை அறிந்திருத்தல்.

5. இயல்பாக வடிவமைந்துள்ள சமுகம்,சூழல்,கல்வி,புவியியல், பொருளாதாரம்,அரசியல் நிலைமைகள் யாவும் ஒன்றிணைந்த வகையில் ஒன்றுடன் ஒன்று இடைவினைத்தாக்கம் புரிந்த வகையில், தனிப்பட்ட ரீதியிலும் ஒன்றிணைந்த முறையிலும் இயங்கி வருகின்றது என்பதை உணர்ந்து கொண்டவராக, உலகளாவிய எண்ணக்கருக்கள் மற்றும் அறிவுக் கூறுகளை விளங்கிக் கொண்டு அவற்றினது அமைப்பினையும் செயன்முறைகளையும் சிந்திப்பவராக இருத்தல் வேண்டும்.

6. பிரச்சினை தீர்க்கின்ற விடயங்களில் மாணவர்கள்ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கானசந்தர்ப்பங்களை வழங்கும்வகையில் எவ்வாறு தேடிஅறிதற் செயற்பாடுகளை திட்டமிடுவது என்பதை அறிந்து இருத்தல்.

7. சர்வதேசரீதியாகக் காணப்படும் பிரச்சனைகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கும் வகையில் கற்பவர்கள் விமர்சனரீதியாகச் சிந்திக்கின்ற ஆற்றல்களை வளர்க்கும் வகையில் பாடங்களையும்,பாடரீதியான செயற்பாடுகளையும் உருவாக்குவதை அறிந்திருத்தல்.

8. ஆக்கத்திறன், விமர்சனரீதியான சிந்தனை, பிரச்சினை தீர்த்தல் மற்றும் வேறுபட்ட பல கோணங்களில் ஒன்றை விமர்சிக்கின்ற பேச்சுக்களை மதிப்பீடு செய்யும் வகையில் இடையிட்ட மற்றும் இறுதிக் கணிப்பீடுகளை எவ்வாறு விருத்தி செய்வது என்பதை அறிந்திருத்தல்.

## திறன்சார் குறிகாட்டிகள்

ஆசிரியர் ஒருவரிடம் பின்வருவனவற்றை ஆற்றக்கூடிய திறன்கள் உடையவராக இருத்தல் வேண்டும்.

1. விசாரணையுடன் கூடியவகையில் கற்றலுக்கான வழிகாட்டல்களைதிட்டமிடுகின்ற திறன்களை மேம்படுத்தல். அதாவது கற்பவர்கள் சர்வதேச ரீதியாக செயற்திட்ட அடிப்படையிலான கண்டுபிடித்தல்களில் ஈடுபடவும் புதிய புதிய கருத்துக்களை உருவாக்கும் வகையில் ஊக்குவிக்கவும், கற்பவர்கள் தமது முன்னைய அறிவினைப் பயன்படுத்தி புதிய விடயங்களைக் கண்டுபிடிக்கவும், புதிய விடயங்களை ஆராய்ந்து அறிவதற்கும் ஒத்துழைத்து நடக்கக் கூடிய வகையிலான குழுக்களைப் பயன்படுத்தி நிஜ உலகில் இடம்பெறுகின்ற விடயங்களோடு தொடர்புபடுத்தி கணிப்பீடுகளை வழங்குவதோடு அவற்றில் பிரதிபலித்து சிந்தித்து செயற்படும் ஆற்றல்

   01) கலாசாரப்பிண்ணணியின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைகளைப் பெறுகின்ற வகையிலான கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்தல்.உதாரணமாக விடயங்களை கற்பவர்களின் குறித்த கலாசார நிலைமைகளோடு தொடர்புபடுத்தி அதன் அடிப்படையில் கலந்துரையாட வைக்கின்ற திறமைகள்

   02) மாணவர்களின் கற்றலுக்கான ஆர்வத்தை தூண்டும்படி உற்சாகப்படுத்தும் வகையில் சர்வதேச ரீதியில் நிலவும் கற்றலுக்கான சூழலை குறித்த மாணவர்கள் வாழும் பிரதேசத்தில் கிடைக்கக் கூடியதான மற்றும் அவர்களது

வேறுபட்ட கலாசாரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கற்றலுக்கான சூழலை மாற்றியமைக்கக் கூடியவராக இருத்தல்.

03) ஆசிரியரும் மாணவர்களும் சவால்களை கையில் எடுத்து அவை பற்றிய உண்மையான நிலைமைகள் என்ன? புதிதாக இணைக்கப்பட வேண்டியவை யாவை?புதிதாக பாவிக்ககூடிய கருவிகள் என்பவற்றை அறிந்து அவற்றை திறந்த மனத்துடன் வேறுபட்ட கோணங்களில் பார்வையில் சிந்தித்து பாதுகாப்பான முறையில் கற்பதற்கான இடத்தை வழங்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

04) சர்வதேச ரீதியாக இடம்பெற்றுவரும் மாற்றங்களுக்கு ஏற்றவகையில் பிரச்சனைகளை தீர்க்கத்தக்க செயற்றிட்டங்களை உருவாக்கி மாணவர்கள் தங்களது திறமைகளை வளர்ப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்கும் வகையில் பிரச்சினை தீர்த்தல் மாதிரிகளை பாவித்தல்.

## மனப்பாங்குசார் குறிகாட்டிகள்

ஆசிரியர் பின்வரும் விழுமியங்களை கடைபிடிப்பவராக இருப்பார்

01) புத்தாக்கமுள்ள சர்வதேச தரத்திலான கற்றல் சூழலை உருவாக்குவதற்கான சவால்களை எடுத்தல்.

02) சர்வதேச தரத்திலான செயற்றிட்டங்களை செயற்படுத்துகின்ற பொழுது கற்பவர்களை ஊக்குவிப்பதன் தேவையை உணர்தல்.

03) சர்வதேச ரீதியில் இடம்பெறும் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவகையில் விமர்சன ரீதியாக சிந்தித்தல் பிரச்சனைகளைத் தீர்த்தல் திறன்கள் என்பவற்றை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்தல்

04) கற்பவர்களுக்கு விசாரணையுடன் கூடிய திட்டமிடப்பட்ட சர்வதேச ரீதியிலான அனுபவங்களை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்தல்.

05) தனிப்பட்ட மாணவர்கள் ஒவ்வொருவரினதும் கலாசாரத்தின் அடிப்படையில் காணப்படுகின்ற வேறுபாடுகளுடன் அவர்களது வேறுபட்ட சிந்தனைகள், நோக்குகைகள், கருத்துக்கள், கற்றல் பாங்குகள், கற்றல் அணுகுமுறைகள் என்பவற்றை மதிக்கின்றமை

## இலங்கைச் சூழலமைவில் நடைமுறைப்படுத்தல்

நவீன உலகில் கற்பவரது கற்றல் தேவைகளை நிறைவேற்றும்வகையில் இலங்கை ஆசிரியர்கள் எவ்வளவு தூரம் தயார்நிலையில் இருக்கின்றனர் மற்றும் ஆசிரியர்களின்

வாண்மைவிருத்திக்கான ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் எவ்வளவுதூரத்திற்கு தமது ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்டச் செயற்பாடுகளை நவீன உலகத்திற்கு ஆசிரியர்களைப் பொருத்தப்பாடு அடையும் வகையில் மறுசீரமைப்பு செய்கின்றனர் என்பவை கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயங்களாகும்.

இலங்கைக் கண்ணோட்டத்தில் நோக்குகின்ற பொழுது முதற்படியாக ஆசிரியர் தொழிலுக்குள் உள்நுழைந்தவர்களில் எத்தனைபேர் ஆசிரியர்சேவையை தமது முதல்விருப்பத் தெரிவாக தெரிவுசெய்தனர் என்பதும் எவ்வளவுதூரம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர் என்பதும் சிந்திக்கப்படவேண்டிய விடயமாகும். பயிற்சி பெறாத எவரும் கற்பிப்பதற்காக வகுப்பறைக்குள் நுழையக்கூடாது என்ற தத்துவத்திற்குகேற்ப ஆசிரியர்களுக்கு முன்சேவைக்கால பயிற்சிகளை வழங்குகின்ற ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டவரைபுகள் இல்லாது இருக்கின்ற குறைபாடுகள் நீக்கப்படும்வகையில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி தொடர்பான கொள்கைகளை வகுப்பவர்கள் தமது கவனத்தை செலுத்தவேண்டிய தேவையுள்ளது. மேலும் ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குகின்ற பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள் தமக்குள்ளே எவ்வளவு தூரத்திற்கு ஒரு சீரமைக்கப்பட்ட கலைத்திட்டத்தைப் பின்பற்றுகின்றனர் என்பதும் காலத்தின் அடிப்படையில் மாணவரது கற்றல் தேவைகள் மாறுபடுகின்ற பொழுது, இவர்களது தேவைகளை நிறைவேற்றும்வகையில் ஆசிரியர்கள் தமது பாடம்சார்ந்த போதனைசார்ந்த நிபுணத்துவத்தை இற்றைப்படுத்தும்வகையில் எவ்வளவுதூரம் தாமே செயற்படுகின்றனர் என்பதும் இதற்கான வாய்ப்புகளை தொடர்புடைய நிறுவனங்கள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களை இணைத்த வகையில் கலைத்திட்டத்தை வடிவமைத்து புத்துயிர்ப்பு அளிக்கும்வகையில் செயற்படுகினறன என்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

**உசாத்துணை**

Global-Ready Teacher Competency Framework: Standards and Indicators, From https://docplayer.net/12344839-Global-ready-teacher-competency-framework-standards-and-indicators.html

# ஆசிரியர்களுக்கான தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு

கலாநிதி எப்.எம்.நவாஸ்தீன்*

## அறிமுகம்

*கற்பித்தல் என்பது உயர்வானதொரு வாண்மைத் தொழிலாகும். அது ஒரு தனி நபரின் குணவியல்புகள், திறமைகள் மற்றும் எதிர்காலத்தினை வடிவமைகின்றது. என்னை ஒரு சிறந்த ஆசிரியனாக மக்கள் நினைவில் வைத்துக் கொள்வாரெனில் அதுவே எனக்கு கிடைத்த மிகப் பெரிய கௌரவமாகும் - ஏ. பி. ஜே. அப்துல் கலாம்.*

கற்பித்தலே ஆசிரியரின் மிகப் பிரதான பணியாகும். ஆசிரியரின் கற்பித்தல் வகிபங்கு பல்வேறு காலகட்டங்களினூடக நிலைமாற்றம் பெற்று வந்துள்ளது. பாடங்களை நெட்டுரு செய்து பாடவிடயங்களை ஒப்புவிப்பது இன்று ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. தற்காலத்தில் மாணவர்களை கற்றலுக்கு தயார்படுத்தும் வகையில் தமது கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளவே ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஆசிரியர்கள் தம்மை பலவழிகளில் தயார் செய்து கொள்ள வேண்டியதாக உள்ளது. மாணவர்கள் மத்தியில் சிறந்த ஆசிரியராக தம்மை நிலைநிறுத்தி கொள்ளவதற்கு, காலமாற்றத்திற்கு ஏற்ப ஆசிரியர் பணியில் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வது மிக முக்கியமாக உள்ளது. இந்தவகையில் கற்றலை எளிதாக்குதலே இன்று ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படும் மிக முக்கியமான பணியாக உள்ளது. இதற்காக கற்றல் கற்பித்தல் செயன்முறையில் பல்வேறு அறிவு, திறன்களை ஒன்றிணைக்க வேண்டிய தேவை உடையவர்களாக உள்ளனர். அவற்றில் கல்வித் தொழினுட்பமும் ஒன்றாகும். ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் செயன்முறையில் ஈடுபடும்போது அவர்கள் அறிந்திருக்க வேண்டிய பல விடயங்கள் காணப்படுகின்றன. தொழினுட்பத்தினை ஒன்றிணைக்கும் போது அவர்கள் கொண்டிருக்க வேண்டிய முக்கியமானதோர் அறிவாகக் கருதப்படும் TPCK என ஆங்கிலத்தில் சுருக்கமாக அறியப்படும் தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு தொடர்பாக இக்கட்டுரை விளக்குகின்றது.

*சிரேஷ்ட விரிவுரையாளர்,
*இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
*Email: fmnaw@ou.ac.lk*

ஆசிரியர்கள் தமது கற்பித்தல் தொடர்பாக சிக்கலானதும், பன்முகத்தன்மை கொண்டதும், வரையறுக்கப்பட்ட அறிவினை கொண்டுள்ளனர். இதில் பின்வரும் அறிவுகள் மிக முக்கியமாக ஆசிரியர்கள் கொண்டிருக்க தேவையுடையவர்களாக உள்ளனர்:

உள்ளடக்க அறிவு – Content Knowledge (CK)


போதனா அறிவு – Pedagogical Knowledge (PK)

தொழினுட்ப அறிவு – Technological Knowledge (TK)

மேற்கூறப்பட்ட மூன்று வகையான அறிவுகளையும் இணைத்த வகையில் கொண்டிருக்க வேண்டிய அறிவே TPCK எனப்படும் தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு ஆகும். இவ்வறிவுகள் தனித்தும், ஒன்றோடு ஒன்று இணைந்தும் தொழிற்படுவதாக காணப்படும். உள்ளடக்க அறிவு (CK), போதனா அறிவு (PK), தொழினுட்ப அறிவு (TK) என்பன ஒன்றோடு ஒன்று இடைவினைப்படும் போது பின்வரும் புதிய அறிவுகள் தோற்றம் பெறுகின்றன. அவையாவன:

1. போதனா உள்ளடக்க அறிவு (PCK)
2. தொழினுட்ப உள்ளடக்க அறிவு (TPK)
3. தொழினுட்ப போதனா அறிவு (TCK)
4. தொழினுட்ப போதனா உள்ளடக்க அறிவு (TPCK)

இந்த அறிவுகளின் இடையே ஏற்படும் இடைத் தொடர்புகளும் அவற்றினால் உருவாக்கம் பெறும் அறிவுகளையும் உரு1 விளக்கிக் காட்டுகிறது




உரு 1. தொழினுட்ப போதனா உள்ளடக்க அறிவு

## தொழினுட்ப அறிவு (TK)

ஆசிரியர்கள் தமது கற்பித்தல் செயன்முறையினை வினைத்திறனை அதிகரிக்கவும், தாம் எடுத்து கூற விரும்பும் செய்திகளை இலகுவாக மாணவர்களிடம் கொண்டு செல்ல பல்வேறு கற்பித்தல் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டி உள்ளனர். இதனை கற்பித்தல் அல்லது கல்வி தொழினுட்பம் என்கிறோம். ஆசிரியர்கள் வகுப்பறையில் காணப்படும் கரும்பலகை, வெண்கட்டி, பாடநூல் போன்ற ஆகக்குறைந்த மட்டத்திலான கற்பித்தல் தொழினுட்பங்கள் தொட்டு, இன்றைய டிஜிட்டல் யுகத்தில் பயன்பாட்டில் உள்ள இணையம், டிஜிட்டல் காணொளிகள், ஊடாடும் வெள்ளைப் பலகைகள், பல்வேறு மென் பொருட்கள், திறன் செல்லிடத் தொலைபேசியில் பயன்படுத்தக் கூடிய பல்வேறு யூள எனப்படும் செயலிகள் வரையிலான நவீன தொழினுட்பங்கள் பற்றிய அறிவினையே தொழினுட்ப அறிவு என இங்கு அடையாளப்படுத்தப்படுகிறது. ஆசிரியர்கள் , தமது கற்றல் கற்பித்தலில் சிறந்து விளங்க இந்த தொழினுட்ப அறிவினைப் பெற்றவர்களாவும், பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவற்றைப் பிரயோகிக்கும் ஆற்றல்களை பெற்றிருப்பதும் முக்கியமாகின்றது. ஆனால் விரைந்து மாறி வரும் உலகில் வகுப்பறையில் பயன்படுத்தக் கூடிய இக்கற்பித்தல் தொழினுட்பங்களும் விரைந்து மாற்றம் கண்டு வருகின்றது. இன்று அதிகமாக திறன் வகுப்பறைகள் நாட்டின் நாலா புறங்களிலும் அமைக்கப்பட்டு வருவதும், ஆசிரியர்கள் தமது கற்றல் -கற்பித்தல் நடவடிக்கைகளுக்கான நவீன தொழினுட்பங்கள் பற்றிய அறிவும், அவற்றை கையாளும் திறன்களையும் பெற்றிருப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

## உள்ளடக்க அறிவு (CK)

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடத்தில் அல்லது பாடங்களில் போதிய அறிவினைப் பெற்று இருப்பது உள்ளடக்க அறிவு என கூறப்படுகிறது. ஆசிரியர் தாம் கற்பிக்கப் போகும் பாட அலகில் உள்ள மையக் கருத்துக்கள், பல்வேறு எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், குறித்த பாட அலகுடன் தொடர்பான பல்வேறு செயன்முறைகள் பற்றி போதிய அறிவினை கொண்டிராமல் சிறந்த முறையில் கற்பித்தலை மேற்கொள்ள முடியாது. இதன் காரணமாவே, ஆசிரியர் தொடர்பான முன் சேவை பயிற்சிகளில் உள்ளடக்க அறிவுக்கும் அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. போதிய உள்ளடக்க அறிவு இல்லாத ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களினை தவறான எண்ணக்கரு விளக்கம் ஏற்படும் வகையில் கற்பித்து விடும் அபாயம் உள்ளது.

## போதனா அறிவு (PK)

ஆசிரியர்கள் தமது வாண்மையில் சிறந்து விளங்க போதிய போதனா அறிவினையும் பெற்றவர்களாவும் இருத்தல் வேண்டுமாகிறது. பல்வேறு கற்றல் கற்பித்தல் முறைகள், வகுப்பறை முகாமைத்துவம், கணிப்பீடும் மதிப்பீடும், பாடவேளை திட்டமிடல், மாணவர்

எவ்வாறு கற்கின்றனர் என்பது போன்ற இன்னோரன்ன விடயங்களில் அறிவு கொண்டிருப்பது போதனா அறிவு எனப்படுகிறது.

## போதனா உள்ளடக்க அறிவு (PCK)

போதனா அறிவும், உள்ளடக்க அறிவும் ஒருங்கிணையும் போது உருவாக்கம் பெறுகின்ற அறிவே போதனா உள்ளடக்க அறிவாகும். ஆசிரியர் தான் கற்பிக்க போகும் பாட விடயத்தை கற்பித்தல் செயலொழுங்குடன் இணைக்க போதனா உள்ளடக்க அறிவு அவசியமாகின்றது. ஒருவர் கற்பிக்கப் போகும் பாடஉள்ளடக்கங்களில் மாத்திரம் போதிய அறிவை பெற்றிருப்பது போதாது. அவற்றை, எங்கே, எப்போது, எப்படி, எந்தளவு, யாருக்கு கற்பிக்க வேண்டும் என்ற அறிவும் இருத்தல் அவசியமாகின்றது. இந்த PCK எனப்படும் எண்ணக்கருவை சுல்மன் (Shulman, 1986) என்பவரே அறிமுகப்படுத்தினார். சிறந்த போதனா அறிவையும் உள்ளடக்க அறிவினையும் கொண்டுள்ள ஆசிரியர்கள் தமது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

## தொழினுட்ப உள்ளடக்க அறிவு (TCK)

பாட விடயத்தில் போதிய விளக்கங்களை கொண்டுள்ள ஒருவர், அதனை கற்பிப்பதற்கு தொழினுட்பத்தை நாட வேண்டியுள்ளது. ஏனெனனில், கற்பித்தல் எனபது ஒரு வகையில் ஒரு தொடர்பாடல் செயன்முயாகும். தொடர்பாடல் செயன்முறையில் செய்தி அனுப்புவர் மற்றும் செய்தியை பெறுபவர் என இரு தரப்பினர் காணப்படுவர். இங்கு செய்தியை வினைத்திறன் மிக்க வகையில் அனுப்புவதற்கு பொருத்தமான தொடர்பாடல் ஊடகம் தேவையாகின்றது. தொடர்பாடலினை ஒந்த செயன்முறையாக கற்றல் கற்பித்தல் செயன்முறையும் காணப்படுகின்றது. வகுப்பறையில் ஆசிரியர் தகவல் அனுப்புவராக காணப்பட மாணவர்கள் தகவல்களை பெறுபவர்களாக காணப்படுகின்றனர். இந்நிலையில் ஆசிரியர் தனது பாட விடயம் என்னும் தகவலை சிறந்த முறையில் மாணவர்களிடம் வழங்க பல்வேறு தொழினுட்ப சாதனங்களை கற்பித்தல் ஊடகங்களாக பயன்படுத்த வேண்டி இருக்கும். எனே, பாட விடயம், கற்கும் மாணவர்களின் பண்புகள், வகுப்பறை சூழமைவுகள் எனப் பலவற்றை கவனத்தில் கொண்டு தொழினுட்ப தெரிவுகளை மேற்கொள்ள வேண்டும். தனது பாடஅலகினை பொருத்தமான தொழினுட்பத்துடன் இணைக்கும் அறிவு தொழினுட்ப உள்ளடக்க அறிவு எனப்படுகின்றது.

## தொழினுட்ப போதனாசார் அறிவு (TPK)

தொழினுட்ப உள்ளடக்க அறிவினை ஆசிரியர்கள் கொண்டிருப்பது மட்டுமன்றி தொழினுட்ப போதனா சார் அறிவினையும் கொண்டிருப்பது அவசியமாகும். பல்வேறு தொழினுட்பங்களை

எவ்வாறு கற்பித்தலில் பயன்படுத்த முடியும் என்ற அறிவே இதுவாகும். வெறுமனே கற்பித்தலில் பயன்படுத்தப்படும் பல்வேறு தொழினுட்பங்கள் பற்றிய அறிவினை மாத்திரம் கொண்டிராமல் அவற்றை சிறந்த முறையில் கையாளும் திறங்களையும் இணைத்தே இந்த அறிவு நோக்கப்படுகிறது.

## தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு (TPCK)

மேலே எடுத்துக்கூறப்பட்ட உள்ளடக்க அறிவு, போதனா அறிவு, தொழினுட்ப அறிவு, போதனா உள்ளடக்க அறிவு, தொழினுட்ப உள்ளடக்க அறிவு, தொழினுட்ப போதனா அறிவு ஆகிய ஆறு வகையான அறிவுகளையும் ஒன்றிணைத்த வகையில், ஆசிரியர்கள் தற்காலத்தில் அவசியம் கொண்டிருக்கவேண்டிய அறிவாக தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு கருத்தில் கொள்ளப்படுகிறது. தற்காலத்தில் ஆசிரியர்களின் வகிபங்கு முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. தற்போது இருபத்தியோராம் நூற்றாண்டிற்கு தேவையான சமூக மனவெழுச்சி திறன்களை மாணவர்களிடம் விருத்தி செய்ய வேண்டிய நிலையில் ஆசிரியர்கள் உள்ளனர். அதேவளை, இன்றைய மாணவர்களின் கற்றல் தேவைகளும், கற்றல் மீதான விருப்புக்களிலும் பெரிய மாற்றங்கள் நிறைந்து காணப்படுகின்றன. இத்தைய பின்னணியில் கற்றல் கற்பித்தல் என்பதுமுன் எப்போதும் இல்லாத வகையில் ஒரு சவால்மிக்க விடயமாகவே உள்ளது. ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலில் இன்னமும் மரபு ரீதியான வழிவகைகளை பின்பற்றாது,மாறி வரும் தேவைகளை விளங்கிக்கொண்டவர்களாக புதிய கற்பித்தல் பணிகளில் விரைவாக வளர்ந்துவரும் தொழினுட்பங்களையும் ஒருங்கிணைத்து கற்பிக்க வேண்டியவர்களாக உள்ளனர். இவ்வாறு நவீன தொழினுட்பங்களை கற்றல் கற்பித்தலில் ஒன்றிணைக்கும் வகையில் வலியுறுத்தப்படும் ஒரு விடயமே இந்த TPCK அல்லது TPACK எனும் தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவாகும். ஏற்கனவே கூறியது போல் சுல்மன் என்பவரது போதனா சார் உள்ளடக்க அறிவு எனும் கோட்பாட்டு எண்ணக்கருவில் இருந்து இந்த தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவு உருவாக்கம் பெற்றுள்ளது. கல்வியியல் ஆய்வுகளில் இவற்றை மாதிரி சட்டகங்களாகக் அல்லது மாதிரியுருக்களாக கொண்டு பல ஆய்வுகளும் வெளிவந்தமுள்ளன.

தற்காலத்தில், எமது பாடசாலை வகுப்பறைகள் படிப்படியாக திறன் வகுப்பறைகளாக மாறி வருகின்றன. எமது நாட்டில் இருந்து புலம் பெயர்ந்து வளர்ச்சிபெற்ற நாடுகளில் வாழும் மக்கள், தாம் கல்வி பயின்ற பாடசாலைகளின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொள்கின்றனர். இதன் காரணமாக, பல பாடசாலைகளின் வகுப்பறைகள் நவீன பல தொழினுட்ப சாதனங்களினை கொண்டதாக மாறியுள்ளன. அதேபோன்று அரசும். படிப்படியாக திறன்பாடசாலைகளை நோக்கி நகர்கின்றது. அதேவளை மாணவர்களின் கற்றல் பாணிகளிலும் மாற்றங்கள் பல நிகழ்ந்தேறுகின்றன. முன்னர் புத்தக வாசிப்பில் ஆர்வம் காட்டிய மாணவர்கள் நவீன தொழினுட்ப சாதனங்களின் பால் வெகுவாக ஈர்க்கப்பட்டு உள்ளனர். இச்சூழமைவில் ஆசிரியர்கள் தம் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் நவீன தொழினுட்ப சாதனங்களை ஒன்றிணைக்க வேண்டிய தேவையில் உள்ளனர். எனவே

மேற்கூறிய ஆறு வகையான அறிவுகளையும் ஒன்றிணைத்த வகையில் TPCK எனும் தொழினுட்ப போதனாசார் உள்ளடக்க அறிவினை தம்மிடம் கொண்டிருப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

## உசாத்துணைகள்


Kleickmann, Thilo & Richter, Dirk & Kunter, Mareike & Elsner, Juergen & Besser, Michael & Krauss, Stefan & Baumert, Jürgen. (2012). Teachers' Content Knowledge and Pedagogical Content Knowledge: The Role of Structural Differences in Teacher Education. *Journal of Teacher Education. 64*. 90-106. 10.1177/0022487112460398.

Halim, L., & Meraah, S. M. (2002). Science trainee teachers' pedagogical content knowledge and its influence on physics teaching. *Research in Science & Technological Education*, 20,215-225. doi:10.1080/0263514022000030462

Santrock (2018) *Educational Psychology: Theory and Application to Fitness and Performance*, Sixth Edition, McGraw-Hill Education

Shulman, L. S. (1986). Those who understand: Knowledge growth in teaching. *Educational Researcher, 15*(2), 4-14. doi:10.3102/0013189X015002004

Shulman, L. S. (1987). Knowledge and teaching: Foundations of the new reform. *Harvard Educational Review, 57*(1), 1-22.

# உலகளாவிய ரீதியில் காணப்படும் முன்பிள்ளைப் பருவக் கல்வி முறைமைகள்

கலாநிதி தேவராசா முகுந்தன்*

## அறிமுகம்

மனிதனின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு ஆதாரமாக கல்வி அமைகின்றது. முறைசார் கல்வியின் அத்திவாரமாக முன்பிள்ளைப்பருவக் கல்வி அமைகின்றது. முன்பிள்ளைப் பருவக் கல்வி என்பது முழுமையான கல்வியமைப்பின் முதற்படியாகும். இக்கல்வி பிள்ளைகளுக்கு ஆக்கபூர்வமான கற்றலை உருவாக்குகின்றது. ஐந்து வயதுக்குட்பட்ட பிள்ளைகளை அன்றாட வாழ்க்கைக்கும் பாடசாலைக்கும் தயார்ப்படுத்த இக்கல்விமுறை துணை செய்கின்றது. பிள்ளைகளின் சுகாதாரத்தைப் பேணுவதிலும் அதனைக் கண்காணிப்பதிலும் பொது சுகாதார மருத்துவதாதிகள், பிள்ளைப் பராமரிப்பாளர்கள், பெற்றோர் ஆகியோர் முக்கிய வகிபங்கை வகிக்கின்றனர். எனினும் அவர்களுக்கு இப்பருவத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு போதுமானதாகவுள்ளதெனக் குறிப்பிட முடியாதுள்ளது. முன்பள்ளிகளில் தமக்கு அளிக்கப்படும் கற்றலால் பிள்ளைகள் பெருமளவு பயனடைகின்றனரெனலாம். எனினும் இலங்கையில் காணப்படுகின்ற பெரும்பாலான முன்பள்ளிகள் தனியாருக்குச் சொந்தமானவையாகக் காணப்படுகின்றன. பொருளாதாரக் காரணிகளால் இம்முன்பள்ளிகளில் பயில்வதற்கு இலங்கையில் உள்ள அனைத்துப் பிள்ளைகளாலும் இயலாதுள்ளது. மேலும் இம்முன்பள்ளிகள் முறைப்படியாக ஒழுங்கபடுத்தப்படாமலும் நியமாக்கப்படாமலும் உள்ளன. இலங்கையில் உள்ள இம்முன்பள்ளிகளில் போதிய வளங்கள் காணப்படவில்லை. மேலும் இலங்கையில் உள்ள முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் இங்கு கற்பிப்பதற்குரிய அடிப்படைத் தராதரங்களைக் கொண்டிராதவர்களாய் உள்ளதோடு இந்த முன்பள்ளிகளில் பொதுவான கலைத்திட்டம் காணப்படவில்லை. இலங்கை முன்பள்ளிகளில் பிள்ளைகளின் நுண்ணியக்கத்திறன்கள், சமூக உள திறன்கள், அறிகைப்புலத் திறன்கள் விருத்தி என்பவற்றில் கவனம் செலுத்தப்படாமலும் உள்ளன. அத்துடன் இங்குள்ள பெரும்பாலான முன்பள்ளிகள் பொருத்தமான முன்பள்ளி முறைகளை பின்பற்றாமல் தான்தோன்றித்தனமாகத் செயற்படுகின்றன. இந்தப் பின்புலத்தில் உலகலாவிய ரீதியல் பின்பற்றப்படும் முன்பள்ளி முறைகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

*சிரேஷ்ட விரிவுரையாளர்,
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்ப கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
Email: tmuku@ou.ac.lk

## முன்பள்ளிக் கல்வியின் தோற்றம்

பிள்ளைகளின் இயல்புகள், விருப்புங்கள், ஆர்வங்கள், தேவைகள் போன்றன வளர்ந்தோருடையதைக் காட்டிலும் வேறுபட்டன என்ற கருத்தை கி.பி. 1700 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு பல சமூகவியலாளர்கள், உளவியலாளர்கள், தத்துவவியலாளர்கள், கல்வியியலாளர்கள் ஆகியோர் சுட்டிக்காட்டி வருகின்றனர். ஐரோப்பாவில் முன்பிள்ளைப்பருதத்தினைப் பற்றிய கருத்துக்களை பெஸ்டலோசி, மரியா மொண்டிசூரி, பிரெட்டிக் புரொபல் ..போன்ற கல்வியலாளர்கள் முன்வைத்தனர். இவர்களின் கருத்தக்களின் தாக்கத்தினால் அங்கு முன்பிள்ளைப்பருவக் கல்வி இயக்கம் தொடங்கியது. பிரெட்டிக் புரொபெல் முன்பள்ளிகளில் பயன்படுத்தக் கூடிய சாதனங்களைப் பற்றிக் குறிப்பிட்டார். புரொபெலின் கருத்துக்கள் ஐக்கிய அமெரிக்காவிலும் ஜேர்மனியிலும் தாக்கத்தைச் செலுத்தியது. பிள்ளைகளின் சுற்றாடல் பற்றிய மரியா மொண்டிசூரி அம்மையாரின் கருத்துக்களும் முன்பள்ளிக் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியது எனலாம். பெஸ்டலோசி முன்வைத்த சிறுவர்களுக்கு என சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கல்விமுறையானது ஐரோப்பியப் பாடசாலைகளில் பெருமளவு செல்வாக்கைச் செலுத்தியது. இவர்களின் கருத்தக்களின் தாக்கத்தினால் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிள்ளைகளின் கல்வி பற்றி சிந்தனை தோன்றிது. பிரான்ஸ் . இங்கிலாந்து போன்ற நாடுகளில் முன்பள்ளிகள் தோற்றம் பெற்றன. சர்வதேச இயக்கங்கள் முன்பிள்ளைப் பருவக் கல்வி பற்றிய அவசியத்தை வலியுறுத்தின. சிறுவர் பட்டயம் - 1959 ஆம் ஆண்டு – பிள்ளைகள் முழு விருத்தியடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியது. இக்காரணிகளின் செல்வாக்கினால் முன்பள்ளிக் கல்வியின் முக்கியத்தவம் உணரப்பட்டு பல்வேறு நாடுகளிலும் முன்பள்ளிக் கல்வி தோற்றம் பெற்றது.

## முன்பள்ளிக் கல்வியின் வகைகள்

உலகில் பல்வேறு வகையான முன்பள்ளி முறைமைகள் காணப்படுகின்றன (Ahdan,2016). அவையாவன

- பொது முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம், (Public preschool program)
- முதல் ஆரம்ப முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் (Head-start preschool program,)
- மொண்டிசூரி முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் (Montessori preschool program)
- வோல்டொர்ப் முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் (Waldorf preschool program),
- ரெஜியோ எமிலியா முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம் ( Reggio Emilia preschool program)
- உயர் நோக்கு முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம் (HighScope preschool program)
- பேங்க் ஸ்ட்ரீட் முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம (Bank Street preschool program)
- பெற்றோர் கூட்டுறவு முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம (Parent Co-op preschool program)

இந்த ஆசிரியர்கள் நிகழ்ச்சித் திட்டங்களின் தன்மைக்கமைய பிள்ளைகளை 2, 3, 4 வயதுகளில் பயிற்றுவிக்கின்றனர். இம்முன்பள்ளி முறைமைகளை ஒவ்வொன்றாக ஆராந்த பார்ப்பது பொருத்தமானதாகும்.

## பொது முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் (Public preschool program)

பொது முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் 1960 ஆம் அண்டு ஐக்கிய அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டமானது அமெரிக்காவில் மாநிலங்களுக்கு கிடைக்கும் வளங்களுக்கேற்ப அங்கு மாநிலங்களுக்கு மாநிலம் வேறுபட்டுக் காணப்பட்டது. இது மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையான விசேட தேவையுள்ள பிள்ளைகள் மற்றும் ஏனைய பிள்ளைகளுக்கு விரிவான ஒண்றிணைந்ததாக நிகழ்ச்சித்திட்டமாக விளங்குகின்றது. பிள்ளைகளுக்குத் தூண்டுதலை ஏற்படுத்தக் கூடிய பாதுகாப்பான சுற்றாடலுடன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் உடன் வலுவான தொடர்பாடலைக் கொண்டதாகவும் இந்த முறை காணப்படுகின்றது. பிள்ளைகளைச் சமூகமயப்படுத்தல், திறன்களின் விருத்தி, தொடர்பாடல் மற்றும் நடத்தை விளையாட்டு ஆகியவற்றில் அவர்களைத் தயாரப்படுத்தல் போன்றன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கமாகக் காணப்படுகின்றன.

முன்பள்ளியில் பயிலும் மாணவர்களின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கற்றல் உதவியாளர்கள், அறிவுறுத்தல் உதவியாளர்கள், உயர்திறன்களைக் கொண்ட ஆசிரியர்கள், விசேட நிபுணர்கள் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மேலும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் கற்பித்தல் நேரங்களாக முற்பகல் 9.00 மணி தொடக்கம் முற்பகல் 11.30 வரை, அல்லது பிற்பகல் 12.30 தொடக்கம் பிற்பகல் 3.00 மணி வரையான காலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## முதல் ஆரம்ப முன்பள்ளி நிகழ்ச்சித்திட்டம் (Head-start preschool program)

இத்திட்டம் ஐக்கிய அமெரிக்காவின் சுகாதார மற்றும் மனித சேவைகள் திணைக்களத்தால் 1956 ஆம் ஆண்டுஏழைப் பிள்ளைகளின் வறுமை நிலையினைக் குறைக்கும் நோக்கத்துடன் முதல் ஆரம்ப முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டமானது உருவாக்கப்பட்டது. இத்திட்டமானது இப்பிள்ளைகள் நான்கு வயதிலிருந்தே இலவசக் கல்வியில் இணைந்து கொள்வதற்கு உறுதுணையாகவுள்ளதோடு உள்ளூர் மட்டத்திலேயே கட்டுப்பாடுத்தக் கூடியதாகவுள்ளது.

தேவாலயங்கள், இலாபநோக்கமற்ற முகவர்கள் போன்ற உள்ளூர் நிறுவனங்களுக்கு, அவை பிள்ளை மேம்பாடுகுறித்து பின்பற்றும் திட்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பொறுப்புவகிப்பதற்கும் மானியம் வழங்கப்பட்டது. மேலும் இத்திட்டமானது பிள்ளையின் உறுதியான குடும்ப உறவுகளை வளர்த்தல், பிள்ளைகளின் பௌதிக மற்றும் உணர்வுகளை விருத்தி செய்தல், அறிகைப்புலத் திறன்களை விருத்தி செய்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டது. பிள்ளைகளைப் பொறுத்தவரையில் முன்பள்ளியில் இருந்து ஆரம்பப் பாடசாலைக்கு மாறிச் செல்வது விருத்தி தொடர்பான

சவாலான விடயமாகக் காணப்படுகின்றது. அதாவது பிள்ளைகள் முன்பள்ளிகளில் இருந்து ஆரம்பப் பாடசாலைக்ச் செல்லும் போது தமது குடும்ப வலையமைப்பக்கு வெளியே சகபாடிகளுடன் நெருங்கிப் பழகுதல், வகுப்பறையில் உள்ள இடவசதிகளை அனுசரித்தல், பாடசாலையின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்தல் போன்றவற்றில் சவால்களை எதிர்நோக்குகின்றனர். பிள்ளைகள் இச்சவால்களுக்கு முகங்கொடுக்கத்தக்கவாறு இங்கு பயிற்றுவிக்கப்படகின்றனர்.

இதன் கலைத்திட்டமானது தொடர்பாடல் செயற்பாடுகள், படம் வாசித்தல், எழுதும் அறிவு என்பவற்றை உள்ளடக்கியது. பிள்ளைகள் அடுத்த மட்டத்திற்குச் செல்வதற்காக வருட இறுதியில் சோதனையும் வழங்கப்பட்டது (Mongeau, 2016).

வறுமைக்கோட்டு மட்டத்திற்குக் கீழுள்ள பிள்ளைகளே இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் உள்வாங்கப்படுகின்றனர். இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் கட்டாயமாக பட்டதாரிகளாக இருத்தல் வேண்டம் அல்லது பட்டப்பபடிப்பொன்றை பயில்வதற்காக பதிவு செய்து பயின்று கொண்டிருக்க வேண்டும்.

## மொண்டிசூரி முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

மரியா மொண்டிசூரி அம்மையாரால் 1907 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்ட முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டமானது  மொண்டிசூரி முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் எனப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் தமது இளமாணிப் பட்டத்தினை ‘‘மொண்டிசூரி குழந்தைகள் இல்லத்தில்’’ (Montesori House of Children) பெறுதல் வேண்டும். இப்பட்டமானது உலகலாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதாகும். மொண்டிசூரி நிகழ்.சிசித் திட்டத்தின் கலைத்திட்டமானது. புலன்களை விருத்தி செய்யும் செயற்பாடுகள், கணிதம், கலாசாரச் செயற்பாடுகள், நேரடி அனுபவங்கள்,  இயற்கை, ஆக்கத்திறன் மற்றும் சமூக நடத்தைகள் போன்றன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மரியா மொண்டிசூரி நிகழ்சிச்த் திட்டத்தின் இலக்குகளாக பிள்ளைக்குத் தேவையான,  ஒழுக்க விருத்தி, கல்வித் திறன், புலன்கள், செயல்முறை வாழ்க்கைத் திறன்கள் என்பன விளங்குகின்றன.

இந்நிகழ்ச்சித் திட்டத்தில் இரண்டரை வயதிலிருந்து ஐந்து வயது வரையான பிள்ளைகள் உள்வாங்கப்படுவதோடு அவர்களின் வகுப்பறையானது அவர்களுக்கான ‘வாழும் அறை’யாகக் ( living room) கருதப்படுகின்றது. இந்த நிகழ்ச்சித் திட்த்தில் ‘‘ சாதனங்களின் விருத்தி‘‘ யில் இருந்து பிள்ளையின் கவனமானது பாடசாலையைப் பற்றிய நேர்மனப்பாங்கை விருத்தி செய்தல், ஒற்றுமை, சமூக உள விருத்தி, கல்விச் செயற்பாடுகள் என்பவற்றை நோக்கிச் திசைதிருப்பப்படுகின்றது. இங்கு சுயகவனம், சுற்றாடல், கருணை, மரியாதை, பேரியக்கம், நுண்ணியக்கம் என்பவற்றில் நடைமுறை வாழ்வுச் செயற்பாடுகள் கவனம் செலுத்துகின்றன.

பிள்ளைகளின் வரிசைப்படுததல், வகைப்படுத்தல், நீளம், வெப்பநிலை, அகலம், திணிவு, சுருதி, நிறங்கள் விளக்குதல் போன்றவற்றுக்கு புலனங்கச் செயற்பாடுகள், துணைபுரிகின்றன. பிள்ளைகளுக்கு கணிதம் தொடர்கள், இலக்கமிடுதல், குறியீடுகள், செய்கைகள் அடிப்படை உண்மைகளை நினைவுபடுத்தல் என்பவற்றுக்கு உதவுகிறது. இலக்கணம், எழுத்து வெளிப்பாடு, பேச்சு விருத்தி, சிறுவர் இலக்கியம் என்பவற்றை உள்ளடக்கியதாக மொழி இங்கு உள்ளது. மேலும் மொண்டிசூரி நிகழ்ச்சித் திட்டத்தில் மணல்தாள் எழுத்து, எழுத்துக்களையும் ஒலியையும் தொடர்புபடுத்தல், எழுத்துக்கள் எழுதப்பட்ட அட்டையைப் பயன்படுத்தல் என்பவற்றின் மூலம் வாசித்தல், எழுதுதல் திறன்கள் விருத்தி செய்யப்படுகின்றன மேலும் இங்கு கலாசாரச் செயற்பாடுகள் உயிர் விஞ்ஞானம், வரலாறு, இசை, சித்திரம், புவியியல், என்பவற்றை வெளிப்படுத்துகின்றன. (Montessori, The Montessori Preschool Program, 2017).

## வோல்டொர்ப் முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

ருடால்ப் ஸ்ரெயினர் அவர்களால் வோல்டொர்ப் முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம் 1919 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது பிறப்பிலிருந்து ஏழு வருட காலத்தை உள்ளடக்கியுள்ளது. பிள்ளையொன்றின் எதரிகாலமானது அதன் வாழ்வின் முதல் ஏழு அண்டுகளில் பெற்றுக் கொள்ளும் ஆரோக்கியமான அனுபவங்களில் தங்கியுள்ளது. அன்பான அரவணைப்பான சூழல், மகிழ்ச்சி, வியப்பு, பயபக்தி போன்றவற்றை ஏற்படுத்தக் கூடிய இதமான வழிகாட்டல்கள் போன்றன பிள்ளையின் ஆரோக்கியமான விருத்திக்குத் துணைபுரியும் என்ற கூற்றினை அடியொட்டியதாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் வடிவமைக்கப்பட்டள்ளது.

இந்த ஏழு வருடங்களும் பிறப்பிருந்து மூன்று வருடங்கள், மூன்று ஆண்டு தொடங்கி ஏழு ஆண்டு வரை என இரண்டு கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. பிள்ளையின் உடல் ஆன்மா, உணர்வு என்பவற்றை மேலும் சிறப்புறுத்துவதற்காக செயற்பாடுகள் உருவாக்கப்பட்டள்ளன. ஆக்கபூர்வமான குழுக்கற்றல், சாதகமான சுற்றாடலுக்கு ஏற்ப ஒத்திசைவுடன் செயற்பாடுகளை மீளமீளச்செய்தல் என்பன இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் வோல்டொர்ப் முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக முன்பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் "வோல்டொர்ப் முறைமைக் கற்பித்தல் சான்றிதழைப்" பெற்றிருத்தல் அவசியமானதாகும். பெரும்பாலான செயற்பாடுகள், நடைமுறைச் வாழ்வு, கதை கூறுதல், பிள்ளையின் ஆர்வத்தினை விருத்தி செய்யக் கூடிய எழுத்து வேலைகள் என்பனவற்றைக் கொண்டதாக இரண்டு தொடக்கம் ஐந்து வரையான பிள்ளைகளுக்கு ஏற்றதாக அமைந்தள்ளன. வளர்ந்தோரின் மனப்பாங்கு, பிள்ளையின் சுற்றாடல், ஒத்திசைவான நாளாந்த வாழ்க்கை, வளர்ந்தோருடன் சுமுகமாகப் பழகுதல் என்பன இதன் கல்வித் தத்துவமாகக் காணப்படுகின்றன (Steiner, 2017).

## ரெஜியோ எமிலியா முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

ரெஜியோ எமிலியா முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டமானது இத்தாலியில் 1940 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் குறிப்பிட்ட தொகுதி கலைத்திட்டம் காணப்படவில்லை. ஆனால் பிள்ளைகளின் ஆராய்வு ஊக்கத்தை விருத்தி செய்யக் கூடிய உபகரணங்கள், சுயவெளிப்பாடு, மற்றும் பிள்ளைகளின் தலைமையிலான திறந்த கற்றல் என்பன இந்த முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பிள்ளைக்கு ஆக்கத்திறன், சிந்தனை என்பவற்றை விருத்தி செய்வதற்காக வழங்கப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி செய்யும் செயற்பாடுகள், சித்திரம், செயற்றிட்டங்கள் என்பவற்றின் மூலம் பிள்ளையின் ஆர்வம் வெளிப்படுத்தப்படும். ரெஜியோ எமிலியா முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டத்தில் ஆசிரியரானவர், உளவழிப்படுத்துநராகவும் வழிகாட்டுநராகவும் செயற்படுவார் (Tricia, 2017).

## உயர் நோக்கு முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

உயர் நோக்கு முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம் 1970 ஆம் ஆண்டு லெவ் விகொட்ஸ்கி அவர்களால் உருவாக்கப்பட்டது. இது பிள்ளைகளுக்கு சுற்றாடல் பற்றிய நேரடியான கற்றல் அனுபவங்களை வழங்கும் நோக்கத்துடன் நாளாந்த நடைமுறைகளுக்கு அமைவாக கவனமாக வடிவமைக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் இதுவாகும். கணிதம், விஞ்ஞானம், வாசிப்பு, சமூகவுணர்வுக் கற்றல், உணர்வுபூர்வமான சுயகட்டுப்பாடு, பிரசினம் தீர்த்தல், நபர்களுக்கிடையிலான முரண்பாடுகளைத் தீர்த்தலினூடாக சமூக விருத்தி போன்றவற்றை வழங்குவதற்கு ஏற்ற வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கல்வி அனுபவம் திட்டமிடப்பட்டுள்ளது. பிள்ளைகள் உலகத்தின் மீதான இடைத்தொடர்பின் மூலம் தமது ஆர்வத்தில் கவனத்தைக் குவித்து முதலடியை எடுத்து வைக்கின்றனர். இதனால் இது மூன்று தொடக்கம் ஐந்து வயது வரையான பிள்ளைகளுக்கான செயல்களில் பங்கேற்றுக் கற்றல் எனப்படுகின்றது (Guadagno, 2004).

## பேங்க் ஸ்ட்ரீட் முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

பேங்க் ஸ்ட்ரீட் முன் பள்ளி நிகழ்ச்சித் திட்டம் லூசி ஸ்ப்ரக் மிட்செல் என்பவரால் 1916 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. லூசி ஸ்ப்ரக் மிட்செல், ஜோன் டூயியின் ‘‘செயல் மூலம் கற்றல்’’ கொள்கையின் செல்வாக்குக்குட்பட்டிருந்தார். லூசி ஸ்ப்ரக் மிட்செல ஆசியர்கள், ஆய்வாளர்கள், உளவியலாளர்கள் ஊடாக பிள்ளைகளுக்கு சிறந்த வகையான கல்வியளிக்கத் தீர்மானித்தார்.

இங்கு கலைத்திட்டமானது நடித்து விளையாடுதல், புதிர்கள், களிமண் மற்றும் அடுக்கு குற்றிகள் (Building Blocks) என்பவற்றினால் பிள்ளையின் உடல் விருத்தி, உணர்வு விருத்தி, சமூக விருத்தி, மனவிருத்தி போன்ற விளையாட்டு அடிப்படையிலான கற்றலின் மூலம், நேரடியான அனுபவங்களை வழங்குதலை அடிப்படையாகக் கொண்டது. பிள்ளைகளுக்கு அறிகைப்புல விருத்தி, உணர்வு விருத்தி என்பனவற்றை வழங்குவதற்காக

பயனுள்ள கற்பித்தல் மேற்கொள்ளப்படும். மேலும் பிள்ளைகள் இடைத்தொடர்பினூடாகக் கற்பதற்கு அனுமதிக்கப்படுவர். பிள்ளைகள் தமது வயதிற்கேற்ப இரண்டு வயது, மூன்று வயது, நான்கு வயது, ஐந்து வயது எனக் குழுக்களாக்கப்படுவர். பின்னர் அவர்கள் காலை அறிவுறுத்தல்களைச் செவிமடுக்கவிடப்படுவர். அதன் பின்னர் அவர்கள் வேறு வயதக் குழுக்களுடன் இணைந்து பணியாற்றுவர், சிலவேளைகளில் தனித்தனியாகவும் பின்பு அவர்கள் செயற்படுவர். மேலும் சில வேளைகளில் நடனவிருந்துகள் மேற்கொள்ளப்படும் (McGolerick, 2013).

### பெற்றோர் கூட்டுறவு முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம்

பிள்ளைகளுக்கும் பெற்றொருக்கும் நேரடி அணுகுமுறையை அளிப்பதற்காக 1916 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்காவில் பெற்றோர் கூட்டுறவு முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டம் தோற்றுவிக்கப்பட்டது. இரண்டரை வயதிற்கும் ஆறு வயதிற்கும் இடைப்பட்ட பிள்ளைகள் பெற்றோர் கூட்டுறவு முன்பள்ளி நிகழ்ச்சித் திட்டத்தில் பயில்கின்றனர். இந்நிகழ்ச்சித் திட்டம் பெற்றோர், ஆசிரியர், பிள்ளைகள் ஆகியோரக்கிடையிலான முரண்பாடுகளை எவ்வாறு ஆரோக்கியமான சூழலில் தீர்த்து வைப்பது என்பதில் கவனத்தைச் செலுத்தியது. நற்பழக்க வழக்கங்கள், சுயாதீனமாக இருத்தல், தன்னைப் பற்றிய கவனம், நேரடி அனுபவம், வெளிசார்ந்த விழிப்புணர்வு, கூட்டறவுக் கற்றல், பொம்மைகள் மற்றும் உபகரணங்களில் கரிசனை என்பன பெற்றோர் கூட்டறவு முன்பள்ளி நிகழ்ச்சித் திட்ட கலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டள்ளன. பிள்ளைகளுக்கும் பெற்றொருக்கும் பாடசாலைக்கு செல்வதற்குரிய துணிவை ஏற்படுத்துகின்றது (Rave, 2017).

### இலங்கையில் தற்போது நிலவும் ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி முறைமைகள்

இலங்கைக் கல்வி அமைச்சிற்கு (2013) ஏற்ப, ஆரம்பப் பிள்ளைப்பருவக் கல்வி (ECE) இலங்கையில் முன்பள்ளிக் கல்வி என்றழைக்கப்படும் வோல்டோர்ப் (Waldorf) முன்பள்ளி வேலைத்திட்டம், மொண்ரிசோரி வேலைத்திட்டம், சர்வதேச பாடசாலைகள் தொழினுட்பம், கல்வி, கலைகள், கலாசாரம், விளையாட்டு, சமூகம், நுண்மதிசார் செயற்பாடுகளை உள்ளடக்கிய மொண்ரிசோரி வேலைத்திட்டத்தினதும் வோல்டோர்ப் வேலைத்திட்டத்தினதும் கலவை ஒன்றினை அவை பாலர் பாடசாலை என்றழைக்கும் மூன்று வகைகளிலான வேலைத்திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. முன்பள்ளிகளுக்கு வயது 3 இலிருந்து சேர்வு அனுமதிக்கப்படுவதோடு மொண்ரிசோர், சர்வதேச பாடசாலைகள் ஆகிய மற்றைய இரண்டிலும் பிள்ளைகள் 5 வயது வரையில் தங்கியிருக்கின்றனர். முன்பள்ளிகளும் மொண்ரிசோரி பாடசாலைகளும் சிங்களம், ஆங்கிலம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் பிள்ளைகளுக்குக் கற்பிப்பதோடு சர்வதேச பாடசாலைகளை ஆங்கிலத்தில் மட்டும் கற்பிக்கின்றன. சகல மொண்ரிசோரி, சர்வதேசப் பாடசாலை தனியாருக்குச் சொந்தமானவையான இருக்கும் அதேவேளையில் சில முன்பள்ளிகள் தனியாருக்கும் சில அரசாங்கத்திற்கும் சொந்தமானவை ஆகும்.

## முடிவுரை

உலகநாடுகளில் பல்வேறு விதமான முன்பள்ளி முறைகள் காணப்படகின்றன. அவற்றுக்கிடைடே பல ஒத்த தன்மைகள் காணப்படுதோடு சில வேறுபட்ட தன்மைகளும் உள்ளன. இலங்கையைப் பொறுத்த வரையில் பல்வேறு முன்பள்ளி முறைகள் பின்பற்றப்பட்டாலும் ஒழுங்குமறையாகப் பின்பற்றப்படாமல் காணப்படும் நிலைமையெ உள்ளது. இலங்கை முன்பள்ளிகள் இந்நாட்டின் சமூக, கலாசார, பொருளாதாரக் காரணிகளைக் கவனத்தில் எடுத்து பொருத்தமான மன்பள்ளி முறைமையைப் பின்பற்றுதல் அவசியமானதாகும்.

## உசாத்துணைகள்


Ahdan, D. (2016, December 19). *What types of early childhood programs are available?* Retrieved September 9, 2019, from Linkedin: https://www.linkedin.com/pulse/what-types-early-childhood-programs-available-how-one-dil-ahdan-

Guadagno, K. (2014, September 6). *Early childhood education and family engagement* . Retrieved September 10, 2019, from State of New Jersey Department of Education : http://www.nj.gov/education/ece/curriculum/desc/highscope.htm

McGolerick, E. W. (2013, September 13). *Whar is a Bank Street apporach to preschool?* Retrieved September 10, 2017, from Sheknows: http://www.sheknows.com/parenting/articles/1008957/what-is-a-bank-street-approach-to-preschool

Montessori, M. (1949). *Asorbant Mind.* Milano: Montessori International.

Montessori, M. (1978). *The secret of childhood.* Milano: Orient Blackswans.

Mongeau, L. (2016, August 9). *The never endings struggle to improve Head Start*. Retrieved September 9, 2017, from The Atlantic: https://www.theatlantic.com/education/archive/2016/08/is-head-start-a-failure/494942/

Rave. (2017, January 2). *About us*. Retrieved September 10, 2017, from Children's Co-op preschool: https://childrenscooppreschool.com/about/

Steiner, R. (2017, January 31). *What is Waldorf Early Childhood Education?* Retrieved September 9, 2019, from International Association for Steiner/ Waldorf Early Childhood Education: http://www.iaswece.org/waldorf-education/what-is-waldorf-education/

Tricia, M. (2017, August 14). *What is The Reggio Emilia Approach?* Retrieved September 9, 2019, from An everyday story: http://www.aneverydaystory.com/beginners-guide-to-reggio-emilia/main-principles/

# இலங்கைப் பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சை தொடர்பான உளநெருக்கீடு

**செல்வி ராஜினி மங்களேஸ்வரசர்மா***

## அறிமுகம்

இன்றைய உலகானது தகவற்தொழிநுட்ப வளர்ச்சி, உட்கட்டுமானங்களின் பெருக்கம் மற்றும் உலகமயமாதல் போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களால் மிகவும் சிக்கற்தன்மை மிக்கதாக மாறிவருவதடன் இன்றைய மக்கள் விரைந்து நிகழும் மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் ஈடுகொடுக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். இச்சடுதியான மாற்றங்கள் மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கலாசார வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கங்கள் காரணமாக அவர்கள் பல உளநெருக்கீடுகளை அனுபவிக்க நேரிடுவதுடன் பல்வேறு உள மற்றும் உடல் ரீதியான பிரச்சினைகளையும் எதிர்கொள்கின்றனர். இத்தகைய உளநெருக்கீடுகள் அனைவரது வாழ்விலும் பொதுவானதாக இருப்பினும் மாணவப்பருவத்தினர் மத்தியில் இதன் தாக்கம் மிகையாக உள்ளது. உயர் கல்விசார் அடைவுகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதியை அல்லது சமூக மதிப்புள்ள தொழில்வாய்ப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக மாணவர்மீது பிரயோகிக்கப்படும் அழுத்தங்கள் அவர்கள் மத்தியில் அதிக உளநெருக்கீட்டை ஏற்படுத்துகின்றன. குறிப்பாக அதிக கற்றற்சுமை, பரீட்சைகள், பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தின் அடைவு நோக்கிய அழுத்தங்கள், கற்றல்சார் தோல்விகள் மற்றும் கருத்துரீதியான முரண்பாடுகள் போன்றவை மாணவர்கள் மத்தியிலான உளநெருக்கீடுகளுக்கு காரணமாகின்றன. எனினும் பரீட்சைகள் காரணமாகவே அதிகளவிலான உளநெருக்கீட்டை மாணவர்கள் அனுபவிப்பதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. அந்தவகையில் இலங்கைப்பாடசாலை மாணவர்கள் எதிர்நோக்கும் பரீட்சை தொடர்பான உளநெருக்கீடுகள், அவற்றின் விளைவுகள் மற்றும் அவற்றை முகாமை செய்வதற்கான அணுகுமுறைகள் பற்றி உற்றுநோக்குவதாக இக்கட்டுரை இடம்பெறுகின்றது.

*சிரேஷ்ட விரிவுரையாளர்,
*இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
*Email: rmang@ou.ac.lk*

## பரீட்சைகளும் அவற்றின் முக்கியத்துவமும்

பரீட்சைமையக் கலாச்சாரத்தின் ஆளுகைக்குட்பட்ட இன்றைய உலகில் பெரும்பாலான நாடுகளில் மாணவர் தொடர்பான கல்விசார் மற்றும் தொழில்சார் தீர்மானங்களை மேற்கொள்வதற்கான பலமிக்க கருவிகளாக பரீட்சைகளே பயன்படுத்தப்படுகின்றன. இங்கு பிள்ளையின் கற்றல்சார் வெற்றியானது பரீட்சைகளிலான ஆற்றுகையின் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது. ஆகையினால் இன்றைய உலகில் வாழும் பிள்ளைகள் தமது கல்விசார் மற்றும் தொழில்சார் தெரிவுகளை மேற்கொள்வதற்கும் அத்தெரிவுகளைத் தமதாக்கிக்கொள்வதற்கும் எண்ணற்ற பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர் (Zeidner, 1995). எனவே இன்றைய போட்டிமிகுந்த உலகில் இப்பரீட்சைகளால் ஏற்படும் தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்து தமது இலக்குகளை அடைந்துகொள்வதற்கும் உடல் மற்றும் உளரீதியான நன்னிலையைப் பேணிக்கொள்வதற்கும் மாணவர்கள் தாம் அனுபவிக்கும் பரீட்சைசார் உளநெருக்கீடுகளை முகாமை செய்ய வேண்டியது அவசியமாகும்.

போட்டிமிக்க கற்றற்சூழல் நிலவும் நாடுகள் பலவற்றில் மாணவர்கள் அதிகளவிலான உளநெருக்கீட்டை அனுபவிப்பதுடன் அதன்விளைவாக மனவழுத்தம், பதட்டம், இதயநோய்கள் போன்ற உடல், உள ரீதியான தாக்கங்களுக்கும் ஆளாகின்றனர். இத்தகைய பிரச்சினைகளைக் கவனத்திற்கொண்டு பல நாடுகளில் “உளநெருக்கீடற்ற கல்வித்திட்டம்” (Stress free education) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது (Sedere, 2020). உதாரணமாக அமெரிக்கா, அயர்லாந்து, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகள் “கற்போன் நேயமான” (Learner friendly) பரீட்சை நடைமுறைகளை அறிமுப்படுத்தியுள்ளன. இந்நாடுகள் மாணவரது கற்றற்பேறுகளை மதிப்பிடுவதற்கு முற்றுமுழுதாக எழுத்துப்பரீட்சைகளில் தங்கியிருப்பதைத் தவிர்த்து தொடர் மதிப்பீடுகள் மூலம் மாணவரின் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டு அவற்றின் அடிப்படையில் வழங்கப்படும் ஆரோக்கியமான பின்னூட்டல்கள் மூலம் மாணவர்கள் தமது இலக்கினை அடைந்து கொள்வதற்கு வழிகாட்டப்படுகின்றனர். இதன்காரணமாக மாணவர்கள் தாமே தமது சுயமுன்னேற்றத்தை அளவிடவும் தமது பலம் பலவீனங்களை இனங்கண்டு சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றல் மூலம் தமது இலக்குகளை அடைந்து கொள்ளவும் சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது.

மேலும் சில நாடுகள் மாணவருக்கு உளநெருக்கீட்டினையும் எதிர்மனவெழுச்சிகளையும் விளைவிக்கக்கூடிய பரீட்சைகளை முழுமையாக நீக்கியுள்ளன. உதாரணமாக உலகின் மிகச்சிறந்த கல்விமுறையை பின்பற்றும் நாடு என புகழப்படும் பின்லாந்து நாட்டில் மாணவர்களை சவாலுக்குள்ளாகும் பரீட்சைகள் நடத்தப்படுவதில்லை. பதிலாக ஆரம்பவகுப்புக்களில் வாய்மொழிமூலமான மதிப்பீடுகள் மூலமே மாணவர்களின் முன்னேற்றம் மதிப்பிடப்படுகின்றது. மாணவர்களின் கல்விசார் அம்சங்கள் மட்டுமன்றி தனிப்பட்ட ஆற்றல்கள், கல்விசாரா செயற்பாடுகள் என்பவற்றின் வளர்ச்சிக்கும் இடமளிக்கும்

வகையிலான கற்பித்தல் முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு சந்தர்ப்பமளிக்கப்படுகின்றது. இத்தகைய கற்போன் நேயமான அணுகுமுறைகள் சில நாடுகளால் பயன்படுத்தப்பட்ட போதும் பெரும்பாலான நாடுகள் இன்னமும் முறைசார் பரீட்சைகளிலேயே தங்கியுள்ளன.

வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் மட்டுமன்றி வளர்ச்சியடைந்த பல நாடுகளிலும் கூட மாணவரிடையே அதிக உளநெருக்கீட்டை ஏற்படுத்தக்கூடிய சவால்மிக்க பரீட்சைகள் நடத்தப்படுவதுடன் அவற்றின் கடினத்தன்மையும் காலத்திற்குக் காலம் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது ஆசிய நாடுகளில் இத்தகைய பரீட்சைகளுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் காரணமாக இந்நாடுகளில் வாழும் பிள்ளைகள் பரீட்சை தொடர்பான உளநெருக்கீட்டினால் கூடுதலான பாதிப்பிற்குள்ளாவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன (Ang & Huan, 2006). கல்விசார் அடைவுகளை விழுமியப்பேறுகளாகவும் தமது சமூக அசைவியக்கத்திற்கான கருவிகளாகவும் கருதும் சமூகக்கட்டமைப்பினைக் கொண்ட ஓர் ஆசிய நாடு என்ற வகையில் இலங்கையின் கல்விமுறைமை, பரீட்சைகள் மற்றும் மாணவர்மீதான அவற்றின் தாக்கங்கள் என்பன தொடர்ந்து நோக்கப்படுகின்றன.

## இலங்கையின் கல்வி முறைமையும் பரீட்சைகளும்

அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாடாகக் காணப்படுகின்ற போதிலும் தென்னாசிய நாடுகளில் அதியுயர் எழுத்தறிவுவீதத்தைக் கொண்ட (98.76%) ஒரு நாடாக இலங்கை இனங்காணப்பட்டமை கல்வித்துறையில் அதன் வளர்ச்சிக்கான முக்கியமான ஒரு அடையாளமாகும். சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை கல்வி இலசமாக வழங்கப்படுகின்றமை, கல்வி ஒவ்வொரு பிள்ளையதும் அடிப்படை உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டமை, கட்டாயக்கல்விமுறை நடைமுறைப்படுத்தப்பட்டமை, இலவசப்பாடநூல், இலவசச்சீருடை, சத்துணவுத்திட்டம், சலுகை அடிப்படையிலான போக்குவரத்து வசதிகள் என பல்வேறு மாணவர் நலத்திட்டங்கள் வழங்கப்படுகின்றமை போன்ற பல்வேறு சிறப்பம்சங்களை இலங்கையின் கல்விமுறை கொண்டுள்ளதுடன் அவற்றின் காரணமாக “அனைவருக்கும் கல்வி” எனும் இலக்கை அடையவும் எழுததறிவு வீதத்தினை உயர்ந்த மட்டத்தில் பேணவும் சாத்தியமாகியுள்ளது எனலாம்.

இலங்கையில் கல்வியானது ஆரம்பக்கல்வி, கனிஸ்ட இடைநிலை, சிரேஸ்ட இடைநிலை, பல்கலைக்கழக புகுநிலை(Collegiate level) மற்றும் மூன்றாம்நிலை என ஐந்து நிலைகளில் இலவசமாக வழங்கப்படுகின்றது. எனினும் ஒரு நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு மட்டுமன்றி தரங்களுக்கிடையிலுமான நகருகையானது பரீட்சைகளில் மாணவர்கள் பெற்றுக் கொள்ளும் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதன்காரணமாக சகல நிலைகளிலும் பரீட்சை மையமான கலைத்திட்டமே நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குறிப்பாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, தரம் 11 கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை மற்றும் தரம் 13 இன் இறுதியில் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தரப் பரீட்சை ஆகியன இலங்கையில் முக்கியமான பரீட்சைகளாகக் கருதப்படுகின்றன.

ஓர் விவசாய நாடான இலங்கையைப் பொறுத்தவரை பின்தங்கிய, வறுமையான மற்றும் கிராமப்புற சமூகங்களைச் சேர்ந்த திறமைமிக்க மாணவர்கள் தமது சாதி, மதம், இனம், பொருளாதார நிலைமை போன்ற தடைகளைக் கடந்து வசதிமிக்க பிரபலமான நகர்ப்புற பாடசாலைகளில் அனுமதி பெறவும் உதவிப்பணம் பெற்று உயர்கல்வியைத் தொடர்ந்து தமது சமூகப்பொருளாதார அந்தஸ்தை மேம்படுத்திக்கொள்ளவும் உதவுகின்ற வரப்பிரசாதமாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பேறாக கிராமங்கள் மற்றும் பின்தங்கிய சமூகங்களிலிருந்து வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள் என உயர் வாண்மையினர் உருவாகவும் தமது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் வாய்ப்புக்கிட்டியது. கல்வியூடான சமூக அசைவியக்கத்தினை இப்பரீட்சை மேலும் விரைவுபடுத்தியமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனினும் கடந்த சில தசாப்தங்களாக தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை மிகவும் போட்டிக்குரியதாக மாறிவருகிறது. உச்சப்புள்ளிபெறும் மாணவர்களுக்கு ஊடகங்களில் வழங்கப்படும் அதீத முக்கியத்துவமும் பிரபல்யமுமே இந்நிலைக்கு பிரதான காரணங்களாகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலைகள், தனியார்கல்விநிலையங்களின் போட்டி நிலைமைகள் காரணமாக ஆரம்பப்பள்ளிச் சிறார்கள் இரண்டாந்தரத்திலிருந்தே ஓய்வு ஒழிச்சலின்றி கற்க நிர்ப்பந்திக்கப்பட்டு பந்தயக்குதிரைகளாக மாற்றப்படுகின்றனர். இயல்பாகக் கற்கும் ஆற்றலுள்ள மீத்திறன் மாணவர்கள் சிலருக்கு இது சாதாரண விடயமாக இருந்தாலும் ஒருசில புள்ளிகளால் பரீட்சையில் சித்தி பெறத்தவறும் அனேகமான மாணவர்கள் இப்பரீட்சைப் பெறுபேறுகளால் பெரும்பாதிப்பிற்குள்ளாகின்றனர். இக்காரணங்களால் மாணவர்கள் மத்தியில் உளநெருக்கீடு அதிகரித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது. புகழ்பெற்ற கல்வியியல் நிபுணரான Mohan Lal Greru என்பவர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை குழந்தைகளுக்கு மிகவும் ஆபத்தானது என குறிப்பிட்டிருந்தார். பல உளமருத்துவர்களும் இக்கருத்தை வலியுறுத்தி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. இப்பரீட்சை தொடர்பாக இளஞ்சிறார்கள் அனுபவிக்கும் நெருக்கீடு காரணமாக ஆரோக்கியமற்ற சமூகம் உருவாகக்கூடியதான நிலைமை நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல என்பது பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரேஸ்ட இடைநிலைக்கல்வியின் நிறைவில் தரம் 11 இல் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையானது உயர்தரவகுப்புகளுக்கு மாணவரை அனுமதிப்பது மட்டுமன்றி அவர்கள் தமக்கு விருப்பமான கற்கைத் துறையை தெரிவு செய்வதற்கும் அத்துறையில் உயர்கல்வியைத் தொடர்வதற்கும் தமக்குப் பொருத்தமான வாழ்தொழில்

ஒன்றினைத் தெரிவுசெய்துகொள்வதற்கும் மிகமுக்கியமான பரீட்சையாகக் காணப்படுகின்றது. இப்பரீட்சையில் உரிய தரங்களைப் பெறத்தவறும் மாணவர்கள் உயர்தரவகுப்புகளுக்கு அனுமதிக்கப்படாததுடன் தேவையான பெறபேறுகளை பெற்றுக்கொள்ளும்வரை மீண்டும் மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இப்பரீட்சையில் சித்திபெறத் தவறுபவர்கள் பாடசாலையிலிருந்து இடைவிலகி சிறுவயதிலேயே சாதாரணமான தொழில்களுக்கோ கூலித்தொழிலாளிகளாகவோ செல்ல நேரிடுகின்றது.

பதின்மூன்று வருடகால பொதுக்கல்வியின் நிறைவில் நடத்தப்படும் உயர் தரப் பரீட்சையானது பாடசாலை விடுகைப்பரீட்சையாக மட்டுமன்றி அரசபல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் பரீட்சையாகவும் உள்ள காரணத்தினால் அதற்கு கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இலங்கையில் 15 அரச பல்கலைக்கழகங்கள் மட்டுமே உள்ள நிலையில் இளமாணிப்பட்டக் கற்கைகளுக்காக மட்டுப்படுத்தப்பட்டளவிலான இடங்களே காணப்படுகின்றமையால் பல்கலைக்கழக நுழைவு தொடர்பில் உயர்தரப்பரீட்சையானது மாணவர் மத்தியில் அதிக போட்டித்தன்மையை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற வாண்மைசார் கற்கைநெறிகளுக்கு அனுமதி பெறுவதற்காக கடும் போட்டியை மாணவர்கள் எதிர்கொள்கின்றனர். ஒவ்வொரு வருடமும் ஏறத்தாழ 240000 மாணவர்கள் உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இவர்களில் 60% இனர் மூன்று பாடங்களிலும் சித்திபெற்று பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமை பெறுகின்ற போதிலும் அண்ணளவாக 10.2% ஆனோருக்கே பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகின்றது (Liyanage, 2013). பல்கலைக்கழகங்களைத் தந்த கோபுரங்களாக கருதும் சமூக மனப்பாங்கு காரணமாக பல்கலைக்கழக அனுமதி கிடைக்கத்தவறும் மாணவர்களில் குறைந்த சதவீதத்தினர் மட்டுமே ஏனைய உயர்கல்வி நிறுவனங்களை நாடிச்செல்கின்றனர். வசதிபடைத்த குடும்பங்களைச் சேர்ந்தோர் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் தமது கல்வியைத் தொடரகின்றனர். இந்நிலையில் ஒவ்வொரு வருடமும் அண்ணளவாக 60000 மாணவர்கள் தமது உயர்கல்விக்கான பொருத்தமான வாய்ப்புக்களின்றி வெளியேறுகின்றனர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையானது மாணவர்களது உயர்கல்விக்கு மட்டுமன்றி தொழில்வாய்ப்புக்களுக்குமான ஒரேயொரு திறவுகோலாக உள்ளநிலையில் அதன் பெறுபேறுகள் மாணவரது வாழ்வுமுழுதும் செல்வாக்குச் செலுத்துவனவாக காணப்படுகின்றன. இதன்காரணமாக பெற்றோர், ஆசிரியர்கள், பாடசாலை மற்றும் சமூகம் என்பன மாணவர்களின் அடைவு தொடர்பில் உயர்மட்டத்திலான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருப்பதுடன் அவற்றை அடைந்து கொள்வதற்காக மாணவர்கள் மீது பெரும் அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன. பிள்ளைகளுக்கான எதிர்கால வாய்ப்புக்களைப் பெற்று அதனூடாக தமது பொருளாதாரத்தையும் சமூக அந்தஸ்தையும் மேம்படுத்திக்கொள்வதற்காக பெற்றோர்களும் உயர் சித்திவீதங்களையும் முதல்நிலைகளையும் பெற்று தமது பாடசாலைகளின் நற்பெயரை தக்கவைத்துக்கொள்வதற்காக பாடசாலைகளும் பிள்ளைகள்

மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றன. இந்நிலையில் மாணவர்களது விருப்பு வெறுப்புக்களுக்கும் அவர்களது உடல், உள, சமூகத் தேவைகளுக்கும் பொருத்தமான கருத்துமிக்க கற்றல் புறக்கணிக்கப்பட்டு உயர்பெறுபேறுகளை நோக்காகக் கொண்ட பரீட்சைமையக்கல்வியே வலியுறுத்தப்படுகின்றது.

இத்தகைய பரீட்சைமையக்கலைத்திட்டம் மற்றும் போட்டிமிக்க கற்றற்சூழல் என்பன மாணவர் மத்தியில் அதிக உளநெருக்கீட்டினை ஏற்படுத்துவதுடன் அதன் விளைவுகளால் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள நேரிடுகின்றது. இலங்கையில் நடத்தப்பட்ட நாடளாவிய ஆய்வொன்றில் கட்டிளமைப்பருவ மாணவர்களில் 40% இனர் இப்பரீட்சைகளால் கடும் உளநெருக்கீட்டினை அனுபவிப்பதாகவும் இதன்காரணமாக பொருத்தப்பாடின்மை, சமூகத்தினால் ஒதுக்கப்படல் மற்றும் போதைவஸ்துப்பாவனை போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாவதாகவும் குறிப்பிட்டுள்ளது (Thalagala et al., 2004). பரீட்சைகள் இளையோர் மத்தியில் அதிக உளநெருக்கீட்டினைத் தோற்றுவிப்பதாகக் கூறும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA) இது பிள்ளைகளின் மூளை விருத்தியிலும் அவர்களது எதிர்கால வாழ்க்கையிலும் இது பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் எனக் குறிப்பிடுகின்றது.

## பரீட்சை தொடர்பான உளநெருக்கீடும் அதன் பாதிப்புக்களும்

பரீட்சைகள் எனப்படுபவை ஏற்கெனவே திட்டமிடப்பட்ட ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வுகளாக காணப்படுகின்ற போதிலும் பெரும்பாலான மாணவர்களைப் பொறுத்தவரை அவை சவால்மிக்க துன்பமான நிகழ்வுகளாகவே நோக்கப்படுகின்றமையால் அவர்கள் பெரும் உளநெருக்கீட்டிற்கு ஆளாகின்றனர் (Carver & Scheier, 1994). எதிர்காலம் பற்றிய பயம், நம்பிக்கையீனம் காரணமாக பரீட்சை தொடர்பிலான தமது செயலாற்றுகை தொடர்பில் ஒருவர் அனுபவிக்கும் உயர்மட்டத்திலான பதட்டம் உளநெருக்கீடு எனப்படும். பரீட்சைசார் சூழமைவுகளில் நான்கு நிலைகளில் மாணவர்கள் உளநெருக்கீட்டினை அனுபவிக்கின்றனர். தயார்செய்யும் படிநிலை (பரீட்சைக்கு முன்னரான காலப்பகுதி), பரீட்சையை எதிர்கொள்ளும் படிநிலை (பரீட்சைக்குத் தோற்றும் காலம்), காத்திருப்பு படிநிலை( பரீட்சைக்குப் பின்னர் பெறுபேற்றுக்காகக் காத்திருக்கும் காலப்பகுதி) மற்றும் பெறுபேற்றுப்படிநிலை (பெறுபேறுகள் வெளியிடப்படும் காலம்). ஒவ்வொரு நிலையிலும் வேறுபட்ட மட்டத்திலான நெருக்கீட்டினை மாணவர்கள் அனுபவிக்கின்றனர். இத்தகைய பரீட்சைசார் நெருக்கீடுகள் மாணவர் மத்தியில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதாக ஆய்வுப் பேறுகள் எடுத்துக்காட்டியுள்ளன. உதாரணமாக உளஆரோக்கியமின்மை, தற்கொலைக்கு முயலுதல், தன்னம்பிக்கையின்மை, சுய எண்ணக்கரு பாதிக்கப்படல் போன்ற உளவியல் ரீதியான தாக்கங்களும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைதல், உடல் நலிவடைதல் போன்ற உடற்றொழிலியல் தாக்கங்களும் புகைபிடித்தல், மதுபானம் மற்றும் போதைவஸ்து பாவனை போன்ற நடத்தைசார் பிரச்சினைகளும் மாணவர் மத்தியில் காணப்படுவதாக ஆய்வுகள் கண்டறிந்துள்ளன (Ang& Huan, 2006).

பரீட்சைகள் தொடர்பான உளநெருக்கீட்டின் பாதிப்புக்கள் குறித்து உளவியலாளர்களும் கல்வியியலாளர்களும் தமது விமர்சனங்களைத் தெரிவித்துவரும் நிலையில் அது சில அனுகூலமான விளைவுகளையும் ஏற்படுத்துவதாக குறிப்பிடப்படுகின்றது. குறைந்த மட்டத்திலான உளநெருக்கீடு ஒருவரது ஆற்றுகையை அதிகரிப்பதாகவும் கவனத்தை மேம்படுத்துவதாகவும் அதிக சக்தியுடன் குறித்த செயலில் ஈடுபடத் தூண்டுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது (Kumari & Jain, 2014). மேலும் எதிர்கால சாதனைகளுக்கான பயிற்சிகளாகப் பரீட்சைகளைக் கருதும் சிலர் பரீட்சை தொடர்பான உளநெருக்கீட்டிற்கு ஈடுகொடுப்பதற்கு மாணவர்களைப் பயிற்றுவித்தலானது தமது எதிர்கால வாழ்க்கைச் சவால்களை எதிர்கொள்ள அவர்களைத் தயார்ப்படுத்துவதாக அமையும் எனக் கூறுகின்றனர். இது தவிர சமத்துவம் சமவாய்ப்பு போன்றவை பற்றி கவனம் செலுத்தப்படும் இன்றைய உலகில் பரீட்சைகளின் முக்கியத்துவம் பெரிதும் வலியுறுத்தப்படுகின்ற நிலையில் பரீட்சைகளை முழுமையாக இல்லாதொழிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. ஆகவே பரீட்சைகளால் ஏற்படக்கூடிய உளநெருக்கீட்டிற்கு ஈடுகொடுப்பதற்காகவும் அவற்றை முகாமை செய்வதற்காகவும் மாணவர்களைத் தயார்ப்படுத்த வேண்டியது அவசியமானதாகும்.

## பரீட்சை தொடர்பான உளநெருக்கீட்டிற்கு ஈடுகொடுப்பதற்காக மாணவர்களைத் தயார்ப்படுத்தல்

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளிடம் சுதந்திரமான, சுயாதீனமான சிந்தனைக்கு இடமளிப்பதுடன் தமது சொந்த முடிவுகளைத் தாமே எடுப்பதற்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்

எமது கலாச்சாரத்தில் தோல்விகள் கற்றல் அனுபவங்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இந்நிலை மாறி வெற்றி தோல்விகளைச் சமமாக மதிக்கவும் சகித்துக்கொள்ளவும் திறந்த மனதுடன் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளவும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

பரீட்சைகள் மட்டும் வாழ்க்கையல்ல என்ற உணர்வையும் பரீட்சைப் பெறுபேறுகள் பெற்றோர் மற்றும் சமூகத்துடனான பிள்ளைகளது உறவில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தமாட்டா என்ற நம்பிக்கையையும் மாணவர் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். மாணவர்கள் தம்மைப்பற்றிய உயர்வான சுய எண்ணக்கருவைக் கட்டியெழுப்புவதுடன் சுயநெறிப்படுத்தப்பட்ட கற்றற்பழக்கங்களையும் விருத்தி செய்ய வேண்டும். பெற்றோர் தமக்கு விரும்பிய அல்லது தமது கௌரவத்திற்குப் பொருத்தமான கற்கைநெறிகளுக்காக மாணவர்களைக் கட்டாயப்படுத்துவதைத் தவிர்த்து அவர்களது விருப்பு வெறுப்புக்கள், இயலுமைகள் என்பவற்றுக்குப் பொருத்தமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்க வேண்டும்.

## முடிவுரை

இலங்கையின் சமகாலக் கல்வி முறைமையில் பரீட்சைகள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன. ஒவ்வொரு பிள்ளையதும் கல்விசார் வெற்றிக்கான அளவுகோல்களாக பரீட்சைகள் பயன்படுத்தப்படுவதால் அவற்றில் வெற்றியீட்டுவதற்கும் உயர் தரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவர்களைத் தயார்செய்யும் வகையில் கலைத்திட்டமும் கற்பித்தல்

முறைகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அடைவுநோக்கிய அழுத்தங்களும் போட்டித்தன்மையான கற்றற்சூழலும் மாணவர் மத்தியில் பரீட்சைகள் தொடர்பான உளநெருக்கீட்டை ஏற்படுத்தியுள்ளன. பரீட்சைகளே உயர்கல்விக்கும் தொழில்வாய்ப்புக்களுக்குமான திறவுகோல்களாக உள்ளநிலையில் அத்தகைய உளநெருக்கீட்டிற்கு ஈடுகொடுக்கவும் முகாமை செய்யவும் மாணவர்கள் பயிற்றுவிக்கப்படுவதன் மூலமே அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்கான ஆற்றலை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியும்.

## உசாத்துணைகள்


Ang, R. P. & Huan, V. S. (2006). Academic expectations stress inventory. *Educational & psychological measurement, 66*(3), 522–539.

Carver, C. S. & Scheier, M. F. (1994). Situational coping and coping dispositions in a stressful transaction. *Journal of personality and social psychology, 66*(1), 184–195.

Kumari, A. & Jain, J. (2014). Examination stress and anxiety: A study of college students. *Global journal of multi-disciplinary studies, 4*(1), 31–40.

Liyanage, I. K. (2013). Education system of Sri Lanka: strengths and weaknesses. *Institute of Developing Economies, Japan External Trade Organization*, 116–140.

Sedere, U. M. (2010). *Towards a stress free education: International Perspective*. Paper presented at the 5th annual academic sessions, Faculty of Education of the Open University of Sri Lanka.

Thalagala, N. I. R. L., Rajapakse, L., & Yakandawala, H. (2004). National survey on emerging issues among adolescents in Sri Lanka. *Colombo: UNICEF*.

Zeidner, M. (1995). Adaptive coping with test situations: A review of the literature. *Educational Psychologist*, *30*(3), 123–133.

# மென் திறன்களும் அதன் முக்கியத்துவமும்

திரு. க. ஞானரெத்தினம்*

## அறிமுகம்

தற்கால நவீன யுகத்தில் புத்தாக்க சிந்தனை கொண்ட பல மாணவர்களை பாடசாலையில் காணமுடியும். இவர்கள் பாடப் புத்தகத்தில் மாத்திரம் தங்கி இராமல் தகவல் தொழினுட்பத்தினூடாக மேலதிக விடயங்களை அறிந்து கெண்டு பாடசாலைக்கு வருவது மட்டுமன்றி கூடிய நேரத்தையும் இதற்காக செலவு செய்கின்றனர். இவர்களின் அறிவு, ஆற்றல் என்பனவும் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றன. இதன் காரணமாக இவர்களுக்கு கற்பித்தலை வழிநடாத்தும் ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக பன்முக ஆற்றல் கொண்டவர்களாக இருக்கவேண்டியது காலத்தின் தேவையாகும். மிகமுக்கியமாக தாம் கற்பிக்கும் பாடத்தில் பாடப்புலமை பெற்றிருப்பது கட்டாயமானதாகும். அத்துடன் பல்வேறு திறன்களும் ஆசிரியர்களிடம் இருக்க வேண்டியதும் அவசியமானதாகும். எமது நாட்டில் ஆசிரியர்களாக உள்வாங்கப்படுகின்றவர்கள் பெரும்பாலும் க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி பெற்றவர்களும் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவர்களும் கல்வியல் கல்லூரியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்றவர்களுமே ஆவர். இவர்களின் கடதாசி தகைமை மாத்திரம் வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துவதற்கு போதுமானதல்ல. இவர்களின் பல்வேறு திறன்களை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு கல்விப் புலத்தில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் எதிர்பார்த்த மட்டத்தை அடைந்து கொள்வதில் பல சவால்கள் காணப்படுவதாக ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன..

## திறன்கள்

ஒருவருக்கு இருக்கவேண்டிய திறன்களை இருவகையாக பிரித்து நோக்கலாம். மென்திறன் (Soft skill), வன்திறன் (Hard skill) என்பனவையே அவை வன்திறன் என்பது கல்வியாலோ அல்லது பயிற்சியாலோ பெற்றுக் கொள்ளக்கூடியதும் தொழினுட்ப அறிவை அடிப்படையாகக் கொண்டதுமாகும்.

---

*சிரேஷ்ட விரிவுரையாளர்,
*இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
*Email: kgnan@ou.ac.lk*

மாறாக ''மென்திறன் என்பது ஒருவரிடம் வெளிப்படும் பல்வேறுவிதமான திறமையாகும்''. இதனை ஒருவரின் குணாதிசயங்கள் அல்லது உள்ளார்ந்த விவேகம் எனவும் கூறலாம். மேலும் வெற்றிகரமான செயற்பாட்டைச் செய்வதற்கு ஒரு தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய தனித்துவமான விசேட குணாதிசயங்களும் தொடர்பாடலும் எனவும் கருதலாம். இது இயற்கையாக உருவாகின்ற இயலுமையும் மனவெழுச்சி நுண்ணறிவுடன் தொடர்புபட்டதும் ஆகும். மென்திறனை புத்தக அறிவாலோ அல்லது பட்டங்களாலோ அல்லது சான்றிதழ்களாலோ பெறமுடியாது.

Sinha (2008) என்பவரது ஆய்வில் ஒரு நிறுவனத்தின் வெற்றியில் ஊழியர்களின் மென்திறன் 75% உம் தொழினுட்பம் 25% உம் பங்களிப்பு செய்யக்கூடியது என அறியப்பட்டுள்ளது. மென்திறன் பலவகைப்படும். நேரமுகாமை, தலைமைத்துவம், நேரான மனப்பாங்கு, தொடர்பாடல், சகிப்புத் தன்மை, வேலை ஒழுக்கம், பிரச்சினை தீர்த்தல், குழுவேலை என இது நீண்டு கொண்டே போகும். இங்கு இவ் ஆக்கத்தில் ஆசிரியர்களுக்கு இருக்கவேண்டிய மிகமுக்கிய பத்து மென்திறன்கள் தொடர்பாக ஆராயப்படுகின்றன.

### ஆசிரியருக்கு வேண்டிய மிகமுக்கிய பத்து மென்திறன்கள்

பாடசாலை என்ற நிறுவனத்தின் திறவு கோலாக தொழிற்படுகின்றவர்கள் ஆசிரியர்கள். தற்கால மாணவர்களை வெற்றி கொள்வதற்கு ஆசிரியர்களுக்கு தமது பாடப்புலமைக்கு மேலாக கற்பித்தல் தொழினுட்பம், தொடர்பாடல் திறன், முகாமைத்துவ திறன் போன்ற பல்வேறு திறன்கள் அத்தியாவசியமானவை. ஆசிரியர்களுக்கு வேண்டிய மிக முக்கியமான ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பத்து மென்திறன்களை Kate Lorenz (2000) என்பவர் முன் வைத்துள்ளார். அவையாவன.

1) உடன்பாடான மனப்பாங்கு
2) சிறந்த தொடர்பாடல் திறன்
3) உறுதியான வேலை ஒழுக்கம்
4) நேர முகாமைத்துவ இயலுமை
5) பிரச்சினை தீர்த்தல் திறன்
6) குழுவில் ஒருவராக தொழிற்படல்
7) தன் நம்பிக்கை
8) ஏற்றுக்கொள்ளலும், விமர்சனங்களில் இருந்து கற்றுக் கொள்ளலும்
9) சகிப்புத்தன்மை
10) அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்தல்

### 1. உடன்பாடான மனப்பாங்கு

மனிதன் தன் மனநிலைகளை மாற்றிக்கொள்வதன் மூலமாக தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்வான் என்பதே எனது தலைமுறையின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும்

**- வில்லியம் ஜேம்ஸ் -**

ஒருவர், ஒரு விடயம், ஒரு பொருள், ஒரு சம்பவம் என்பன தொடர்பாக நாம் கொண்டுள்ள எண்ணங்களின் உறுதியான தொகுப்பு மனப்பாங்கு என இலகுவாக விளங்கிக் கொள்ளலாம். இது உடன்பாடான மனப்பாங்கு (Positive attitude), எதிரான மனப்பாங்கு (Negative attitude) என இரண்டு வகைப்படும்.

எவரும் மனப்பாக்குடன் பிறப்பதில்லை. வாழும் காலத்திலே எமது கல்வி, சூழல் அனுபவங்கள் காரணமாக மனப்பாங்குகள் உருவாகுகின்றன. எதிலும் நல்லதையும், நிறைவையும் காண்பதே உடன்பாடான மனப்பாங்கு எனவும் மாறாக எதிலும் கெட்டதையும் குறையையும், திருப்தியின்மையும் பார்த்தல் எதிரான மனப்பாங்கு எனவும் கருதப்படுகின்றது. ஒருவரின் அனைத்துச் செயற்பாட்டிற்கும் அடிப்படை காரணமாக இருப்பது மனப்பாங்காகும். உடன்பாடான மனப்பாங்கு கொண்டவர்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியாகவும் சுகதேகியாகவும் வெற்றியாளர்களாகவும் வசதி வாய்ப்புடையவர்களாகவும் முக மலர்ச்சி கொண்டவர்களாகவும் இருப்பார்கள். அதுமட்டுமல்ல மற்றவர்களுக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்து உதவுபவராகவும் காணப்படுவர். ஹவாட் பல்கலைக்கழகத்தில் செய்யப்பட்ட ஒரு ஆய்வில் வெற்றி பெற்றவர்களில் 85% ஆனோர் நல்ல மனப்பாங்கு கொண்டவர்களாகவும் 15% ஆனோர் உயர் கல்வித் தகைமையைக் கொண்டவர்களாகவும் இருந்தனர்.

ஆசிரியர்கள் கண்டிப்பாக உடன்பாடான மனப்பாங்கு கொண்டவராக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்களும் உடன்பாடான மனப்பாங்கு கொண்டவராக இருப்பர். அனைத்து மாணவர்களையும் சமமாக மதித்தல் , அவர்களுக்கு மகிழ்ச்சியை கொடுத்தல் , இனிய வார்த்தை பேசுதல் , ஒவ்வொருவரிலும் பல்வேறு விதமான இயலுமையைக் காணுதல், ஊக்கப்படுத்தல் , நேரம் தவறாமை ,வெற்றிகரமான கற்பித்தலை நடாத்துதல், பாடசாலையில் அனைவரையும் மதித்தல் , தம் தொழில்- பாடசாலை என்பனவற்றில் உயர் மதிப்பைக் கொண்டிருத்தல் , விருப்புடன் கடமைகளைப் பொறுப்பெடுத்தல், பாடசாலை பாரம்பரியத்தை மதித்தல் போன்றவை ஒரு உடன்பாடான மனப்பாங்கு கொண்ட ஆசிரியரால் மட்டுமே மேற்கொள்ளக்கூடியவை. அனைத்து ஆசிரியர்களும் உடன்பாடான மனப்பாங்கு கொண்டவர்களாக மாறுவதற்கு முயலவேண்டும். இது கடினமான ஒன்றாயினும் அவசியமானதாகும். இதற்கு மெய்யானத்தில் தியானம், யோகா, வழிபாடு , சற்சங்கம் , நல்லார் தொடர்பு போன்றவை உதவும் அதே வேளை விஞ்ஞானத்தில் பயிற்சிகள், சில செய்திட்டங்கள் என்பன வழிவகுக்கும். இவ் ஆக்கத்தின் விரிவஞ்சி இச்செய்திட்ட படிமுறைகளை சேர்த்துக் கொள்ளமுடியவில்லை.

## 2. சிறந்த தொடர்பாடல் திறன்

அனைத்து மனிதர்களுக்கும் தொடர்பாடல் திறன் அவசியமானதாகும். தொடர்பாடல் குறைபாடு காரணமாகவே அநேகமான முரண்பாடுகள் ஏற்படுகின்றன. ஒருவர் ஏதோ ஒரு விடயத்தை வெளிப்படுத்தும்போது மற்றொருவர் அதனை வேறு விளக்கம் பெறுகின்ற நிலை அதிகமாக காணப்படுகின்றது.

முக்கியமாக ஆசிரியர்களிடம் எவ்வளவு திறமை இருந்தாலும், எத்தனை பட்டங்களைப் பெற்றிருந்தாலும் வகுப்பறையை உயிரோட்டமாக்குவது அவரது தொடர்பாடல் திறனாகும். பாடத்தை திட்டமிட்டு வகுப்பறைக்குச் செல்கின்ற ஆசிரியர் ஒருவர் தான் நினைப்பதனை அல்லது தான் விளங்கிக் கொண்டவற்றை அனைத்து மாணவர்களுக்கும் விளக்கம் பெறச்செய்வதில் அவரது வார்த்தை வெளிப்பாடு, குரல் , தொனி, கரும்பலகை பயன்பாடு என்பன அதிக செல்வாக்கு செலுத்தக்கூடியவை. இதன் காரணமாக தொடர்பாடல் திறனை மேம்படுத்த வேண்டியது அவசியமானதாகும். தொடர்பாடல் என்பது "குறித்த ஒரு தகவல் அல்லது பல தகவல்கள் ஒரு தனியாளினாலோ அல்லது பல பேரினாலோ மற்றொரு தனியாளிற்கு அல்லது பல பேரிற்கு பரிமாற்றப்படல்" ஆகும். Berlo (1994) என்பவர் அனுப்புனர், செய்தி, ஊடகம், பெறுநகர் ஆகிய நான்கு அம்சங்களை உள்ளடக்கிய ஒரு இயக்க உணர்வு தொடர்பாடலாகும் என்கின்றார். என்ன கருத்துடன் ஒரு செய்தி அனுப்பப்பட்டதோ கூடியவரை அதே கருத்துடன் அச்செய்தி பெறப்படுதல் வினைதிறன் மிக்க தொடர்பாடல் எனப்படும். இத் தொடர்பாடலானது

(i) எழுத்து மூலமாக - கரும்பலகை பயன்பாடு
(ii) வாய் மூலமாக - குரல், தொனி, தெளிவு
(iii) காட்சி மூலமாக - கற்பித்தல் உபகரணம்

ஏற்படுத்தப்படலாம். ஆயினும் தொடர்பாடலில் பின்வரும் தடைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

**(i) தனியாள் தடைகள்**

மாணவர்களின் தனியாள் வேறுபாடு, மாணவர்களின் உளவியல் பிரச்சினைகள் , மனவெழுச்சி சமநிலையின்மை போன்றன இத்தகைய தடைகளை ஏற்படுத்தக்கூடியவை.

**(ii) பௌதிகத் தடைகள்**

வகுப்பறைச் சூழல், ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையிலுள்ள தூரம் என்பன.

**(iii) சொற்பொருள் சார்ந்த தடைகள்**

கலாசாரம், மொழி என்பன. குறிப்பாக தமிழ் பேசுபவர்களிடையேயும் பிரதேச, மத ரீதியாக உச்சரிப்புக்கள், வெளிப்பாடுகள் என்பனவற்றில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவையும் தொடர்பாடலில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடிவை. இத்தகைய தடைகளை குறைத்து தொடர்பாடலின் வினைதிறனை மேம்படுத்துவதற்கு ஆசிரியர் பின்வரும் உத்திகளை கையாள முடியும்.

- எளிய தெளிவான மொழிப்பிரயோகம்
- விடயங்களை படிமுறையாக ஒப்புவித்தல்.
- முழுக்கவனத்துடன் செவிமடுத்தல்
- ஒப்புவித்த விடயங்களை மீண்டும் கூறுமாறு மாணவர்களைக் கேட்டல்.
- முகபாவத்துடன் பேசுதல்

- கூடியவரை மாணவர்களுக்கு அருகில் சென்று பேசுதல்.
- சுத்தமாகவும் உயிரோட்டமாகவும் பேசுதல்
- முக்கியமான விடயத்தை கரும்பலகையில் எழுதிக்காட்டுதல்.
- கரும்பலைகயில் எழுதும்போது கதைக்காமல் இருத்தல்.
- பிழை விடாமல், நேர்த்தியாக கரும்பலகையில் எழுதுதல்.
- நவீன கற்பித்தல் துணைச்சாதனங்களைப் பயன்படுத்தல்.

## 3. உறுதியான வேலை ஒழுக்கம்

எந்தவொரு நிறுவனத்திற்கும் அல்லது தொழிலுக்கும் வேலை ஒழுக்கம் என்பது அவசியமானதாகும். ''சமூகம் ஏற்றுக் கொள்ளும் சரியானவற்றிற்கு எதிரான பிழையானவற்றை நீக்குதல்'' ஒழுக்க நெறியாகும். ஒரு ஆசிரியர் தனது உடை, பாடசாலைக் கடமைகள், கற்பித்தல் கடமைகள், மதிப்பீட்டுக் கடமைகளில் ஒழுக்கத்தை பேணுபவராக இருத்தல் வேண்டும். உரிய நேரத்தில் உரிய வேலைகளை, உரிய முறையில் செய்வதும் ஒழுக்கமே. பொதுவாக வேலை ஒழுக்கம் என்பது நேர்மை, பொறுப்பு கூறல், அர்ப்பணிப்பு, முயற்சி, சுய ஊக்கம், நேர முகாமை, குழுவேலை போன்றவற்றை உள்ளடக்குகின்றது என Matthew Kerr (2019) குறிப்பிடுகின்றார்.

ஆசிரியர்களுக்கான ஒன்பது ஒழுக்கக் கோவைகளை Giuti (2008) என்பவர் முன் வைத்துள்ளார்.

(i) பாடத்தேர்ச்சி

(ii) சிநேகபூர்வ கற்றல் - கற்பித்தல்

(iii) உணர்வு பூர்வமான அணுகுமுறை

(iv) மாணவர் அபிவிருத்தி

(v) இரட்டை உறவுமுறை பேணுவதனைத் தவிர்த்தல்

(vi) இரகசியம் பேணல்.

(vii) ஏனைய ஆசிரியரை மதித்தல்

(viii) மதிப்பீட்டுத் தராதரம்

(ix) பாடசாலையைக் கனம் பண்ணுதல்.

## 4. நேர முகாமைத்துவ இயலுமை

இன்று அனைவருக்கும் உள்ள பொதுவான பிரச்சினை ''நேரம் இல்லை'' என்பதாகும். அடிக்கடி ''நேரமில்லை'' என்ற வார்த்தைகளையே பலர் முணுமுணுத்துக் கொள்கின்றனர். உலகிலுள்ள அனைவருக்கும் பொதுவான சொத்து 24 மணித்தியாலங்களாகும். நேரத்தை சரியாக முகாமை செய்யத் தெரியாதவர்களே ''நேரமில்லை'' என்ற வார்த்தைக்கு சொந்தக்காரர்கள். பொதுவாக நேரம் இரண்டு வழிகளால் காணாமல் போகின்றது.

(i) ஆவசியமான விடயங்களில் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாமை.

(ii)அவசியமற்ற விடயங்களில் நேரத்தை அளவுக்கதிகமாக பயன்படுத்தல்.

(iii)

இவ்விரு விடயங்களையும் ஆசிரியர்கள் கவனம் செலுத்தவேண்டும். பாடத்துக்கு உரிய நேரத்தில் செல்லுதல், ஒதுக்கப்பட்ட நேரத்தை முழுமையாக பயன்படுத்தல், உரிய நேரத்தில் பாடத்தை முடித்தல் என்பனவற்றினூடாக நேரத்தை முகாமை செய்யமுடியும். பாடக்குறிப்பில் பாடப்பிரவேசம், கற்பித்தல் நடைமுறை, மதிப்பீடு, பின்னூட்டல் என்ற ஒவ்வொன்றிற்கும் நேரத்தை ஒதுக்கித் திட்டமிடும்போது வகுப்பறையில் 40 நிமிடத்தில் உயர்ந்த மட்ட கற்பித்தலை நடாத்த முடியும். வகுப்பறையில் தேவையற்ற விடயங்களை கதைத்து அல்லது தன் புகழ்பாடி நேரத்தை செலவு செய்வதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்வது, பாடசாலைக்குரிய மொத்த நேரம் ஆறு மணித்தியாலத்தை முடிந்த வரை மாணவர்களின் நலனுக்காக பயன்படுத்துவதெல்லாம் ஒரு ஆசிரியரின் உயர்ந்த பண்பாகும்.

Peggy (2008) என்பவர் "எவரொருவர் நேரத்தை முகாமை செய்ய பழகிவிட்டாரோ, அவரே சிறந்த சாதனையாளராகின்றார்" என்பதோடு நேரமுகாமைத்துவம் எனும் விடயத்தில் திட்டமிடல், இலட்சியம் வகுத்தல், முன்னுரிமைப்படுத்தல், தீர்மானம் மேற்கொள்ளல், அழுத்த முகாமைத்துவம், குழுவேலை, ஒழுங்குபடுத்தல், சமாளித்தல் போன்றவை உள்ளடக்கப்படுவதாக குறிப்பிடுகின்றார்.

## 5. பிரச்சினை தீர்த்தல்

பிரச்சினை என்பது இருப்பதற்கும் இருக்க வேண்டியதிற்கும் இடையிலான இடைவெளி ஆகும் (Peggy, 2008). ஆசிரியர் உட்பட அனைத்து தரப்பினர்களுக்கும் வேண்டிய அவசியமான உயர்திறன் பிரச்சினை தீர்த்தலாகும். உளவியலில் இது பேரறிகைசார் பரப்புக்குள் உள்ளடக்கப்படுகின்றது. வாழ்க்கை என்பது பிரச்சினைக்களம், இதனை தீர்த்துக் கொள்ளமுடியாமல் பலர் திண்டாடுகின்றனர். இதே போல் பாடசாலை என்னும் சிக்கல் நிறைந்த ஸ்தாபனத்தில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. கற்பித்தல், முகாமைத்துவம், நலன் ஓம்புகை, வழிகாட்டல், சமூகத்தொடர்பு என்று இது நீண்டு கொண்டே போகும். ஒரு குறிக்கப்பட்ட கணத்தில் பல்வேறு பிரச்சினைகளை முகங்கொடுக்கும் போது அவற்றை தீர்த்துக் கொள்வதற்கு பல்வேறு உத்திகளை ஆசிரியர் கையாளவேண்டும். உதாரணமாக வகுப்பறையில் பாடம் நடாத்திக் கொண்டிருக்கின்ற ஆசிரியர் ஒருவருக்கு மாணவர் கவனம் செலுத்தாமை, மாணவர் குளப்படி செய்தல், பக்கத்து வகுப்புக்களால் இடையூறு என்று பல அழுத்தங்கள் ஏற்படும். இவ்வேளையில் ஆசிரியர் இவற்றை சாதுரியமாகத் தீர்ப்பதன் முலம் தன் நோக்கத்தை நிறைவு செய்யவேண்டும்.

பிரச்சினை தீர்த்தல் என்பது உடனடியாக கிடைத்த இலக்கை அடைதற் பொருட்டு சிந்தனையையும் நடத்தையையும் செலுத்துதலைக் குறிக்கும். John Brans ford (2005)

என்பவர் பிரச்சினை தீர்ப்பதற்கான படிநிலைகளை IDEAL என்ற சுருக்க எழுத்தால் முன்வைத்துள்ளார்.

- பிரச்சினையை இனங்காணல் (**I**dentify the Problem)
- பிரச்சினையை வரையறை செய்தலும் வகைக் குறித்தலும் (**D**efine and represent the problem)
- சாத்தியமான உபாயங்களை அல்லது தீர்வுகளை கண்டறிதல் (**E**xplore possible strategies or solutions)
- தெரிவு செய்த உபாயம் அல்லது தீர்வின் அடிப்படையில் செயற்படல் (**A**ct on a selected strategy or solution)
- தீர்வினை மீள்நோக்கி மதிப்பிடல் (**L**ook back and evaluate the solution)

## 6. குழுவில் ஒருவராக தொழிற்படல்

மனிதன் ஒரு சமூகப் பிராணி. எந்தவொரு மனிதனும் தனித்து இயங்க முடியாது. இதனால் எந்த நிறுவனத்திலும் பல தரப்பட்டவர்கள் சேர்ந்து கடமையை மேற்கொள்ள வேண்டிய தேவைகள் அதிகமாகவுள்ளன. பல்வேறுபட்ட தகமை, இனம், மொழி, சமூக அந்தஸ்து கொண்டவர்கள் உள்ள இடங்களில் பிரச்சினைகளும் முரண்பாடுகளும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகவுள்ளன. இதனால் நிறுவனங்களில் பல குழுக்கள் காணப்படுகின்றன. ‘‘அமுக்க குழுக்கள்’’ என்று அழைக்கப்படுகின்ற இக்குழுக்கள் நிறுவனத்தின் வெற்றிக்கு பெரும் சவாலாகவும் அமைந்துவிடுகின்றன.

பாடசாலை என்ற நிறுவனத்திற்கும் இது பொருந்தும். ஆயினும் மாணவர்களின் எதிர்காலம், உயர்ச்சி என்பனவற்றைக் கருரத்தில் கொண்டு ஒவ்வொரு ஆசிரியர்களும் குழு ஒற்றுமையுடன் பங்காற்ற வேண்டியது அவசியமானதாகும். தனிப்பட்ட குரோதங்களை எல்லாம் மறந்து பாடசாலைக் குழுவின் ஒருவராக இணைந்து அனைத்து ஆசிரியர்களும் ஒருவருக்கொருவர் கடமையாற்றும் போது அப்பாடசாலை வினைதிறன் கொண்ட பாடசாலையாக மாறிவிடும். எடுத்துக்காட்டாக க.பொ.த.(சா/த) வகுப்பில் மாணவர்கள் ஒன்பது பாடத்திற்குத் தோற்றுகின்றனர். இதனால் இவ்வகுப்பில் குறைந்தது ஒன்பது ஆசிரியர்கள் சேர்ந்து பங்காற்ற வேண்டியுள்ளது. இவ் ஒன்பது பேரிடையேயான ஒற்றுமை, பங்களிப்பு இருந்தால் மாத்திரமே மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் திறமைச் சித்தி பெறமுடியும். அதுமட்டுமல்ல இது மாணவர்களுக்கு முன்மாதிரியாகவும் அமையக்கூடும். இல்லையேல் அது மாணவர்களையும், பாடசாலையையும் பாதித்துவிடும். ஒவ்வொரு ஆசிரியர்களும் பாடசாலையின் தூரநோக்கு, பணிக்கூற்றுக்கு அமைவாக மாணவர்களை தமது எஜமானராகக் கருதி கடமையாற்றும் போது ஆசிரியரும், பாடசாலையும், மாணவர்களும் பெருமை பெறுவர். இதனால் அப்பாடசாலை பிரதேசத்தில் உயர் பாடசாலையாகவும் திகழமுடியும்.

## 7. தன் நம்பிக்கை

*‘‘ஒருவர் எந்தத்துறையில் இருந்தாலும் அவரது வாழ்க்கைத் தரம் தனது வேலையை சிறப்பாகச் செய்ய அவர் எந்தளவு தன்நம்பிக்கை கொண்டிருக்கின்றார் என்பதை*

*பொறுத்தது" (வின்ஸ் லொம்பார்டி).* எந்தவொரு வெற்றியாளர்களுக்கும் தன் நம்பிக்கை சிறந்தவொரு அணிகலனாகும். தன்னைப் பற்றி தனது இயலுமை, தனது தகைமை, தனது தொழில் தொடர்பாக எவரொருவர் உயர் நம்பிக்கை கொள்கின்றார்களோ அவர் சாதனையாளராகக் காட்சிபெறுவார். ஒவ்வொருவரும் தம்மில் பல்வேறு வகையான ஆற்றல்கள் மறைந்துள்ளன என்பதனைக் கருத்தில் கொண்டு செயற்பாடுகளைப் பொறுப் பேற்க வேண்டும். ஒருவனின் உணர்வுக்கும் அவரது செயல்திறனுக்கும் நேரடித்தொடர்பு இருக்கின்றது. வகுப்பறைக்குச் செல்லுகின்ற ஆசிரியர் தன் நம்பிக்கையுடன் தைரியமாக வகுப்பை நடாத்திச் செல்லவேண்டும். பாடப்புலமையுடன் சிறப்பாக பாடத்தை திட்டமிட்டு, பொருத்தமான கற்பித்தல் துணையுடன் வகுப்பறைக்குச் செல்லும் போதே இது சாத்தியமானதாகும். மாணவர்கள் நேரடியாக காண்கின்ற ஒரு ''மாதிரி' (Model) ஆசிரியர் என்பதால், ஆசிரியரின் தன் நம்பிக்கை மாணவர்களையும் தன் நம்பிக்கையாளராக உருவாக்க கூடியது.

## 8. ஏற்றுக் கொள்ளலும் விமர்சனங்களில் இருந்து கற்றுக் கொள்ளலும்.

எந்தவொரு செயற்பாட்டையும் நாம் பொறுப்பெடுத்துச் செய்யும்போது பல்வேறு விமர்சனங்கள் வரலாம். காய்த்த மரம் கல்லெறி படுவது போன்று வளர்ந்து கொண்டு செல்பவர்கள் விமர்சிக்கப்படுவார்கள். உலகில் மாபெரும் மனிதர்கள் எல்லாம் விமர்சிக்கப்பட்டிருக்கின்றார். நாம் ஒரு சிறப்பான காரியத்தை மேற்கொள்ளும் போது அதனை பாராட்டுவதனைத் தவிர்த்து விமர்சனங்கள் செய்வதனையே பலர் தமது பழக்கமாகக் கொண்டுள்ளனர். இது பொறாமை காரணமாக ஏற்படக் கூடிய ஏதிரான மனப்பாங்காகும். வருகின்ற விமர்சனங்கள் நியாயமானதோ அல்லது நியாயமற்றதாகவோ இருக்கலாம். நியாயமான விமர்சனம் ஒருவரின் உயர்ச்சிக்கு மிகவும் உதவியாக இருக்கும். இத்தகைய விர்சனங்களை ஒரு மதிப்பு வாய்ந்த கருத்தாக எடுத்துக் கொள்ளவேண்டும். இதேபோல் நியாயமற்ற விமர்சனம் அறியாமை, பொறாமை காரணமாக ஏற்படலாம். நாம் ஒன்றுமே செய்யாமல், ஒன்றுமே பேசாமல், ஒன்றுமே இல்லாமல் இருந்தால் எம்மை யாருமே விமர்சிக்க மாட்டார்கள். ஆனால் நாம் ஒன்றுமே இல்லாமலாகி விடுவோம்.

சிறப்பான கற்பித்தலை நடாத்தும் பல ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்களால் விமர்சிக்கப்படக்கூடும். தமது இயலாமை, மதிப்பின்மை காரணமாக இது ஏற்படலாம். இவ்வாறான நிலையில் பொறுமையாக அதனை ஏற்றுக்கொண்டு தமது கடமையை தொடர்ந்தும் செயற்படுத்த வேண்டும். இதனால் இவ் ஆசிரியர் எப்பொழுதும் மாணவர் மத்தியில் உயர்மதிப்பை பெறுவதோடு பாடத்தில் சிறந்த அடைவையும் ஏற்படுத்திக்காட்டமுடியும்.

## 9. சகிப்புத்தன்மை

பல்வேறு அழுத்தங்கள் எம்மை நோக்கி வரும்போது அதனை ஏற்றுக்கொள்வதே சகிப்புத் தன்மை ஆகும். மனித வாழ்வில் தோல்வி, அவமானம், வறுமை, துன்பம்

என்கின்ற பாரிய அழுத்தங்கள் ஒருவரை தாக்கும் போது மனம் தளராது அதனை ஏற்றுக்கொண்டு எதிர் நீச்சல் போடுவது வெற்றியாளரின் உயர்ந்த பண்பாகும். ஆசிரியர் பல வயதுக் குழுவினருடன் கடமையாற்றுவதால் பல்வேறு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளன. குறிப்பாக கட்டிளமைப் பருவ மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ளும் போதும் விசேட தேவையுடைய மாணவர்களை கருத்தில் கொள்ளும் போதும் நிர்வாக ரீதியான செயற்பாட்டின் போதும் ஆசிரியர்கள் பல்வேறு விதமான சவால்களைச் சந்திக்க வேண்டி வரலாம். இவ் வேளைகளில் மனம் கோணாது சகிப்புத தன்மையுடன் அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும். அது மிகப்பெரிய முன்மாதிரி ஆகும்.

## 10. அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்தல்.

இது விரைவாக மாறி வரும் விஞ்ஞான யுகம். இதன் காரணமாக பல்வேறு அழுத்தங்களுக்கு நாம் முகங்கொடுக்க வேண்டி வரலாம். அழுத்தங்கள் புதிய யுகத்தின் பாரிய ஆட்கொல்லி எனவும் கருப்படுகின்றது. ஒருவர் புதிய சூழலை எதிர்கொள்ளும் போது அவரது உடல், உள்ளத்தில் மாற்றம் ஏற்படுவதே அழுத்தம் எனலாம். அழுத்தங்களினால் இன்று உலகில் 85% ஆன மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 60% ஆனோர் மருத்துவமனையில் உளநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்றனர் எனவும் அழுத்தங்களைச் சரியான முறையில் கையாள முடியாமல் வருடமொன்றிற்கு 15% ஆனோர் தற்கொலை செய்கின்றனர் எனவும் புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. ஒருவருக்கு இரு வகையான அழுத்தங்கள் ஏற்படலாம்.

1) அக அழுத்தம்

   உளம் சார்ந்தது. ஆளுமையில் பல மாற்றங்களை ஏற்படுத்த கூடியது.

2) புற அழுத்தம்

   பௌதிக, சமூக, சூழல் காரணிகளால் ஏற்படக்கூடியது.

பாடசாலையில் ஆசிரியர்கள் இருவகையான அழுத்தங்களையும் முகங்கொடுக்கவேண்டி இருக்கும். தனது நோய், களைப்பு, மனக்கவலை போன்ற அழுத்தங்கள் ஏற்படும்போது தமது கற்பித்தல் பணியை ஆசிரியர் முன்னெடுக்க வேண்டும். இது கடினமானது. அதுமட்டுமல்ல மாணவர்களால் அடையாளம் காணக்கூடியதும். புற அழுத்தங்களாக அதிக வெப்பம், அதிக சத்தம், துர்நாற்றம் போன்றவை ஏற்படும்போது ஆசிரியர் வேறொரு இடத்தில் கற்பித்தலை மேற்கொள்ள முடியும்.

ஒரு ஆசிரியருக்கு கற்றல்-கற்பித்தல், இணைப் பாடவிதான செயற்பாட்டின் போதும் நிர்வாக ரீதியாகவும் அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய முக்கிய விடயங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- வகுப்பறையில் அதிக எண்ணிக்கையான மாணவர்கள்.
- வளங்களின் பற்றாக்குறை
- காற்றோட்டம், வெளிச்சம் என்பனவற்றின் பற்றாக்குறை

- பிறழ்வான நடத்தையுடைய மாணவர்களைக் கையாளுதல்.
- நேர முகாமை செய்தல்
- வெளிச் சூழலால் வருகின்ற இரச்சல்
- மாணவர்களின் கவனத்தை ஈர்த்தல்.
- ஒழுக்கத்தை மேம்படுத்தல்
- நிருவாக ரீதியான மேலதிக வேலைப்பாடு.
- பாடசாலைச் சமூகத்தின் எதிர்பார்ப்பு

இத்தகைய அழுத்தங்களை முகாமை செய்யவதற்கு முயற்சி செய்ய வேண்டும். முடியாத போது அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்வதற்கு தம்மைப் பழக்கப்படுத்துவதே மேலானதாகும். இவ்வாறான நிலமையில் நமது கடமையை நாம் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும்.

மாணவர்களின் கற்றலிலும் அழுத்தங்கள் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை. இதன் காரணமாக அழுத்தங்களில் இருந்து மாணவர்களை விடுதலை செய்வதற்கான பயிற்சியை வழங்க வேண்டியதும் ஆசிரியரின் பொறுப்பாகும். புறச்சூழலால் வரும் அழுத்தங்களை தடைசெய்யமுடியாத சந்தர்ப்பங்களில் அழுத்தங்களின் மத்தியில் வேலை செய்வதற்கான மனோ நிலையையும் ஆசிரியர்,மாணவர் அனைவரும் வளர்த்துக்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும். இலங்கையின் தேசிய கல்வி இலக்குகளில் ஒன்றாக “எதிர்பாராத நிலமையை சமாளிக்க கூடிய ஆற்றலை வளர்த்தல்” என்பதும் கருதப்பட்டுள்ளமை முக்கியமான விடயமாகும்.

## முடிவுரை

மாணவர்கள் நாட்டின் வளமாகும். இவர்களை பெறுமதி மிக்க, தகைமையுடைய தலைவர்களாக மாற்றவேண்டியது பாடசாலைகளின் பொறுப்பாகும். பாடசாலையில் இப்பணியை செய்யவேண்டியவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்களின் தனியாள் வேறுபாடுகள், தகைமை, ஆளுமை என்பன வகுப்பறையில் செல்வாக்கு செலுத்தக்கூடியவை. இதன் காரணமாக ஆசிரியர்கள் தம்மை வளப்படுத்த வேண்டியது மிகமுக்கியமானதாகும். தொழில்வாண்மை மிக்கவர்களாக மாற்றம் பெறுவதோடு, தமக்கு தேவையான மென்திறன்கள் பற்றி இனங்கண்டு அவற்றை விருத்தி செய்யவும் வேண்டும். அப்போதுதான் எமது நாட்டின் கல்வி இலக்குகள் உயர்ந்த மட்டத்தில் எய்தப்படும். மென்திறன்கள் என்பது மிகவும் விசாலமான பரப்பாகும். ஒரு சிறு கட்டுரையில் அனைத்தையும் விரிவாக உள்ளடக்குவது சாத்தியமற்றதாகும். ஆயினும் முடிந்தவரை அடிப்படை விளக்கத்தையாவது இவ் ஆக்கம் தரும் என்பது எழுத்தாளரின் எதிர்பார்ப்பாகும்.

## உசாத்துணைகள்


Bartel,J.(2018).*Office Soft Skills*. 3rd edition. Retrieved from https://wayzgoosepress.com

Bartel, J. (2018). Teaching Soft Skills for Employability. *TESL Canada Journal, 35*(1), 78 – 92. doi.org/10.18806/tesl.v35i1.1285.

Giuseppe.G., (2008). *Soft Skills* , Chelsea Publishing.

Idrus.H., (2009). Challenges in the integration of soft Skills in teaching technical courses: Lecturers' perspectives. *Asian journal of University Education*. Vol. 5 No. 2, 67-81, Retrieved from: https://education.uitm.edu.my/ajue/wp-content/uploads/2019/04/Challenges-in-the-Integration-of-Soft-Skills-in-Teaching-Technical-Courses-Lecturers%E2%80%99-Perspectives-.pdf

Klaus.P., (2008),*The Hard Truth About Soft Skills: Work place Lessons Smart People Wish They'd Leamed Sooner*, Harper Collins.

# கல்வியும் சமூக மாற்றமும்

திரு. பொன். இராமதாஸ்*

## அறிமுகம்

மாற்றம் வாழ்க்கையின் நியதியாகும். சமூகத்தில் மாற்றங்கள் எப்போதுமே நிகழ்ந்து கொண்டேயிருக்கும். மாற்றங்கள் தாமதமானதாகவும் இருக்கலாம். விரைவானதாகவும் இருக்கலாம். மாற்றங்கள் தாமதமாக இடம்பெறும் சந்தர்ப்பங்களில் மக்களது முன்னேற்றமும் தாமதமாகவே இடம்பெறும். வாழ்க்கையின் சகல அம்சங்களுமான அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் மற்றும் தொழிநுட்பம் போன்ற துறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. இவ்வாறு சமூகத்தில் மாற்றங்கள் இடம்பெறுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளில் மிக முக்கிய காரணியாக கல்விச் செயன்முறை அமைகின்றது.

## சமூக மாற்றம் பற்றிய எண்ணகரு

Davis (1989) என்பவர் சமூக அமைப்புக்களின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளில் இடம்பெறக்கூடிய மாற்று நடவடிக்கைகள் அல்லது பரிகார நடவடிக்கைகளே (alterations) சமூக மாற்றம் என வரையறுத்துள்ளார். இதன்படி பாரம்பரியமான அல்லது மரபுரீதியான சமூகக் கட்டமைப்பு அல்லது ஒழுங்கு முறைகள் என்பவற்றிலும் சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கான தொழிற்பாடுகளை பாரம்பரிய மரபுசார்ந்த வழிமுறைகளுக்கு அப்பால் புதிய முறைகள், வழிமுறைகளைப் பின்பற்றி நிறைவேற்றுவதற்கான பரிகார நடவடிக்கைகளே சமூக மாற்றம் என விளக்குகிறார். Gillin மற்றும் Gillin (1968) போன்றோர் மாற்றங்கள் தொடர்பில் வேறுபட்ட அம்சங்கள் காணப்படுகின்றன என குறிப்பிட்டுள்ளனர். புவியியல் சாரந்த நிபந்தனைகள், கலாசாரம் சார்ந்த சாதனங்கள், குடித்தொகைசார்ந்த காரணிகள் அல்லது கருத்துருவாக்கங்கள் போன்றன சார்ந்த பரம்பல் மற்றும் கண்டுபிடிப்புக்கள் இவற்றுள் அடங்குகின்றன.

*விரிவுரையாளர்,
இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
Email: prama@ou.ac.lk

Jones சமூகச் செயன்முறைகள், சமூகச் செயற்பாட்டு கோலங்கள், சமூக இடைத்தொடர்புகள் அல்லது சமூக அமைப்புகள் போன்ற அம்சங்களில் நிலவும் வேறுபாடுகள் அல்லது நவீனமயமாக்கம் என்பனவே சமூக மாற்றம் என வரையறுத்துள்ளார். Fairchild மேற்படி வரைவிலக்கணத்திற்கு சமமான கருத்தை முன்வைத்துள்ளார். அதன்படி சமூகச் செயன்முறைகள், கோலங்கள், வடிவங்கள் தொடர்பான அம்சங்களில் ஏற்படும் வேறுபாடுகள் அல்லது நவீனமயமாக்கம் சமூக மாற்றமாகும் என வரையறுத்துள்ளார். Jenson மக்களின் சிந்தனை மற்றும் விடயங்களைச் செய்யும் வழிமுறைகளில் ஏற்படும் நவீனமயமாக்கம் சமூக மாற்றம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய வரைவிலக்கணங்களுக்கு அமைவாகப் பார்க்கும் போது சமூக மாற்றம் என்பது மக்களின் வாழ்க்கை அல்லது சமூகத்தின் தொழிற்பாடுகளில் இடம்பெறும் நவீன வடிவம் அல்லது முறை (new fashion or mode) ஆகும். சமூக மாற்றங்களானது சமூகத் தொழிநுட்பம், தொடர்புறவுகள், நடத்தைக் கோலங்கள், பாரம்பரியங்கள், நிறுவனங்கள், தத்துவ அடிப்படைகள் என்பவற்றை உள்ளடக்கியவைகளாகும். இதனை வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் சமூக மாற்றம் என்பது சமூகக் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாட்டு முறைமைகளில் இடம்பெறும் மாறறங்களாகும். சமூக மாற்றம் பின்வரும் துறைகளை உள்ளடக்கியுள்ளது;

- சமூகக் கட்டமைப்பு மற்றும் நிறுவனங்கள்
- தனியாளின் வகிபாகங்கள்
- மக்களுக்கிடையிலான தொடர்புறவுகள்
- சமூக இடைத்தொடர்பு கோலங்கள்
- விழுமியங்களும் நியமங்களும்
- வேறுபட்ட குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் தொழிற்பாடுகள்

இவற்றின் அடிப்படையில், சமூகத்தின் வளர்ச்சி, விருத்தி, சமூகப் புரட்சி, சமூக முன்னேற்றம், சமூகச் சீர்திருத்தங்கள் போன்றவற்றுக்கு சமூக மாற்றம் இன்றியமையாதது.

### சமூக மாற்றத்தின் பண்புகள்

அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் மற்றும் தொழிநுட்பம் போன்ற துறைகளில் ஏற்படும் சமூகமாற்றமானது பின்வரும் பண்புகளை கொண்டுள்ளன;

- சமூக மாற்றம் அகிலம் தழுவியது (Universal): மாற்றம் இயற்கையின் நியதியாகும். இது உலகின் சகல சமூகங்களிலும் சகல அம்சங்களிலும் இடம்பெறுவதாகும்.
- சமூக மாற்றம் தொடர்ச்சியானது: சமூக மாற்றமானது ஒரு குறித்த காலத்தல் அல்லது சந்தர்ப்பத்தில் மாத்திரம் இடம்பெறுவது இல்லை. இது சகல இடங்களிலும் எல்லா காலங்களிலும் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகும்.

- சமூக மாற்றம் வேறுபடக்கூடியது: சமூக மாற்றமானது காலம், விசேடமாக குறிப்பிட்ட காலப்பகுதி, உயர் மட்டத்தில் அல்லது தாழ் மட்டத்தில் இடம்பெறுவதோடு சமூகத்திற்கு சமூகம் வேறுபடக்கூடியது.
- சமூக மாற்றம் பாரிய குடித்தொகைக்குரிய குறிகாட்டியாகும்: சமூக மாற்றம் ஒரு பரந்த சனத்தொகையில் தாக்கம் செலுத்தினால் மாத்திரமே அதனை மாற்றம் என ஏற்றுக்கொள்ளலாம்.
- சமூக மாற்றம் சுதந்திரமாக நிகழக்கூடியது: சமூக மாற்றம் மக்களின் அல்லது சமூகத்தின் விருப்பம் மற்றும் ஆர்வங்களுக்கு அமைவாக சுதந்திரமாக இடம்பெறும்.
- சமூக மாற்றத்திற்கான சக்திகள்: சமூக மாற்றத்திற்கான சக்திகள் குறித்ததொரு சமூகத்தினுள் காணப்படும் உள்வாரியான சக்திகள் மூலமாகவோ அல்லது குறித்த சமூகத்திற்கு வெளியே காணப்படும் வெளிவாரியான சக்திகள் மூலமாகவோ இடம்பெறலாம்.
- சமூக மாற்றம் திட்டமிடப்பட்டதும் திட்டமிடப்படாததாகவும் காணப்படும்: ஆரம்பக் காலங்களில் சமூக மாற்றங்கள் திட்டமிடப்படாத, வழிப்படுத்தல் அற்ற விதத்தில் இடம்பெற்றன. இன்றைய நவீன யுகத்தில் மாற்றங்கள் நன்கு திட்டமிடப்பட்டு, நிர்ணயக்கப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்வதற்காக சமூகத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

## சமூக மாற்றமும் சமூக முன்னேற்றமும்

சமூக முன்னேற்றங்கள் சமூக மாற்றங்களே. எனினும் சகல மாற்றங்களும் முன்னேற்றங்கள் ஆவதில்லை. சமூக முன்னேற்றம் குறித்த திசையில் குறித்த சில அல்லது பல நோக்கங்கள் மற்றும் நோக்குகளின் அடிப்படையில் பயணிப்பதாகும். இத்தகைய அடிப்படையில் மாற்றங்கள் விரும்பத்தகுந்த நோக்கங்களை அல்லது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாயின் மாத்திரமே அது முன்னேற்றம் என அழைக்கப்படும். சமூக முன்னேற்றம் சமூக இலட்சியங்களின் (ideas) விளைவுகளாகும். அவை எமது சமூக விழுமியங்களால் நிர்ணயிக்கபப்டுகின்றன. சமூக விழுமியங்கள் சமூக முன்னேற்றத்திற்கான குறிகாட்டிகளாகும். ஆகையால் பொருளாதார அபிவிருத்தி, அரசியல் விழிப்புணர்வு, அறநெறிசார்ந்த முன்னேற்றம் மற்றும் சிறந்த கல்வி போன்றன பாரிய அளவிலான சமூக முன்னேற்றத்திற்கான குறிகாட்டிகளாகும்.

## சமூக மாற்றம் சார்ந்த அம்சங்கள்

சமூக மாற்றங்கள் பொருளாதாரம், அரசியல், சமயம், அறநெறி, கலாசாரம், விஞ்ஞான தொழில்நுட்பம் போன்ற பல அம்சங்களில் இடம்பெறுகின்றன. இவை தொடர்பான விபரங்கள் பின்வருமாறு முன்வைக்கப்பட்டுள்ளது.

- பொருளாதாரம்: கைத்தொழில், வர்த்தகம், வியாபாரம், வணிகம், விவசாயம் மற்றும் பொருள்முதல்வாத மனப்பாங்கு

- அரசியல்: அரசியல் பலம் மற்றும் நாட்டின் நிருவாகம், ஜனநாயக விழுமியங்களை பின்பற்றல், மதச்சார்பின்மை, சமதர்மம், பாசிசம்
- சமயம்: வேறுபட்ட சமய நிறுவனங்களில் இடம்பெறும் மாற்றங்கள் ஆகும். இவை நவீனமயமாக்கத்தினால் இன்று குறைவடைந்து வருகின்றன
- அறநெறி: அறநெறி சார்ந்த விழுமியங்கள், கருத்துக்கள், நம்பிக்கைகள்
- கலாசாரம்: கலாசாரம், விழுமியங்கள், பாரம்பரியங்கள் மற்றும் சடங்குகள்
- விஞ்ஞான தொழில்நுட்பம்: விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கண்டுப்பிடிப்புகளும் புத்தகங்களும்
- தனியாளின் சமூகமயமாக்கல் மற்றும் ஆளுமை விருத்தி தொடர்பான மாற்றங்கள்

## சமூக மாற்றங்களில் தாக்கம் செலுத்தும் காரணிகள்

சமூக மாற்றங்களில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் புவியியல், உயிரியல், குடியியல், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பம், கருத்தியல்வாதம், கலாசாரம், உளவியல், யுத்தம், புதிய கருத்துக்கள் மற்றும் சிந்தனைகள், தனிநபர்களின் தொண்டர் அடிப்படையிலான சேவைகள், உயர் அந்தஸ்தில் உள்ளவர்களின் அங்கீகாரம், சட்ட அங்கீகாரம் மற்றும் கல்வி போன்ற பல காரணிகள் உள்ளடங்குகின்றன. இவற்றினை சுருக்கமாக நோக்குவோம்.

- புவியியல் சார்ந்த காரணிகள்: பௌதிகச் சூழல் அல்லது புவியியல் காரணிகளான சூறாவளி, புவிநடுக்கம், பஞ்சம், தொற்றுநோய், தீ, மழைவீழ்ச்சி, வரட்சி, குளிர்காலநிலை என்பன மக்களின் வாழ்க்கை முறையை மாற்றியமைக்கும்.
- உயிரியல் சார்ந்த காரணிகள்: பரம்பரைக் காரணிகள் சமூக மாற்றங்களுக்கு வழிசமைக்கும். உணர்வுகள், நுண்மதி, ஆளுமை, செயற்பாட்டு மட்டம், இயலுமைகள் என்பனவற்றை பரம்பரைக் காரணிகள் நிர்ணயிக்கின்றன. மேலும் உயிரியல் காரணிகள் தனிநபரின் பலம், பலவீனம் என்பவற்றிலும் தாக்கம் செலுத்தும்.
- குடியியல் காரணிகள்: குடித்தொகை சமூக மாற்றத்தில் முக்கியமான செல்வாக்கைச் செலுத்தும். குடித்தொகையின் அதிகரிப்பு மற்றும் வீழ்ச்சி, ஆண், பெண் வீதம் என்பன குடும்ப மற்றும் சமூக நிலைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும்.
- தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞானக் காரணிகள்: தொழில்நுட்ப மற்றும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள், இயந்திர மற்றும் உபகரணங்களின் புத்தாக்கம் சமூக மாற்றங்களுக்கு வித்திடும், தொடர்பாடல் தொழில்நுட்பம் பிராந்தியங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைக்கும். மேலும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மருத்துவத்துறை, பொதுச்சுகாதாரம், சமூக ஒழுங்கமைப்புகள், போக்குவரத்து, அறிவுத்தொகுதி, அறிவுப்பகிர்வு என்பவற்றுக்கும் வழியேற்படுத்துகின்றது.
- கருத்தியல்வாதக் காரணிகள்: சமூக மாற்றங்களில் தாக்கம் செலுத்தும் காரணிகளில் கருத்தியல்வாதக் காரணிகள் மிக முக்கியமானது. இதனையே "கருத்துக்கள் உலகை ஆட்சி செய்கின்றன" (ideas rule the world) என்ற வாசகம்

உறுதி செய்கின்றது. இதில் தத்துவ, விஞ்ஞான, அரசியல், சமயம் போன்ற துறைசார்ந்த கருத்தியல்கள் உள்ளடங்குகின்றன. பிரான்சின் 1789 ஆண்டு சமூகப் புரட்சியில் சுதந்திரமும் சமத்துவமும் (liberty and equality) என்பன சமூகப் புரட்சிக்கான சக்திகளாக அமைந்தன. அதேபோல கமியூனிசம், சமதர்மம், ஜனநாயகம் போன்ற கருத்தியல்வாதம் சமூகத்தின் வாழ்க்கைக் கோலத்தில் மாற்றங்களை ஏற்படுத்தின.

- கலாசாரக் காரணிகள்: கலாசாரம் சமூக மாற்றத்திற்கான விரைவுப்படுத்தப்பட்ட நெறிப்படுத்தலை வழங்கும். இது தலைமுறைக்கு தலைமுறை மாற்றமடையும்.
- உளவியல் காரணிகள்: மனிதன் இயற்கையாகவே மாற்றங்களை விரும்புவன். அவன் எப்போதும் எல்லா அம்சங்களிலும் புதியவற்றை கண்டுபிடிப்பதற்கும் புதிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதிலும் ஆர்வம் கொண்டவன்.
- யுத்தக் காரணிகள்: யுத்தங்களுடன் தொடர்புபட்ட காரணிகள் குடித்தொகை, பொருளாதாரம், ஆண், பெண் விகிதம் என்பவற்றில் தாக்கங்களை ஏற்படுத்தும்.
- புதிய கருத்துக்களும் சிந்னைகளும்: சமூக மாற்றத்தில் புதிய கருத்துக்களும் சிந்தனைகளும் தாக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக சாதி முறைமை, பெண்களுக்கான கல்வி போன்றன தொடர்பான புதிய சிந்தனை முறைகளே பல புரட்சிகளுக்கு வித்திட்டன.
- தனிநபர்களின் தொண்டர் சேவைகள்: மிக முக்கியமான சமூக மற்றும் கலாசார மாற்றங்கள் மாண்புமிகு மனிதர்களின் தன்னிச்சையான தொண்டர் அடிப்படையிலான சேவைகளாலேயே ஏற்படுத்தப்பட்டன. இதற்கு மகாத்மா காந்தி, லெனின் போன்றோர் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக இருக்கின்றனர்.
- உயர் அந்தஸ்தில் உள்ளவர்களின் அங்கீகாரம்: உயர் அந்தஸ்தில் அல்லது பதவிநிலையில் உள்ளவர்களால் மாற்றங்கள் அங்கீகரிக்கப்படும் போது பெரும்பாலான மக்களும் மாற்றங்களை ஏற்றுக்கொள்வர்
- சட்ட அங்கீகாரம்: சட்ட ரீதியான தன்மை திட்டமிடப்பட்ட மாற்றங்களுக்கு அத்தியாவசியமானவை. ஐக்கிய அமெரிக்காவின் அடிமை முறை நீக்கம், பல நாடுகளில் அறிமுகம் செய்யப்பட்ட கட்டாய ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி, இந்தியாவில் தீண்டாமை ஒழிப்பு, பாலிய திருமணம் இல்லாமல் செய்யப்பட்டமை, பெண்களுக்கான சொத்துரிமை போன்றன இவற்றுக்கு சிறந்த உதாரணங்களாகும்.
- கல்வி: சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் கல்வி மிகவும் சக்தி வாய்ந்த காரணியாக காணப்படுகின்றது.
- ஏனைய காரணிகள்: இதுவரை நாம் கலந்துரையாடிய விடயங்கள் தவிர்ந்த இன்னும் பல காரணிகள் சமூக மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்துகின்றன. அந்த அடிப்படையில், மேலைத்தேய மயமாக்கம், நகரமயமாக்கம், சகிப்புத்தன்மை, இயந்திரமயமாக்கம், ஜனநாயக மயமாக்கம், தன்னாதிக்கம் அல்லது தனியரிமை, அரசியல் மயமாக்கம், முதலாளித்துவம், கலாசார மயமாக்கம், பொருள்முதல்வாத

மனப்பாங்கு, தியானம், இறைவணக்கம், ஓதுதல் முதலிய இந்தியவாதம் மற்றும் நவீனமயமாக்கம் போன்ற காரணிகளும் சமூக மாற்றங்களில் தாக்கம் செலுத்துகின்றன.

## சமூக மாற்றம் பற்றிய கோட்பாடுகள்

சமூக மாற்றம் பற்றிய கோட்பாடுகள் இரண்டு காணப்படுகின்றன;

1. பரிணாம வளர்ச்சிவாதம் (evolutionism)
2. வரலாற்று பொருள்முதல் வாதம் (historical materialism)

## 1. பரிணாம வளர்ச்சிவாதம்

உயிரியல்சார் விருத்தியும் மானிட சமூகத்தின் வெற்றியும் வரலாற்றில் சமாந்தரமாக பயணிக்கின்றன. Parson ( ) என்பவரின் பரிணாம வளர்ச்சிக் கோட்பாட்டுக்கு அமைவாக, பரிணாம வளர்சசி என்பது அகிலம் தழுவியது. எவ்வகையான அபிவிருத்தியும் ஒரு காலக்கட்டத்தில் பல்வேறு நிபந்தனைகளின் கீழ் அறுவடை செய்யப்படுவதோடு அவை உயர்ந்த சிறப்பான வாழ்க்கை பெறுமதியைக் கொண்டவை ஆகும். தூர நோக்குகள், மொழியை அடிப்படையாகக் கொண்ட தொடர்பாடல், சமயம், உரித்துடைமை அல்லது சொந்தம் மற்றும் தொழில்நுட்பம் போன்றவை இவற்றில் குறிப்பிடத்தக்கவை, இவை மனித சமூகத்தின் நிலவுகைக்கும் செயற்பாடுகளுக்கும் அத்தியாவசியமான அகிலம் தழுவிய அம்சங்களாகும். Parson இன் கருத்துப்படி சமூகப்பரிணாமம் சமூக நிறுவனங்களில் நிகழ்ந்த வேறுபட்ட முன்னேற்றகரமான மாற்றங்கள் எனவும் அவை இலகுவானதிலிருந்து சிக்கலானதை நோக்கி சமூகத்தை நகர்வடையச் செய்துள்ளதாக அமைகின்றன. பரிணாம வளர்ச்சிவாதம் பின்வரும் நான்கு துணைப்பிரிவுகளின் கீழ் முன்வைக்கப்பட்டுள்ளன;

- குறியீட்டுவாதம் (Constitutive Symbolism): எண்ணங்களையும் பொருள்களையும் சின்னங்களால் அல்லது குறியீடுகளால் அடையாளப்படுத்துதல். இதனால் கருதப்படுகின்றது. இவை பெரும்பாலும் சமயம் சார்ந்தவை. மேலும் இவை மனித வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் தாக்கம் செலுத்துகின்றது.
- பழைமைப்பேண் சமூகங்கள் (Advanced Primitive Societies): சமூக வகுப்பு முறைமை, இனப்பிரிவுகள், விவசாயிகள், இடையர்கள் போன்ற பழமைபேண் அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றன. இக்காலத்தில் சமயங்கள் பிரிவடைந்தன.
- இடைக்காலச் சமூகம் (Intermediate Societies): இச்சமூகத்தில் வாசிப்பு, எழுத்து வளர்ச்சியடைந்தன. சமயங்கள் மேலும் பிரிவடைந்தன. அரசியல் தலைமைத்துவம் அரசாங்க நிருவாகமாக விருத்தியடைந்தது. பணிக்குழுவாட்சி அடிப்படையிலான ஒழுங்கமைப்புகள் தோற்றம் பெற்றன. நிதி மற்றும் சட்டங்கள் மேலும் சிறப்பாக வளர்ச்சியடைந்தன.

- கைத்தொழில் சமூகம் (Industrial Societies): சமூகத்தில் மேலும் பல்வேறு உள்வாரியான வேறுபாடுகள் தோற்றம் பெற்றன. பொருளாதார மற்றும் அரசியல் முறைமைகள் சட்டம் மற்றும் நீதி முறைமை என்பன சமயத்திலிருந்து பிரிவடைந்து சென்றன.

இவ்வாறு சமூக மாற்றம் பற்றிய கோட்பாடானது பரணாம வளர்ச்சி குறியீட்டுவாதம், பழைமைப்பேண் சமூகம், இடைக்காலச் சமூகம் மற்றும் கைத்தொழில் சமூகம் என்னும் நான்கு கட்டங்களுக்கூடாக சமூக மாற்றங்கள் இடம்பெற்றன என்பதை விளக்குகின்றது.

## 2. வரலாற்று பொருள்முதல் வாதம் (Historical materialism)

மார்க்ஸ் மாற்றங்கள் பொருள்சார்ந்த சூழலுடனான இடைத்தொடர்புகள் ஊடாகவே இடம்பெறுகின்றன என நம்பினர். மேலும் மார்க்ஸ் குறிப்பிடுவதன்படி ஒவ்வொரு சமூகத்திற்கும் ஒரு சமூக கட்டமைப்பு காணப்படுகின்றது. இந்த அடிப்படை சமூக கட்டமைப்பில் (superstructure) ஏற்படுத்துகின்ற மாற்று ஏற்பாடுகளே (alterations) சமூக மாற்றங்கள் ஆகும். இந்த மாற்று ஏற்பாடுகள் அரசியல், சட்டம், கலாசாரம் மற்றும் நிறுவனங்கள் சார்ந்தவையாக இருக்கலாம். சமூக மாற்றங்கள் மெதுவான அபிவிருத்தியில் மாத்திரமல்லாமல், புரட்சிகரமான நிலைமாற்றங்களிலும் (transformations) இடம்பெறும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சமூக மாற்றங்கள் பதற்றங்கள் (tensions) பிளவுகள் (clashes) மற்றும் பிரச்சினைகள் (struggles) என்பவற்றின் ஊடாகவே ஏற்படுகின்றன.

## சமூக மாற்றங்களுக்குத் தடையாக அமையும் காரணிகள்

சமூக மாற்றங்களுக்குத் தடையாக பல்வேறு காரணிகள் அமைகின்றன.

1. சமூகத்தடைகள் - மரபுரீதியாக நிலவிவரும் மதக்கோட்பாடுகளின் நம்பிக்கைகள், சாதிமுறைமை, சமூக வகுப்பு, பொதுசன அபிப்பிராயம், ஆர்வமின்மை, குழுக்கள் அல்லது கட்சிகளுக்கு இடையில் நிலவும் உட்கட்சிப்பூசல் மற்றும் முரண்பாடுகள் என்பன சமூக மாற்றங்களுக்கான சமூகத்தடைகளாகும்.
2. கலாசாரத்தடைகள் - பழைமைவாதம் விதியைக் காரணமாகக் கூறி மாற்றங்களை ஏற்க முன்வராமை, உயர்வுச்சிக்கல், பாரம்பரிய வாழ்க்கை முறையிலிருந்து விடுபட முடியாமை, பரம்பரை இடைவெளி, அடிமை முறைமை மற்றும் வறுமை என்பன கலாசாரத் தடைகளாகும்.
3. அரசியல் தடைகள் - மன்னராட்சி அல்லது சர்வாதிகார முறை மக்களின் முன்னேற்றத்தை விரும்புவதில்லை.
4. பொருளாதாரத் தடைகள் - வறிய மக்கள் உணவு மற்றும் அத்தியாவசியத் தேவைகளுக்கு அப்பால் வேறு எவை பற்றியும் சிந்திக்க மாட்டார்கள் . அதேபோல் பணம்படைத்த செல்வந்தர்களும் மேலதிக சிந்தனையில் ஈடுபட மாட்டார்கள். இதற்கு மத்திய-கிழக்கு நாட்டவர்கள் சிறந்த உதாரணமாவர்.

5. உளவியல் தடைகள் - மனிதன் இயல்பாகவே பாரம்பரியங்களை நேசிப்பவன். இது புதிய சிந்தனைக்கு அல்லது சமூக மாற்றங்களுக்கு தடையாக அமையும்.
6. பயம் - அடிமைகள், வறிய பாமர மக்கள் சுயநம்பிக்கை குறைவு காரணமாக மாறறங்களுக்கு தேவையற்ற பயம் கொள்வர்.
7. புத்தாக்கங்களின் பற்றாக்குறை – பாரம்பரிய பழைமைபேண் சமூகங்களில் மாற்றங்களுக்கான புத்தாக்கங்கள் மிகக் குறைவாக அல்லது மந்த நிலையிலேயே காணப்படும்.
8. தனிமைப்படுத்தப்பட்ட நிலைமை – சில சமூக குழுக்கள் தேசிய அல்லது சர்வதேச தொடர்புகள் அல்லது உறவு அற்ற நிலையில் காணப்படும். இதனால் இத்தகைய சமூக மாற்றங்களை உள்வாங்கிக் கொள்வது மிகவும் தாழ்வான மட்டத்திலேயே காணப்படும்.

## சமூக மாற்றத்திற்கான கருவியாகக் கல்வி

கல்வி சமூகத்திற்கான சக்திமிக்க கருவியாகும். கல்வியினூடாக சமூகத்தில் விரும்பத்தகுந்த மாற்றங்களையும் நவீனமயமாக்கத்தையும் கொண்டுவர முடியும். கல்வியினால் சமூக உருமாற்றத்திற்கான சந்தர்ப்பங்களையும் அனுபவங்களையும் தனியாளுக்கு பெற்றுக்கொடுக்க முடியும். இவவாறு கல்வி சமூக மாற்றத்திற்கான சக்திமிக்க கருவியாக அமைவதனால், மக்களின் தேவைகளையும் அபிலாசைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய விதத்தில் கல்வியை கவனமாகத் திட்டமிட்டு வழங்க வேண்டும். இனி சமூக மாற்றத்திற்கான கருவியாக கல்வி தொழிற்படும் விதங்களை நோக்குவோம்.

- மனப்பாங்குகளை மாற்றுவதற்கு உதவுதல்: மக்களின் பாரம்பரிய நம்பிக்கைகள், தவறான அபிப்பிராயங்கள், மூட நம்பிக்கைகள், என்பவற்றை நவீனமயமாக்கத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைப்பதற்கு கல்வியினால் உதவ முடியம்.
- சமூக மாற்றத்திற்கான விருப்பத்தினை கட்டியெழுப்ப உதவுதல்: கல்வியினால் சமூக மாற்றங்களுக்கான முன் - நிபந்தனைகளுக்கான விருப்பத்தினை கொண்டுவர முடியும். மது பாவணை போன்ற தவறான செயற்பாடுகள், சீதனம், சூதாட்டம், பிச்சையெடுத்தல், அடிமை ஊழியம் போன்றன தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை பெற்றுக் கொடுக்க முடியும். பிற்படுத்தப்பட்ட பின்தங்கிய சமூகக் குழுக்களின் முன்னேற்றத்திற்கு கல்வியினால் பங்களிப்புச் செய்ய முடியம்.
- சமூக மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடைய உதவுதல்: விரும்பத்தகுந்த நல்ல மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு இசைவாக்கமடைய கல்வியினால் மக்களுக்கு விழிப்புணர்வை வழங்க முடியும்.
- மாற்றங்களுக்கான தடைகளை நீக்குவதற்கு அல்லது தடைகளுக்கு முகங்கொடுக்க கல்வியினால் உதவ முடியும்.
- மாற்றங்களின் சாதக மற்றும் பாதக நிலைமைகளை பகுப்பாய்வு செய்வதற்கு உதவ முடியும். கல்வியினால் விருத்தி செய்யப்படும் நுண்மதியினூடாக சரி மற்றும் பிழைகளை பகுப்பாய்வு செய்யக்கூடியதாக இருக்கும்.

- புதிய மாற்றங்களை கல்வியினூடாக புகுத்தலாம்: சமூகச் சீர்திருத்தங்களுக்கான முன்னெடுப்புக்கள், வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாடு என்பவற்றை கல்வியினால் ஏற்படுத்தலாம்.
- சமூக மாற்றத்திற்கான தலைமைத்துவம்: மகாத்மா காந்தி எழுத்தறிவின்மையை ஒழிப்பதற்கான அடிப்படை கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கினார்.
- புதிய அறிவினை தோற்றுவித்தல்: புதிய ஆராய்ச்சிகளும் கண்டுபிடிப்புகளும் கல்வியில் தங்கியுள்ளன. காரணம் கல்வி கற்றவர்களால் மாத்திரமே புதிய விடயங்களை கண்டறிய முடியும். இதனால் நிலவுகின்ற அறிவில் மாற்றங்களை கல்வி ஏற்படுத்துவதனூடாக சமூக மாற்றங்களுக்கு கல்வி உதவுகின்றது.
- விழுமியங்களைப் பாதுகாத்து கலாசாரத்தை கைமாற்றம் செய்தல் மற்றும் ஜனநாயக விழுமியப் பண்புகளை நிலைப்படுத்தல்: ஜனநாயகத்திற்கான ஆயுதம் கல்வியாகும். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், நீதி, சகிப்புத்தன்மை, பரஸ்பர மரியாதை, சகோதரத்துவம் மற்றும் சமாதானத்தில் நம்பிக்கை, தேசிய ஒருங்கிணைப்பு என்பன சமூக மாற்றங்களுக்கான அடிப்படை ஜனநாயகப் பண்புகளாகும்.
- பொருளாதார முன்னேற்றம்: வேகமான பொருளாதார அபிவிருத்தி, தொழிநுட்ப முன்னேற்றம், சமூக ஒழுங்கினை விருத்தி செய்வதற்கான விழுமியங்களை விருத்தி செய்தல் சமூக நீதியும் சமமான சந்தர்ப்பங்களும் சமூக மாற்றத்திற்கான அடிப்படைகளாகும். இவற்றை அடைந்து கொள்வதற்கு கல்வியின் பங்களிப்பு அவசியம்.
- தேசிய அபிவிருத்தி: கல்வி தேசத்தின் அபிவிருத்திக்கான அடிப்படையாகும். கல்வி பொருளாதார, அரசியல், கலாசார, விஞ்ஞான மற்றும் சமூக மாற்றங்களுக்கான சக்திமிக்க காரணியாகும்.

## சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதில் ஆசிரியர் வகிபாகம்

முறைசார் கல்வி முறைமையின் முதுகெலும்பு ஆசிரியர்களாவார். ஆசிரியர்கள் சமூக மாற்றத்திற்கான விளைதிறன்மிக்க முகவராவர். ஆசிரியர்கள் சமூகத் தேவைகள், இயல்புகள், சமூக மாற்றத்திற்கான செல்நெறி என்பவற்றை நன்கு அறிந்திருக்க வேண்டும். இன்றைய ஜனநாயக சமூகம், சமூக மாற்றத்திற்கான உண்மையான மாற்ற முகவராக ஆசிரியர் செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றது. அதற்காக பின்வரும் வகிபாகங்களை ஆசிரியர் ஏற்க வேண்டியுள்ளது.

- நவீனத்துவத்திற்கான முன்மாதிரி: நவீன விழுமியங்களை கொண்டிருப்பதோடு அவற்றை நடத்தையில் வெளிக்காட்டுதல் வேண்டும். அத்தகைய நடத்தைப் பண்புகளாக விஞ்ஞான ரீதியான மனப்பாங்கு, விமர்சனப்பாங்கான சிந்தனை, ஒத்துணர்வு, இயங்குத்தன்மை, ஜனநாயகப்பாணி, தனியாள் ஆளுமைப்பண்புகளை மதித்தல், மதச்சார்பற்றவராக மாற்றத்திலும் நிலைமாற்றத்திலும் விசுவாசத்துடன் செயற்படல் போன்றன காணப்படுகின்றன.

- திறன்களில் தேர்ச்சி பெற்றிருத்தல்: ஆசிரியர்கள் இளம் சந்ததியினரையும், எதிர்கால பிரஜைகளையும் வழிநடத்துகின்றவர்கள் என்பதனால் திறன்களில் தேர்ச்சிமிக்கவர்களாக இருத்தல் வேண்டும்.
- உளவியல் சார்ந்த கவிநிலை: புதிய மாற்றங்களுக்குத் தேவையான மனப்பாங்குகள் மற்றும் விழுமியங்களுக்குத் தேவையான உளவியல் சார்ந்த கவிநிலையை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.
- மீள் - திசைமுகப்படுத்தல்: சமூக மாற்றத்திற்கு அமைவாக ஆசிரியர் தன்னையும் சமூகத்தையும் மீள் - திசைமுகப்படுத்தலுக்கு உட்படுத்துதல் அவசியமாகும்.
- மாற்றங்களுக்கான ஆலோசனைகளை முன்வைத்தல்: சமூக மாற்றங்களுக்கான தனது சொந்த ஆலோசனைகளை ஆசிரியர்கள் கொண்டுவருதல் வேண்டும். அம்மாற்றங்களை தயார்படுத்துவதற்கும் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். ஆசிரியர் நேரான அல்லது சாதகமான மாற்றங்களை மனமுவந்து ஏற்றுக்கொள்ளல் வேண்டும். விஞ்ஞான தொழிநுட்பத்தை பயன்படுத்துவது தொடர்பில் பொருத்தமான மனப்பாங்கு மற்றும் விழுமியங்களை மாணவர்களிடத்தில் வளர்த்தெடுத்தல் வேண்டும். முறைசாரா கல்வி, தொழிநுட்பக் கல்வி, சனத்தொகை கல்வி, உள்ளடங்கற் கல்வி, வளர்ந்தோர் கல்வி, பெண்கள் கல்வி, பின்தங்கிய சமூக வகுப்பினர் கல்வியில் பங்கேற்றல் என்பவற்றை உற்சாகப்படுத்தவதனூடாக, உயிரோட்டமான பரந்த விருப்புடன் சமூக மாற்றத்தில் ஆசிரியர்கள் பங்கேற்றல் வேண்டும்.
- தடைகளை களைதல்: சமூக மாற்றத்திற்கான தடைகளை களைந்தெறிதல் வேண்டும். அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் சமூக மாற்றம் அல்லது அபிவிருத்திக்கு எதிரான தடைகளை நீக்குவதற்கு ஆசிரியர் உதவ வேண்டும்.
- மாணவர்களிடத்தில் விஞ்ஞான மனப்பாங்கினை வளர்த்தல்: தர்க்க ரீதியான சிந்தனை, ஆர்வம், சிந்தனைத்திறன், நேரான கட்டுருவாக்க விஞ்ஞான மனப்பாங்கு என்பவற்றை வகுப்பறை மற்றும் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளுக்கூடாக மாணவர்களிடத்தில் விருத்தி செய்ய வேண்டும்.
- ஆர்வமிக்க மனப்பாங்கு: தன்னார்வ மனப்பாங்கினை ஆசிரியர் கொண்டிருத்தல் வேண்டும். சகல மதங்களையும் மதித்தல், மாணவர் மற்றும் சகபாடிகளுடன் செயற்படும் போது சாதி மற்றும் சமூக வகுப்பு என்பவற்றை கவனத்தில் எடுக்காமை போன்றன ஆசிரியர்களிடத்தில் காணப்பட வேண்டிய மனப்பாங்குகளில் முக்கியமானவை. பாடசாலையின் முழுச் சூழலையும் நவீனமயப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் பங்களிப்புச் செய்வார்களாயின், அவர்கள் சமூக மாற்றத்திற்கான சக்திமிக்க உள்ளீடுகளாவர். காரணம் இன்றைய மாணவர்களே நாளைய சமூகத்தின் தூண்களாவர் என்பதனாலாகும்.
- தேசிய மற்றும் சர்வதேசப் பார்வை: ஆசிரியர் தேசிய மற்றும் சர்வதேச பார்வை அல்லது அனுபவங்களை கொண்டிருத்தல் வேண்டும். மனவெழுச்சி ஒருங்கிணைப்பு,

தேசிய ஒருங்கிணைப்பு, சர்வதேசப் புரிந்துணர்வு அல்லது விளக்கம் என்பவற்றை ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டும்.

- மாணவர்-மைய மற்றும் சமூக-மைய கல்வி: மாணவர்-மைய, வாழ்க்கை-மைய மற்றும் சமூக-மைய கல்வி அனுபவங்களை வழங்க வேண்டும். மாணவர்களின் முழுமையான அபிவிருத்திக்கு சந்தர்ப்பங்களை வழங்க வேண்டும். பாடசாலையினதும் சமூகத்தினதும் மனித மற்றும் பௌதிக வளங்களை உச்சமாகப் பயன்படுத்துவதனூடாக சமுதாய வாழ்க்கையை முன்னேற்றுவதற்கு நிலையான பங்களிப்பை நல்க வேண்டும்.
- நவீன தொழில்நுட்ப சாதனங்களை கற்பித்தலில் பயன்படுத்துதல்: விஞ்ஞான தொழில்நுட்ப சாதனங்களை விளைதிறன்மிக்க வகையில் பயன்படுத்துவதோடு அவற்றை வாழ்க்கையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு தேவையான பழக்கங்களை உருவாக்க வேண்டும். விஞ்ஞானத்தை உபகரணப் பாவனையுடன் கற்பித்தல், மொழியியல் ஆய்வுக்கூட பாவனையுடன் மொழிக்கற்பித்தல், சகல பாடங்களிலும் நிரலித்த கற்பித்தலை பயன்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பயன்பாடு, கல்வி சஞ்சிகைகள், மேலதிக வகுப்பறைக் கற்பித்தல் என்பவற்றை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

## முடிவுரை

மாற்றம் மனித வாழ்க்கையின் நிலவுகைக்கு அவசியமானது. இருபத்தோராம் நூற்றாண்டின் விஞ்ஞான தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது மாற்றங்களை என்றும் இல்லாதவாறு விரைவுப்படுத்தியுள்ளது. இதில் கனணித் தொழில்நுட்பமும் இணையத்தின் பங்களிப்பும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. சமூகத்தில் அரசியல், பொருளாதார, கலாசார, மருத்துவம், கல்வி மற்றும் தொழில்நுட்பம் போன்ற அனைத்து துறைகளிலுமே மாற்றங்கள் நிதமும் இடம்பெறுகின்றன. இத்தகைய மாற்றங்களில் திட்டமிடப்படாத மற்றும் திட்டமிடப்பட்ட ஆகிய இரண்டு வகையான மாற்றங்களும் பங்களிப்புச் செய்கின்றன. எனினும் திட்டமிடப்பட்ட மாற்றம் இவ்விரண்டு வகையில் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இந்த திட்டமிடப்பட்ட மாற்றத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கான மிக முக்கிய கருவியாக அல்லது சாதனமாக கல்வி அமைகின்றது. இதனால் தான் நாடுகள் தமது அபிவிருத்தித் திட்டங்களையும் அதற்கு பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான மனித வளங்களையும் தயார்படுத்துவதற்கு ஏற்ற வகையில் கல்விச் சீர்திருத்தங்களை முன்னெடுக்கின்றன. அத்தோடு அபிவிருத்தித் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தேவையான திறன்களையும் தேர்ச்சிகளையும் மாணவர்களில் விருத்தி செய்வதற்காக ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. எனவே நாடுகளின் சமூக மாற்றங்களுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய எதிர்கால பிரஜைகளை உருவாக்கும் ஆசிரியர்கள், சமூக மாற்றம் பற்றியும் சமூக மாற்றத்தினை ஏற்படுத்துவதில் கல்வி மற்றும் ஆசிரியர்களின் வகிபங்கு என்பன பற்றி தெளிவாக விளக்கம் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகைய தெளிவினைப் பெற்றுக் கொள்வதற்கு இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்கள் குறிப்பிடத்தக்களவுக்கு உதவியாக அமையும்.

**உசாத்துணைகள்**


Mondal, P. (2009) Social Change: Characteristics and Factors, retrieved from http://www.yourarticlelibrary.com/society/social-change-characteristics-and-factors-5285-words/6169

CivilServiceIndia, (2019) Social Change, https://www.civilserviceindia.com/subject/Sociology/notes/social-change.html

Harington, Austin (2005). *Modern Social Theory: An Introduction*, New York: Oxford University Press.

IGNOU (2002). Es-334 *Education and society*, New Delhi: The Director, School of Education.

Rao,S., (2004*) Sociology of Indian Society*, New Delhi: S. Chand & Company.

Rao,S.,(2006) *Principles of Sociology with an Introduction to Social Thought*, New Delhi: S.Chand & Company.

# தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம்

திரு. க. கேதீஸ்வரன்*

**அறிமுகம்**

தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டமானது விசேட தேவையுள்ள பிள்ளைகளின் விருத்தியில் முக்கியமான அம்சமாகக் காணப்படுகின்றது. ஒரு விசேட தேவையுள்ள பிள்ளை இனங்காணப்பட்டதும் அப்பிள்ளையின் கல்வி மற்றும் சமூக விருத்தியை இலக்காகக் கொண்டவகையில் இத்திட்டம் அமையப்பெறுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டமானது விசேட தேவையுள்ள பிள்ளையை வேலை உலகிற்கும் சமூக வாழ்க்கைக்கும் ஏற்றவகையில் தயார்படுத்தும் வகையில் திட்டமிடப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பிள்ளை தொடர்பான பூரண தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும். தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டமானது விசேட தேவையுள்ள பிள்ளைகளின் கல்வி தொடர்பில் விருத்தியடைந்த நாடுகளில் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இருந்தபோதிலும் விருத்தியடைந்துவரும் நாடுகளில் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் விருத்தியடைந்துவரும் நிலையிலேயே காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கையில் விசேட தேவையுள்ள பிள்ளை தொடர்பிலான பங்குதாரர்கள் மத்தியில் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணரவு குறைவாகவே காணப்படுகின்றது. இந்த அடிப்படையில் விசேட தேவையுள்ள பிள்ளைகளின் விருத்தி தொடர்பான பங்குதாரர்கள் மத்தியில் தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் அவசியமானதாகக் காணப்படுகின்றது. அந்தவகையில் பங்குதாரர்களிடையே தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு இக்கட்டுரை பங்களிப்பை வழங்கும் என எதிர்பார்க்கின்றது.

## தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் என்றால் என்ன

தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டமானது விசேட தேவைகள் உள்ள ஒரு பிள்ளையின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கல்விசார்ந்த செயற்பாடுகளை உள்ளடக்கிய எழுத்துருவிலான ஒரு ஆவணமாகும். இது சட்டரீதியாக அங்கீகரிக்கட்டதும், பிள்ளை தொடர்பாக ஆராய்வு செய்வோருக்கு பிள்ளை பற்றிய போதிய விளக்கத்தினைக் கொடுக்கவும், பிள்ளையின் இயலுமை, இயலாமை போன்றவற்றைத் தெளிவுபடுத்தி பிள்ளையின் விருத்தி தொடர்பில் பாதையைக் காட்டும் ஒரு ஆவணமாகும்.

*விரிவுரையாளர்,
*விசேட தேவைகள் சார் கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்*
*Email: kkteth@ou.ac.lk*

கல்விச் செய்பாடுகளில் ஈடுபடும் அனைத்து விசேட தேவையுள்ள பிள்ளைகளுக்கும் அவசியமான ஒரு ஆவணமாகக் காணப்படுகின்றது. அந்தவகையிலேயே, இவ்வாறான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஆவணம் ஒன்றினைத் தயாரிப்பது கல்வியியலாளருக்கும், கல்வி நிருவாகிகளுக்கும், குடும்பத்தினருக்கும், மற்றும் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் விருத்தியில் பங்கெடுக்கும் வாண்மையாளர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. மேலும் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டமானது குறித்த விசேட தேவையுள்ள பிள்ளையின் ஆரம்பக்கட்ட நிலை, தற்போதைய நிலை மற்றும் எதிர்பார்க்கப்படும் நிலை ஆகியனவற்றை ஆதாரங்களுடன் கொண்டிருக்கும் ஒரு சிறப்பான பதிவேடாகக் காணப்படுகின்றது. *''தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பாக வாசிக்கும் அல்லது ஆராயும் அனைவருக்கும் ஒரே விளக்கத்தை வழங்குதல் வேண்டும்''*

## தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்கள்

தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டமானது பிரதானமாக பின்வரும் அடிப்படை நோக்கங்களை மையமாக் கொண்டு உருவாக்கப்படுகின்றது.

- பொருத்தமான கற்றல் இலக்கைக் ஒரு விசேட தேவையுள்ள பிள்ளைக்காக உருவாக்குதல்
- தேவையான வசதிகளையும் சமநிலைவகிக்கக்கூடிய கலைத்திட்டத்தையும் வழங்குதல்
- பிள்ளையின் கல்விக்கான கட்டமைப்பினை வழங்குதல்
- விசேட தேவையுள்ள பிள்ளைகள் தங்களது விருத்திக்காகப் பெறவேண்டிய தொடர்ச்சியான சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல்
- பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பான ஆவணங்கள் பேணப்படுவதை உறுதிப்படுத்தல்
- பிள்ளையின் முன்னேற்றம் பற்றி அறிவை ஏற்படுத்தல்

போன்ற அடிப்படை நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் தனியாள் கல்வி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## வழங்கப்பட வேண்டிய சேவைகள்

விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொடுக்கப்பட்ட வேண்டிய சேவைகள்.

- போக்குவரத்து சேவை
- இயன்மருத்துவ சேவை
- பேச்சு மருத்துவர்
- மொழிமாற்றும் சேவை
- தொழில்சார் சேவை

- உளவியல்சார் சேவை
- சமூக செயற்பாடுகள் சேவைகள்
- பாடசாலை தாதியர் சேவை
- ஆலோசனை சேவைகள்
- புணர்நிர்மாண சேவை

இவ்வாறான சேவைகள் விசேட தேவையுள்ள பிள்ளையின் குறிப்பிட்ட விசேட தேவைக்கேற்ப வழங்கப்படுதல் வேண்டும் (Lipkin & Okamoto, 2015).

## தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல்

தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்குதல் ஒரு குழுவின் பொறுப்பாகும். இக்குழுவில் பாடசாலையின் முக்கிய உறுப்பினர்களான அதிபர், பிள்ளையின் வகுப்பாசிரியர், பாட ஆசிரியர்கள், உளவள ஆலோசகர், உள்ளடங்கல் இணைப்பாளர் ஆகியோருடன் விசேட பிள்ளை தொடர்பான வாண்மையாளர்கள் மற்றும் விசேட தேவையுள்ள பிள்ளையின் பெற்றோர்கள் ஆகியோர் பிரதானமாணவர்களாகக் காணப்படுவார்கள். இக்குழுவில் விசேட தேவையுள்ள பிள்ளையும் பங்குபற்ற முடியுமானால் அவரும் பங்குபற்றல் வேண்டும் குறித்த குழு உறுப்பினர்கள் சந்திப்புக்களை மேற்கொண்டு பிள்ளையின் மருத்துவ மதிப்பீடுகள் தொடர்பான தகவல்களைக் கொண்டு மீளாய்வுகளை மேற்கொண்டு பிள்ளையின் விசேட கல்வித் தேவைகளுக்கமைவாகவும் பிள்ளையின் இயலுமை மற்றும் இயலாமைகளைக் கருத்திற் கொண்டும் தனியாள் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தினை தயாரிப்பார்கள் (Dabkowski, 2004).

## தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும் கந்தர்பங்கள்

தேசிய நியமத்திற்கு அமைவாகவோ அல்லது சர்வதேச நியமத்திற்கமைவாகவோ பட்டியற்படுத்தப்பட்ட இயலாமையுடையோர் பட்டியலில் உள்ள ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட இயலாமை அல்லது இயலாமைகளைக் கொண்டுள்ள பிள்ளையின் நடத்தையில் இனங்காணப்பட்டதிலிருந்து சரியாக 30 தினங்களுக்குள் முதலாவது தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கான குழுக் கூட்டத்தினைக் கட்டாயமாக நடத்துதல் வேண்டும். உதாரணமாக, அமெரிக்காவின் IDEA ஆவணத்தில் 13 வகையான இயலாமைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது அவற்றில் ஒன்றை அல்லது பலவற்றைக் கொண்டிருந்தால் அப்பிள்ளை தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கும் விசேட சேவைகளைப் பெறுவதற்கும் தகுதியுடையவர் ஆவர். பிள்ளையின் தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் குறைந்தது வருடத்திற்கு ஒரு முறையாவது மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். இவ் மீளாய்வானது பிள்ளை தொடர்பாக தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்த்தில் குறிப்பிட்ட வருடாந்த இலக்கு அடையப்பட்டுள்ளதா என்பதை மீளாய்வு செய்வதாக அமையும். மீளாய்வு முடிவுக்கு அமைவாக பிள்ளையின் எதிர்வரும் ஆண்டுக்கான தனியாள்மைய நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்படும் (JoDell, 2019).

ஒரு தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டியவை

ஒவ்வொரு விசேட தேவையுள்ள பிள்ளையிது தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களும் நிச்சயமாக குறிப்பான சில அம்சங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இது குறித்த நாட்டின் கல்வி மற்றும் கல்வி தொடர்பான சேவைகளைப் பொறுத்தமைந்திருக்கும். இவ்வுள்ளடக்கங்கள் நாட்டின் விசேட தேவைகள் உள்ள பிள்ளைகள் தொடர்பான சட்ட ஏற்பாடுகளைப் பொறுத்து வேறுபடலாம். பொதுவாக சர்வதேச ரீதியில் பின்வரும் அம்சங்கள் ஒரு தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

- **பிள்ளையின் தற்போதைய கல்விசார் அடைவு மட்டம் மற்றும் செயற்பாட்டு ரீதியான ஆற்றல்கள்**

  இதில் பிள்ளையின் தற்போதைய கல்விச் செயற்பாடுகள் பாடசாலையிலும் வகுப்பறையிலும் எவ்வாறுள்ளது? பிள்ளையின் இயலாமைகள் பிள்ளையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் எவ்வாறான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன? போன்ற விடயங்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கும்.

- **பிள்ளையின் வருடாந்தம் அடையவேண்டிய கல்வி இலக்கு**

  பிள்ளையின் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டக் குழு பிள்ளையின் இயலுமை இயலாமைகளுக்கமைவாக குறித்த நடப்பாண்டின் முடிவில் பிள்ளையால் அடையப்படக்கூடிய அடைவுகளைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். இது யதார்த்தமானதாகவும் நியாயப்படுத்தப்படும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.

- **பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பில் அறிதல்**

  தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் பிள்ளையின் வருடாந்த கல்வி இலக்கினை அடையும் வகையில் எவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பதை அறியும் வகையில் மதிப்பீட்டுப் பகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் கிடைக்கப்பெறும் மதிப்பீடுகள் எவ்வாறு பெற்றோருக்கு அறிவிக்கப்படல் வேண்டும் என்பது பற்றியும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். இப்பகுதியானது குறித்த பிள்ளையின் பெற்றோருக்கு பிள்ளை தொடர்பான மதிப்பீடுகள் எவ்வாறு இடம்பெறப் போகின்றது என்பது தொடர்பான விழிப்புணர்வைக் கொடுக்கும். இந்நிலையானது விசேட தேவையுள்ள பிள்ளையின் பெற்றோரும் பிள்ளையின் கல்வியில் பங்குதாரராக மாற வழிவகுக்கும்.

- **சாதாரண மாணவர்களுடன் பங்குபற்றல்**

  தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டமானது குறித்த விசேட தேவையுள்ள பிள்ளை அன்றாடச் செயற்பாடுகளில் சாதாரண பிள்ளைகளுடன் பங்குபற்ற முடியாத சாதாரண வகுப்பறைச் செயற்பாடுகள் மற்றும் ஏனைய பாடசாலைச் செயற்பாடுகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- **தேசிய, மாகாண, வலய மட்டப் பரீட்சைகளில் பங்குபற்றல்**
  இலங்கையில் பலவகையான தேசிய மட்ட, மாகாண மட்ட மற்றும் வலயமட்ட பரீட்சைகள் இடம்பெறுகின்றன இவற்றில் குறித் விசேட தேவையுள்ள பிள்ளை பங்குபற்ற முடியுமா அல்லது பங்குபற்ற முடியாதா என்பதைப்பற்றிய விளக்கம் அல்லது பரீட்சை முறைகள் எந்தளவு மாற்றியமைக்கப்பட வேண்டும் போன்ற விளக்கங்கள் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- **பிள்ளைக்கு வழங்கப்படவேண்டிய விசேட கல்வி மற்றும் சேவைகள்**
  குறித்த பிள்ளைக்கு எவ்வாறான விசேட கல்வி வழங்கப்படல் வேண்டும் இது விசேட பாடசாலையிலா, விசேட கல்விப் பிரிவிலா அல்லது உள்ளடங்கல் வகுப்பறையிலா போன்ற அம்சங்கள் இதில் அடங்கும். அவ்வாறே பிள்ளைக்கு வழங்கப்படவேண்டிய உதவிகள் மற்றும் சேவைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக நகர்வுக்கான சாதானங்கள், தொடர்பாடல் சாதனங்கள், சேவைகளைப் பெறுவதற்கான நிதி உதவிகள் போன்றன பற்றிக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

- **சேவைகள் வழங்கப்பட வேண்டிய காலப்பகுதி**
  தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டமானது ஆரம்பிக்கும் காலம் மற்றும் முடிவுறும் காலம் போன்றவற்றை உள்ளடக்கியிருக்கும் ஒரு செயற்திட்டமாகும். மேலும் குறித்த பிள்ளைக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகள் எப்போது வழங்கப்படல் வேண்டும் என்பது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இது அனைவரும் தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தைப் பற்றி விளங்கிக்கொள்ள உதவியாக அமைகின்றது.

- **விசேட தேவையுள்ள மாணவனுக்கான உள்ளடங்கல் வகுப்பறை ஏற்பாடுகள்**
  இது குறித்த விசேட தேவையுள்ள பிள்ளை நிராகரிக்கப்படாத, மற்றும் பொருத்தமான வகுப்பறை ஒன்றில் கல்வி கற்கின்றார் என்பதை உறுதிப்படுத்துவதாக அமையும். அதனைத் தயார்செய்யும் போது தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டக் குழுவினர் எவ்வாறு குறித்த விசேட தேவையுள்ள பிள்ளை சாதாரண வகுப்பில் சாதாரண மாணவர்களுடன் கல்வி பயிலும் என்பதைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் எத்தனை மாணவர்களைக் கொண்ட வகுப்பறைக்குப் பொருத்தமாகக் காணப்படும் என்பதையும் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அதேநேரம் இதற்கான காரணத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

- **மாணவனுக்கான மதிப்பீட்டுச் செயற்பாடுகளில் தழுவல் நிலை**
  தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டம் குறித்த விசேட தேவையுள்ள பிள்ளையின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின்போது எவ்வாறான மதிப்பீட்டு முறைகளைப் பின்பற்றல் வேண்டும் என்பது தொடர்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இதன்போது குறித்த மதிப்பீட்டு முறையின் தழுவலுக்கான நியாயத்தையும் தெளிவாகக்

குறிப்பிட்டிருத்தல் வேண்டும். தனியாள்மையக் கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் இது கட்டாயமானதாகும்.

- **விசேட தேவையுள்ள பிள்ளையின் நிலைமாற்றத்திற்கான முன்மொழிவு**

  குறித்த விசேட தேவையுள்ள பிள்ளை 16 வயதினை அடைவதற்கு முன்னர் பிள்ளையின் இரண்டாம் கட்ட இலக்கை உருவாக்குதல் வேண்டும். இவ்விலக்கை அடையும் வகையில் வழங்கப்பட வேண்டிய சேவைகளைப்பற்றி இம்முன்மொழிவில் குறிப்பிடிருத்தல் வேண்டும்.

  நிலைமாற்று இலக்கும் சேவைகளும் பிள்ளையின் பாடசாலைக் கல்வியில் இருந்து வேலை உலகிற்கு நிலைமாற்றுவதற்கான கல்வி மற்றும் சேவைகளை மையப்படுத்தியதாக அமைதல் வேண்டும். இதற்காக தொழில்சார் நிகழ்ச்சித்திட்டம் அல்லது பிள்ளை வாழ்க்கைக்குத் தேவையான தனது வேலையைகளைத் தானே செய்வதற்கான திறன்களின் விருத்தி என்பன பற்றி நிகழ்ச்சித்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும் (Prunty, 2011). உதாரணம்: தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினைத் தயார் செய்யும் போது ஒரு விசேட தேவையுள்ள மாணவனையும் அவனது இயலுமை, இயலாமையை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்தவகையில், பின்வரும் விடய ஆய்வினை அடிப்படையாகக் கொண்டு தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை எவ்வாறு தயாரிக்கலாம் என நோக்குவோம்.

## விடய ஆய்வு:

குமார் திருகோணலை மாவட்டத்தின் மூதூர் பிரதேசத்திலுள்ள தி/மூ/பட்டித்திடல் மகாவித்தியாலயத்தில் தரம் மூன்றில் கல்விபயிலும் எட்டு வயது நிரம்பிய மாணவனாவான். குமார் அனைத்து விதமான கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் காதாரண மாணவர்களுடன் சாதாரண வகுப்பறையில் மகிழ்ச்சியாகக் கல்விபயில்கின்றான். குமாரின் செயற்பாடுகளை அவதானித்தன் பின்னர் குமாரின் முதல் மற்றும் தற்போதைய வகுப்புக்களின் வகுப்பாசிரியர்களை சந்தித்து உரையாடினேன். அவதானிப்பு மற்றும் உரையாடல் மூலம் பெற்றுக்கொண்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு குமாரை இவ்விடய ஆய்வுக்காகத் தெரிவுசெய்துகொண்டேன். குமார் தனது வகுப்பு மற்றும் வீட்டு வேலைகளைச் செய்துவருவதில்லை என தற்போதைய வகுப்பாசிரியை சாந்தி குறிப்பிட்டார். குமார் தனது வகுப்பறையில் வழங்கப்படும் வேலைகளைச் செய்து முடிப்பது சற்றுத் தாமதமாகவே காணப்பட்டது. மேலும் ஆசிரியை சாந்தி குறிப்பிடும் போது வகுப்பில் இடம்பெறும் பாடவிடயங்கள் தொடர்பில் வாய்வழி வினாக்களை வினவும் போதில் குமாரின் ஆற்றல் மிக்க செயற்பாடு வெளிப்படுகின்றது. அத்துடன் அன்றாடம் இடம்பெறும் பாடவிடயங்களை அவன் புரிந்துகொள்கின்றான். குமார் பாடநூல்களைப் பார்த்து கற்றுக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது. ஆனால் எழுத்துச் செயற்பாடுகளில் குமார் பின்னிலையிலேயே காணப்படுகின்றான். குமாரின் கையெழுத்து சிக்கல்கள் நிறைந்தனவாகக்

காணப்படுகின்றது, அவர் எழுத்துக்களை ஒழுங்குமுறை தவறியும் சில எழுத்துக்களை எழுதாமலும் விட்டுவிடுகின்றான். எழுதும் பொழுதில் தடுமாற்றத்துடன் எழுதும் நிலை அவதானிக்கப்பட்டது. எழுத்து வேகம் சாதாரண மாணவர்களுடன் ஒப்பிடுகையில் மிகக்குறைவாகவே காணப்படுகின்றது. குமார் ஐந்து வரை எண்ணுகின்றான். வட்டத்தையும் சதுரத்தையும் இனங்காணுகின்றான். சிவப்பு, நீரம், பச்சை ஆகிய நிறங்களை இனங்காணுகின்றான். இறுதியாக இடம்பெற்ற மூன்று தவணைப்பரீட்சைப் பெறுபேறுகளை அவதானித்த போது வாசிப்பு, மொழித்திறனில் சராசரிக்குக் குறைவாகவே இருந்தன. கணிதம் தொடர்பான அடைவ மிகக்குறைவான நிலையிலேயே காணப்பட்டது. குமாரின் இயலாமைகள் அவரின் கல்வியில் கணிதம் மற்றும் மொழி தொடர்பான விடயங்களில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன. இவ்விடய ஆய்வின் அடிப்படையில் குறித்த குமார் என்னும் விசேட தேவையுள்ள மாணவனுக்கான தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கலாம் என நோக்குவோம்.

**தனியாள்மையக் கல்வித்திட்டம் (நிகழ்ச்சித்திட்டம்)**

| | |
|---|---|
| **மாணவர் பெயர்:** | குமார் |
| தனியாள்மையக் கல்வித்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டம் உருவாக்க அல்லது மீளாய்வு செய்வதற்கான குழுக் கூட்டத்திற்கான திகதி: | 01.01.2020 |
| பாடம்: | கணிதம் |
| மாணவனின் தற்போதைய கல்விசார் செயற்பாட்டு இயலுமை மட்டம்: | குமார் தான் கொண்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படும் தரத்திற்குக் குறைவாகவே செயலாற்றுகின்றார் |
| மூலம்: | பாடசாலை மட்ட அடைவுச் சோதனை முடிவுகள் |
| பலம்: | ஒரு வட்டம் மற்றும் ஒரு சதுரத்தை இனங்காணல்<br>ஐந்து வரையான இலக்கங்களை எண்ணுதல்<br>பச்சை, சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களை இனங்காணல்<br>வாய் மூலமான தொடர்பாடலை கிரகித்துத் துலங்குதல் |
| தேவைகள்: | 0 - 10 வரையிலான இலக்கங்களை இனங்காணல் வேண்டும்<br>10 வரை எண்ணும் போது ஒவ்வொன்றுக்கும் பொருட்களுடனான இணைப்பாக்கம்<br>10 வரையிலான பொருட்களை ஒழுங்கமைத்தல்<br>10இல் இருந்து பின்னோக்கி எண்ணுதல் |
| அளவிடக்கூடிய வருடாந்தத்திட்டம் (குறுங்காலத் திட்டம் உள்ளடக்கப்பட்டுள்ளது)<br>வருடாந்த இலக்கு: | குமார் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு எண்களை 80% சரியாக எண்ணுவார் இதனை வகுப்பறை மதிப்பீட்டின் மூலம் மதிப்பிட முடியும் |
| குறுங்கால இலக்கு: | வழங்கப்பட்டுள்ள நுட்பங்கள், பொருட்கள் மற்றும் நேரடி கற்பித்தல்களின் மூலம் குமார் எவ்வாறு எண்ணுவது என்பதை அறிந்து 10 வரையான பொருட்களை எவ்வாறு எண்ணுவது என்பதை |

| | |
|---|---|
| | 80% சரியாகத் தீர்மானித்துக்கொள்வார்<br><br>வழங்கப்பட்டுள்ள நுட்பங்கள், பொருட்கள் மற்றும் நேரடி கற்பித்தல்களின் பிரதிபலனாக, குமார் 10 பொருட்களை 80% சரியாக ஒழுங்கமைப்பார் |
| மதிப்பீடு: | முறைசாராத வகையில் குமாரின் இயலுமை அல்லது செயற்பாடு வகுப்பறையில் வைத்து மதிப்பீடு செய்யப்படும். குமாரின் செலாற்றுகை 80% சரியாகக் காணப்படுதல் வேண்டும் |
| **விசேட கல்வி மற்றும் ஏனைய தொடர்புபட்ட சேவைகள் (தொழில்சார் சிகிச்சை)** | |
| தொடக்கத் திகதி | 05.01.2020 |
| இடம் | வைத்தியசாலை |
| செயற்படும் தடவைகள் (வாரத்துக்கு) | வாரத்துக்கு இரு தடவைகள் |
| காலம் | 6 மாதங்கள் |
| **துணையான சாதனங்களும் சேவைகளும்:** | |
| தொடக்கத் திகதி | 05.01.2020 |
| இடம் | வீடு, பாடசாலை |
| செயற்படும் தடவைகள் (வாரத்துக்கு) | 7 நாட்களும் |
| காலம் | 6 மாதங்கள் |
| **பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியர் பிள்ளைக்கு உதவும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தை மாற்றி வடிவமைத்தல்** | |
| தொடக்கத் திகதி | 05.01.2020 |
| இடம் | பாடசாலையில் உள்ள வள நிலையம் |
| செயற்படும் தடவைகள் (வாரத்துக்கு) | 3 தடவைகள் |
| காலம் | 6 மாதங்கள் |
| மாணவர் எவ்வாறு மதிப்பிடப்படுவார் | செயற்பாட்டு அவதானத்தின் மூலம் |
| பிள்ளையின் வருடாந்த இலக்கை நோக்கிய முன்னேற்றம் எவ்வாறு மதிப்பிடப்படும்: | மாதாந்தம் |
| பிள்ளையின் பெற்றோருக்கு பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கைகள் எவ்வாறு வழங்கப்படும்: | மாதாந்த அறிக்கை எழுத்து வடிவில் பிள்ளையின் பெற்றோருக்கு வழங்கப்படும் |
| சேவைகளின் தேவைகள் தொடர்பான மாற்றங்கள் பற்றிய அறிக்கை: | பிள்ளையின் முன்னேற்றம் தொடர்பான குழுக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு தயாரிக்கப்படும் |

மேலே குறிப்பிடப்பட்ட விடய ஆய்வின் அடிப்படையில், பிள்ளையின் விசேட நிலைமைகள் அவரின் கணிதம்சார் அடைவுகளில் வெகுவாகப் பாதிப்பை ஏற்படுத்துகின்றமை கண்டறியப்பட்டது. அதன் அடிப்படையில் குறித்த விசேட தேவையுள்ள பிள்ளையின் கணிதம்சார் திறனை விருத்திசெய்வதனை நோக்காகக் கொண்டு ஆறு மாதகாலத்துக்கான தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கட்பட்டுள்ளது. குறித்த கல்வி நிகழ்ச்சித்திட்டத்தில் மணவரின் சுய விபரம், நோக்கங்கள், காலம், பிள்ளையின் ஆற்றல் மற்றும் இயலாமைகள், வாண்மையாளர்களின் வகிபாகங்கள், பிள்ளைக்கு

வழங்கப்படவேண்டிய சேவைகள், அவற்றிற்கான காலப்பகுதிகள், பெற்றோருடனான தொடர்பாடல், மீள் திட்டமிடல் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளடக்கங்கள் பிள்ளையின் விசேட தேவையின் நிலைமைக்கமைய மாற்றம் பெறும் என்பது கருத்திற்கொள்ளப்படல் வேண்டும்.

**முடிவுரை:**

தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் விசேட தேவையுள்ள பிள்ளையின் விருத்தியில் இன்றியமையாத ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அந்தவகையில், இக்கட்டுரையானது தனியாள்மைய கல்வித்திட்டம் என்றால் என்ன, பொறுப்பேற்று உருவாக்க வேண்டியவர்கள், தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கம் மற்றும் அதில் உள்ளடங்க வேண்டிய அம்சங்கள் போன்றன தொடர்பில் போதிய விளக்கத்தைக் தாங்கியுள்ளது. அத்துடன் உதாரணத்தின் மூலம் தனியாள்மைய கல்வி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான தெளிவான விளக்கம் ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இக்கட்டுரையானது, இலங்கையின் விசேட தேவைகள்சார் வாண்மையாளர்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

**உசாத்துணை:**


Dabkowski, D. M. (2004). Encouraging Active Parent Participation in IEP Team Meetings.*TEACHING Exceptional Children, 36*(3), 34–39.https://doi.org/10.1177/004005990403600304

JoDell, H. (2019). Understanding and Developing High-Quality IEPs | n2y. Retrieved from https://www.n2y.com/white-papers-and- ebooks/individualized-education-program-iep/

Lipkin, P. H., & Okamoto, J. (2015). The Individuals with Disabilities Education Act (IDEA) for children with special educational needs. *Pediatrics*, *136*(6), e1650-e1662. DOI: 10.1542/peds.2015-3409

Prunty, A. (2011). Implementation of children's rights: what is in ‘the best interests of the child’ in relation to the Individual Education Plan (IEP) process for pupils with autistic spectrum disorders (ASD)?. *Irish Educational Studies*, *30*(1), 23-44. Doi.10.1080/03323315.2011.535974

# உட்படுத்துகைக் கல்வியும் ஆசிரியர் வகிபாகமும்

திரு. ர. விவேகானந்தராசா*

## அறிமுகம்

ஓர் நாட்டின் உண்மையான அபிவிருத்தி அந்நாட்டில் வாழும் பிரஜைகள் பெறும் கல்வியே என்ற நெல்சன் மண்டேலாவின் கூற்று அனைவருக்கும் கல்வி வழங்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. இவ்வாறு அனைவருக்கும் கல்வி தொடர்பில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றமையானது விசேடதேவைகளுடைய மாணவர்களுக்கான கல்விச்செயற்பாடுகள் தொடர்பில் அதிகம் முக்கியத்தவம் செலுத்துவதனை எமக்கு புலப்படுத்துகின்றது. தாய்லாந்தின் ஜொமைற்றா நகரில் 1990 மார்ச் 5ஆம் திகதி ஆரம்பமாகி 9 ஆம் திகதிவரை நடைபெற்ற சர்வதேச கல்விமாநாட்டின் பிரதான கருப்பொருளாக அனைவருக்கும் கல்வி என்ற சிந்தனை காணப்பட்டதோடு அங்கு விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான கல்வி தொடர்பில் முக்கியத்துவம் வழங்கப்பட்டது. ஆகவே இன்று விசேட தேவைகளுடைய மாணவர்கள் தொடர்பாக அதிகம் கவனஞ் செலுத்துவதோடு பல்வேறுபட்ட கல்விசார் முன்னெடுப்புக்கள் தொடர்பிலும் கருத்துக்கள் கூறப்படுகின்றன. அதனுள் ஓர் அங்கமாக விளங்குவது உட்படுத்துகைக் கல்வி செயன்முறையாகும். சாதாரண மாணவர்களுடன் விசேட தேவைகளுடைய மாணவர்களை இணைத்து கல்விச் செற்பாடுகளை மேற்கொள்வதனை நாம் உட்படுத்துகைக் கல்வி என வரைவிலக்கணப்படுத்த முடியும். ஆகவே உட்படுத்துகைக் கல்வி செயற்பாடானது சிறப்பாக இடம்பெறுவதற்கு ஆசிரியர்களின் வகிபாகம் முக்கியம் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது.

## விசேட தேவைகளுடைய மாணவர்கள் எனப்படுவோர் யார்?

உட்படுத்துகை கல்வி தொடர்பில் விளங்கிக்கொள்வதற்கு முன்பதாக உட்படுத்துகை கல்வி செயன்முறையில் இடம்பெறும் விசேட தேவைகளுடைய மாணவர்கள் தொடர்பில் முதலில் விளங்கிக்கொள்ளல் அவசியமாகும். ‘‘விசேட தேவைகளுடைய மாணவர்கள் எனும் போது சாதாரண நிலையில் எதிர்பார்க்கப்பட்ட உடலில், உளவியல், உணர்வுசார் அத்துடன் சமூக நடத்தைகளில் வேறுபட்டவர்களாவர்.

*விரிவுரையாளர்,
இரண்டாம் மூன்றாம்நிலை கல்வித்துறை, கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
Email: rvive@ou.ac.lk

இவர்கள் சாதாரணமாக கற்கின்ற மாணவர்களை விடவும் விசேடமான பல கருமங்களை ஆற்றியவாறு கல்வியை வழங்க வேண்டிய மாணவர்களாவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றார்கள். சாதாரண நிலையில் எதிர்பார்க்கப்பட்ட உடலில், உளவியல், உணர்வுசார் அத்துடன் சமூக நடத்தைகளில் வேறுபட்டவர்களாக விசேட தேவைகளுடைய மாணவர்கள் காணப்படுகின்றார்கள். அத்துடன் அவர்களது திறனை அதிகரிக்க கல்விசார் சேவைகள் அவசியம்" (The Committee for the national society for the study of education 2003) "விசேட தேவைகளுடைய மாணவர்கள் அல்லது சிறுவர்கள் எனப்படுபவர்கள் விசேட கல்வியினை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்கள் அல்லது சிறுவர்களாவர். இவர்களுக்கு இத்தகைய நிலை அவர்களிடத்து காணப்படும் பல்வேறுபட்ட குறைபாடுகள் காரணமாக ஏற்படுகின்றது" (OREGON Department of education) என பல்வேறுபட்ட கருத்துக்கள் விசேட தேவைகளுடைய மாணவர்கள் தொடர்பில் கூறப்படுகின்றன. விசேட தேவைகளுடைய மாணவர்களது வகைப்பாடானது பல்வேறுபட்ட வகையில் சமூகத்தில் இனங்காணப்படுகின்றது. அவற்றுள் பின்வரும் வகைப்பாடானது மிகமுக்கியமானதும் விசேடதேவைகளுடையோர் அனைவரையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

1. தற்சிந்தனையுடையோர்.
2. பார்வை, கேட்டல் குறைபாடுகளுடையோர்.
3. பல்தரக் குறைபாடுகளுடையோர்.
4. எலும்பியல் குறைபாடுகளுடையோர்.
5. பார்வைக் குறைபாடுடையோர்.
6. விருத்திசார் தாமதம்.
7. உணர்வுசார் தொந்தரவினையுடையோர்.
8. கேட்டல் குறைபாடுடையோர்.
9. விசேட கற்றல் குறைபாடுடையோர்.
10. பார்வைக் குறைபாடுடையோர்.
11. சுகாதாரக் குறைபாட்டினையுடையோர்.
12. பேச்சு மற்றும் மொழிசார் குறைபாட்டினையுடையோர்.
13. அறிவுத்திறன்சார் குறைபாடுகளுடையோர்.
14. மூளையில் ஏற்படும் பாதிப்பு. (National Dissemination center for children with disabiliteies 2000)

## உட்படுத்துகைக் கல்வி எண்ணக்கரு

உட்படுத்துகை கல்வியானது விசேட தேவைகளுடைய மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்தும்பொருட்டு உருவாக்கப்பட்ட கல்விச்செயற்பாடாகும். ஐக்கிய நாடுகளின் கல்வி, விஞ்ஞான அத்துடன் கலாச்சார நிறுவனமானது (UNESCO) உட்படுத்துகை கல்வி தொடர்பில் "மாறுபட்ட தேவைகளைக்கொண்ட கற்றலில் ஈடுபடுவோரின் கற்றல், கலாச்சாரம் அத்துடன் சமூகம் என்பவற்றில் ஈடுபாட்டினை அதிகரித்தல், கல்விசார் செயற்பாடுகளிலிருந்து விலகுவதனை தவிர்ப்பதுமான

கல்விச்செயன்முறை'' எனக் குறிப்பிடுகின்றது. உட்படுத்துகைக் கல்வியானது உள்ளடக்கல் ( Inclusion) எனவும் அழைக்கப்படுகின்றது. அதாவது சாதாரண அத்துடன் இயலாமையுடையோரை (விசேட கல்விசார் தேவையுடையோர்) பாடசாலை, பல்கலைக்கழகம் அத்துடன் கல்லூரிகளில் ஒன்றாக கற்பதற்கான செயன்முறையாகும். (The alliance for inclusive education 2019) பொற்ஸ் (Potts 1997) என்பவரது கருத்தின்படி "பிரதான சமூகக்கட்டமைப்பிலிருந்து விலகிச்செல்லலை தவிர்ப்பதும் பங்குபற்றலை அதிகரிப்பதுமான செயன்முறை'' என குறிப்பிடுகின்றார்.

இவ்வாறாக உட்படுத்துகை கல்வி தொடர்பில் பல கருத்துக்கள் முன்வைக்கப்படகின்றபோதிலும் உலகலாவியரீதியில் விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான கல்விசார் முன்னெடுப்பு என்ற அடிப்படையில் முக்கியத்துவம்பெறும் உட்படுத்துகை கல்வி எண்ணக்கரு நீண்டதொரு வரலாற்றைக்கொண்டதாகவே காணப்படுகின்றது. குறிப்பாக விசேட தேவைகளுடைய மாணவர்கள் தொடர்பில் இடம்பெறும் பல்வேறு மாநாடுகளில் 1994 இல் சலமன்கா உலக மாநாட்டில் (Salamanca World Conference 1994) பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இவ் மாநாடு 92 உலக அரசாங்கங்கள், 25 சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் இடம்பெற்றதாகும். இவ் மாநாட்டு அறிக்கையானது "விசேட தேவைகளுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களுடன் இணைந்து கல்வியை பெறுவதற்கு ஏற்புடையவர்கள் எனவும் உட்படுத்துகை கட்டமைப்புக்கு உட்பட்ட சாதாரண பாடசாலைகளானது பாகுபாட்டு பனப்பாங்கை தடுப்பதற்கும், உட்படுத்துகை சமூகத்தை கட்டியெழுப்புவதற்குமான விளைதிறன்மிக்க வழிமுறை எனக்குறிப்பிடுகின்றது'' (UNESDOC Digital Library 1994).

இலங்கை கல்விவரலாற்றில் 1969 இல் விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கென புதியதொரு அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டு அதற்கு பிற்பட்ட காலத்தில் விருத்திசெய்யப்பட்டது. 1980 இல் ஒருங்கிணைந்த கல்வி நிகழ்ச்சித்திட்டம் 1000 க்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டன (Piyasena. 2005). இன்று அனைத்து கல்வி வலயங்களிலும் பாடசாலைகளில் விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கென விசேட கல்விப்பிரிவுகள் அரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படத்தப்படுகின்றன. உட்படுத்துகை கல்வி தொடர்பான ஆசிரியர்களுக்கான பயிற்சி, கலைத்திட்ட மறுசீரமைப்பு, கற்பித்தல் நுட்பங்கள் தொடர்பில் பல்வேறு பயிற்சி நெறிகளை இலங்கை திறந்த பல்கலைக்கழகம், மகரகம ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம் என்பன மேற்கொண்டு வருகின்றன. குறிப்பாக இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது கல்விப்பீடத்தில் விசேட தேவைகள்சார் கல்விப்பிரிவினை ஆரம்பித்து அறிவுசார் விருத்தி, பயிற்சி என்ற அடிப்படையில் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்களை ஆசிரியர்கள் அத்துடன் பராமரிப்பாளர்களுக்கு வழங்கிவருகின்றது.

## உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் பண்புகள்

1. விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கு சமத்துவமான வாய்ப்புகளை வழங்குவதாகவும் அத்துடன் சமூகத்தில் உள்ள மற்றையவர்களைப் போல சுதந்திரமான வாழ்க்கைக்கு தாயார்படுத்துவதாகவும் உள்ளது.
2. சாதாரண மாணவர்கள் அத்துடன் விசேட தேவைகளுடைய மாணவர்கள் ஆகிய இருவருக்குமிடையில் ஆரோக்கியமான சமூக உறவினை ஏற்படுத்துவதாகவும் அத்துடன் உடல் வேறுபாடுகளை சமத்துவமான சமூகச் செயற்பாடுகளினுடாக அடைவதாகவும் உள்ளது.
3. விசேட தேவைகளுடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களைப் போன்று வளரக்கூடிய வகையிலும் விருத்தியடையக்கூடிய வகையிலும் பயன் மிக்க சூழலை வழங்குவதாக காணப்படுகிறது.
4. அடிப்படைக் கல்வி இலக்குகளை அடையும் பொருட்டு விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கு சமத்துவமான கல்வி அத்துடன் அபிவிருத்தி வாய்ப்புக்கள் என்பனவற்றை வழங்கும் செயற்பாடாக உள்ளது.
5. விசேட தேவைகளுடைடைய மாணவர்கள் சாதாரண மாணவர்களைப் போன்று சமத்துவமாக கருதப்படுவதற்கான ஓர் ஏற்பாடாக உள்ளது.
6. விசேட தேவைகளுடைய மாணவர்களை தனிப்பட்ட ஒருவராக மதித்து சொந்த உரிமைகளை வழங்குவதாக உள்ளது.
7. சாதாரண வகுப்பு ஆசிரியர்கள், விசேட ஆசிரியர்கள், பெற்றோர்கள் அத்துடன் சமூக உறுப்பினர்களுடன் இணைந்த ஓர் கூட்டு முயற்சியாக உள்ளது.
8. விசேட தேவைகளுடைய மாணவர்களுக்கான ஓர் பொருளாதார செயற்பாடாகவும் அத்துடன் விசேட வகுப்பறைகளில் ஈடுபடும் போது ஏற்படும் பிரச்சினையை தீர்ப்பதாகவும் உள்ளது. (Dash 2000)

இவ்வாறான பண்புகள் உட்படுத்துகைக் கல்வியின் பண்புகளாக காணப்படுகின்றன.

## உட்படுத்துகைக்கல்வி வகுப்பறைச் செயற்பாட்டின் வகைகள்

உட்படுத்துகை வகுப்பறைச் செயற்பாட்டின் வகைகள் தொடர்பில் Chintamanikar (2004) குறிப்பிடுகையில்,

1. முதலாவது வகை சாதாரண மாணவர்களுடன் இணைந்த முழு நேரக் கல்வி நடவடிக்கைகள் அத்துடன் இங்கு ஆசிரிர்கள் மாணவர்களை முழுநேரமும் கற்றலில் ஈடுபடுத்துவதுடன் அவர்களது சந்தேகங்களையும் நிவர்த்தி செய்யும் படிமுறையாகும்.
2. விசேட தேவையினை உடைய மாணவாகள் சாதாரண மாணவர்களுடன் இணைந்த வகுப்பறைச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்கள் ஆனால் சில சந்தர்பங்களில் விசேட வகுப்புக்களின் ஏற்பாடுகாரணமாக அவர்களது வகுப்பறைச் செற்பாடு தடுக்கப்படும் நிலையாகும்.

3. மூன்றாவது வகையாகக் காணப்படுவது விசேட தேவையினை உடைய மாணவர்கள் விசேட வகுப்புகளினைக் கொண்டிருக்கின்றார்கள் அத்துடன் தங்களது வரவினை சாதாரண மாணவர்களுடன் மேற்கொள்ள பணிக்கப்படுகின்றார்கள். அத்துடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளை சாதாரண வகுப்பறையில் மேற்கொள்கின்றார்கள்.
4. நான்காவது வகையாகக் காணப்படுவது தங்கியிருந்து கற்றலை மேற்கொள்ளும் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டதுடன் அங்கு அயற்பாடசாலைகளில் பின்பற்றப்படும் பாடத்திட்டங்களும் பின்பற்றப்படுகின்றன.
5. ஐந்தாவது வகை நேர்மாறான வகுப்பறைச் செயற்பாடுகள் இங்கு அதிகமான சாதாரண மாணவர்கள் விசேட தேவைினை உடைய மாணவர்களுடன் உள்வாங்கப்படுவதுடன் கல்விசார், கல்விசாரா செயற்பாடுகளிலும் ஈடுபடுவதாகும்.
6. வீட்டுக் கட்டுப்பாடுகளுடன் பெற்றோர்களின் அறிவுறுத்தலுக்கு அமைய சாதாரண பாடசாலைகளில் மேற்கொள்ளப்படும் வகுப்பறைச் செயற்பாடு.
7. ஏழாவது வகையாக உள்ளது வைத்தியசாலை மற்றும் மற்றய நிறுவகங்களில் மேற்கொள்ளப்படும் குறுகியகால வகுப்பறைச் செயற்பாடுகளுடன் கூடிய கற்றல் நடவடிக்கைகளாகும்

மேற்கூறப்பட்ட வகைகள் உட்படுத்துகை வகுப்பறைச்செயற்பாட்டின் வகைகளாகக் காணப்படுகின்றன.

## ஆசிரியர் வகிபாகம்

உட்படுத்துகைக்கல்வி செயன்முறையை வெற்றிகரமாக மேற்கொள்வதில் செல்வாக்கு செலுத்தும் பல்வேறு காரணிகளுள் ஆசிரியர்களின் வகிபகமானது முக்கியமானதாகும். இவ் ஆசிரியர் வகிபாகந்தனை பல்வேறுகாரணிகளின் அடிப்படையில் நாம் நோக்கமுடியும் அவற்றுள் முக்கிய காரணிகளாக நாம்நோக்குகையில்,

- கலைத்திட்ட மறுசீரமைப்பு
- தொடர்பாடல்
- வகுப்பறைச்சூழல்
- நடத்தையை முகாமைசெய்தல்
- தொழில்சார்வாண்மை விருத்தி
- இணைந்து வேலைசெய்தல்
- இணைக்கற்பித்தல்

என்பனவாகும்.

## கலைத்திட்ட மறுசீரமைப்பு

உட்படுத்துகை கல்விச்செயற்பாட்டில் வகுப்பறையில் மாணவர்களுடன் கற்றல் கற்பித்தல் செயன்முறையில் இணைந்து செயற்படுபவர் என்ற அடிப்படையில் மாணவர்களின் நிலை,

கல்விசார் தேவை, செயற்பாடுகளின் அவசியம், பாடநுட்பங்கள், கற்பித்தல் நுட்பங்கள் அத்துடன் பொருத்தமான கருவிகளின் பயன்பாடு என்பனவற்றை அறிந்து அதனூடாக கலைத்திட்ட சீர்திருத்தத்தில் முக்கிய பங்குவகிப்பவராக ஆசிரியர் காணப்படுகின்றார். உட்படுத்துகை கல்விச்செயற்பாட்டில் கலைத்திட்ட சீர்திருத்தமானது விசேட தேவைகளுடைய மாணவர்களின் இயல்புகளுக்கு ஏற்றாற்போல் பல்வேறு அம்சங்களுடன் இணைந்ததாக காணப்படுகின்றது அதாவது ஒலிநாடா(Audio-tape text), குறுகிய கட்டமைப்பினைக்கொண்ட ஒப்படைகள், பாடப்புத்தகங்களின் சுருக்க அத்தியாயங்கள் அத்துடன் விசேட கருவிகள் என்பன போன்ற பல அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

## தொடர்பாடல்

ஆசிரியர் வகிபாகந்தனில் அடுத்ததாக முக்கியத்துவம் பெறுவது தொடர்பாடலாகும். ஆசிரியர்கள் மாணவர்களுடன் சிறந்த தொடர்பாடலை மேற்கொள்வதடன் மாத்திரமின்றி அதிபர், பெற்றோர், சக ஆசிரியர்கள் அத்தடன் கல்விசார் அதிகாரிகளுடன் தொடர்பாடலை மேற்கொள்கின்றார்கள். இவ்வாறு ஆசிரியர்கள் பல்வேறுபட்டோருடன் கொண்டுள்ள தொடர்பாடல் வகுப்பறையில் ஒவ்வொரு மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கும் குறிப்பாக விசேட தேவைகளுடைய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதாகவுள்ளது. உதாரணமாக நாம் நோக்ககையில் ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் கொண்டுள்ள தொடர்பாடல் உட்படுத்துகை வகுப்பறைச்செயற்பாட்டில் பெற்றோர்களின் பங்களிப்பை அதிகரிப்பதாக காணப்படுகின்றது. ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்படும் தொடர்பாடலானது இருவழித்தொடர்பாடல் முறையாக அமைந்திருப்பதோடு தொடர்பாடல் நுட்பங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

## வகுப்பறைச்சூழல்

நேர் சமூகமயமாக்கல் (Positive Socialization) என்ற எண்ணக்கரு கல்விச்செயன்முறையினூடாக அடையப்பட வேண்டுமெனில் வகுப்பறைச் சூழலானது சரியான முறையில் அமைந்திருத்தல் வேண்டும். உட்படுத்துகைக்கல்வியில் வகுப்பறையானது மாணவர்களுக்கு ஏற்புடையதாக குறிப்பாக விசேடதேவைகளுடைய மாணவர்களுக்கு ஏற்புடையதாக அமைந்திருப்பதோடு பல்வேறுபட்ட மாற்றுத்திறனுடைய அவர்களுக்கு வகுப்பறைச்சூழல் நடைமுறைச்சூழலுடன் தொடர்புபட்டதாகவும், காட்சியமைப்பு அத்தடன் கருவிகளின் உபயோகம் என்பனவற்றை உள்ளடக்கியதாக காணப்படவதோடு அவற்றை கையாள்வதற்கான சிறப்பு தகைமைகள் ஆசிரியர்களிடத்து காணப்படதல் அவசியம். உட்படுத்துகைக்கல்வியில் நேர்தொடர்பாடலை மேற்கொள்வதற்கும் வகுப்பறைச்சூழலை சிறந்தமுறையில் முகாமைசெய்தல் முக்கியம் பெறுகின்றது.

## நடத்தையை முகாமைசெய்தல்

மாணவர்களின் நடத்தை அத்துடன் செயற்பாடு என்பனவற்றை வகுப்பறையில் சரியான முறையில் முகாமைசெய்தல் உட்படத்துகை கல்விச்செயற்பாட்டில் ஆசிரியர் வகிபாகந்தனை பறைசாற்றும் மற்றுமொரு அம்சமாக காணப்படுகின்றது. சாதாரண மாணவர்களுடன் இணைந்த கல்விச்செயற்பாடுகளில் ஈடுபடும் விசேட தேவைகளுடைய மாணவர்களது செயற்பாடுகள் அத்துடன் நடத்தைகளை சரியான முறையில் முகாமை செய்பவராக ஆசிரியர் காணப்படுதல் வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களது நடத்தைசார் முகாமைத்துவத்தை சிறப்பாக மேற்கொள்வதற்கு பல்வேறுபட்ட நுட்பங்களை கையாள்பவராக காணப்படுவதோடு அதற்கு தேவையான பயிற்சிகள் பல்கலைக்கழகங்கள், கல்விசார் நிறுவகங்களினூடாக இன்று வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

## தொழில்சார்வாண்மை விருத்தி

விசேட தேவைகளுடைய மாணவர்களுடன் இணைந்த அனைத்து செயற்பாடுகளையும் உட்படுத்துகை கல்வி செயன்முறையில் சரியாக மேற்கொள்ள வேண்டுமெனில் அதற்கு ஏற்றாற்போல் தொழில்சார் வாண்மைவிருத்தியினை ஆசிரியர்கள் மேற்கொள்வது அவசியமாகின்றது. கலைத்திட்ட சீர்திருத்தம், கற்பித்தல் நுட்பங்கள், இணைக்கற்பித்தல் நுடபங்கள், நடத்தை முகாமைத்தவம் அத்தடன் கற்றல் கற்பித்தல் சாதனங்களின் பயன்பாடு என அனைத்து அம்சங்களிலும் ஆசிரியர்கள் சிறந்த பயிற்சியினூடான அறிவை பெற்றிருத்தல் அவசியமாகும். இத்தகைய பயிற்சியை வழங்கும் நோக்கில் பல்கலைக்கழகங்கள் அத்துடன் கல்விசார் நிறுவகங்கள் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படத்துகின்றன. குறிப்பாக இலங்கையில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்கள் இணைந்து இலங்கை திறந்த பல்கலைக்கழகம், மகரகம ஆசிரியர் பயிற்சி கல்லூரி, தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றினூடாக பல்வேறு பயிற்சிநெறிகளை கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களினூடாக வழங்கிவருகினறன.

## இணைந்து வேலைசெய்தல்

இணைந்து வேலைசெய்தல் செயன்முறையானது பொதுவான இலக்கினை அடைந்துகொள்ளும் பொருட்டு அறிவு, ஆற்றல் ஆத்துடன் அனுபவம் என்பவற்றின் இணைப்பாகும். இவ் நுட்பமானது கல்விச்செயன்முறையில் அனைவரிடத்திலும் காணப்பட வேண்டுமென்றாலும் குறிப்பாக ஆசிரியர்களின் வகிபாகம் இதில் அவசியம். உட்படுத்துகைக கல்வி செயற்பாடில் ஆசிரியர்களின் இணைந்து வேலைசெய்தல் நுட்பமானது சாதாரண மாணவர்கள், விசேட தேவைகளுடைய மாணவர்கள், சக ஆசிரியரிகள், அதிபர் அத்துடன் பெற்றோர் என அனைவருடனும் இணைந்து செயற்படும் போதே உட்படத்துகைக் கல்வி செயற்பாடு சிறப்பாக அமையும்.

**இணைக்கற்பித்தல்**

உட்படத்துகைக் கல்வி செயற்பாட்டில் ஆசிரியர் வகிபாகமானது கற்றல் கற்பித்தலோடு இணைந்தவகையில் இணைக்கற்பித்தலை மேற்கொள்ளல் என்ற வகையிலும் முக்கியத்துவம பெறுகின்றது. அதாவது இணைக்கற்பித்தலானது இருவேறுபட்ட வகுப்பறை அல்லது பாட ஆசிரியரகளுக்கு இடையில இடம்பெறுகின்றதாக உள்ளமையினால் அவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மற்றும் இணைந்து செயற்படும் தன்மை அவசியமாகும். இவ் இணைக்கற்பித்தல்முறையில் பிரச்சினைதீர்த்தல், ஒத்துழைப்படன் செயற்படல், நேரமகாமைத்தவம் அத்துடன் பொருத்தமான பிரதிபலிப்பு என்பனவறறை மேம்படத்திக்கொள்ள முடியும்.

**முடிவுரை**

உட்படுத்துகை வகுப்பறைச்செயறபாட்டில் ஆசிரியர் வகிபாகமானது விசேட தேவைகளுடைய மாணவர்களின் கல்விசார் செயற்பாடுகளை மேம்படுத்துவதுடன் அவர்களது பல்வேறுபட்ட பிரச்சினைகளை இனங்கண்டு நிவர்த்தி செய்யும் பொறிமுறையாகவும் காணப்படுகின்றது. ஆசிரியர் வகிபாகந்தனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு முன்னெடுப்புக்கள் உலகளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படுவதனை நாம் அறிந்தகொள்ளக்கூயதாகவுள்ளது.

**உசாத்துணைகள்**


Chintamanikar (2004), *Exceptional children*, Retrieved from https://books.google.lk/books?id=XBhD-abTFskC&pg=PR4&lpg=PR4&dq=Chintamanikar+(2004),+Exceptional+children,+Sterling+publishers+pvt,+New+Delhi+-

Dash. M (2000), *Education of exceptional children,* Atlantic publishers and distributors, B-2, vishal enclave, opp. Rajouri, Garden, New Delhi – 27

National Dissemination center for children with disabilities 2000, *Categories of Disability Under IDEA, Retrieved* from https://www.fhi360.org/resource/categories-disability-under-idea

OREGON Department of Education , *Early Intervention and Early Childhood Special Education and the Student Success Act* , Retrieved from https://www.oregon.gov/ODE/Pages/default.aspx

Piyasena. K (2005), *Sri Lanka towards Inclusive Education*, Retrieved from http://archives.dailynews.lk/2005/09/03/fea02.htm

The alliance for inclusive education 2019, *What is Inclusive Education* , Retrieved from https://www.allfie.org.uk/about-us/

The Committee for the national society for the study of education 2003, *Hand Book of Research on Social Studies Education*, Retrieved from https://books.google.lk/books?id=kaOPAgAAQBAJ&pg=PA32&lpg=PA32&dq=The+Committee+for+the+national+society+for+the+study+of+education+2003)&source=bl&ots=_oK385NCEA&sig=ACfU3U2iBVLcsViUsGOTnn_fjI4Gi-

UNESDOC Digital Library 1994 , *The salamanca statement and framework For action on special needs education world conference on Special needs education: access and quality.,* Retrieved from https://unesdoc.unesco.org/ark:/48223/pf0000098427